# மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

# திருநெல்வேலி

# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

# TIRUNELVELI

## தொலைநெறித் தொடர்கல்வி இயக்ககம்

## DIRECTORATE DISTANCE CONTINUING EDUCATION

## TIRUNELVELI

## தொல்காப்பியம் பொருளதிகாரம்

## (முன் 5 இயல்)

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**

**திருநெல்வேலி– 627 012.**

# தொல்காப்பியம் பொருளதிகாரம்

# (முன் 5 இயல்)

## Learning Objective:

- தமிழ்மொழியின் மரபினை அறிந்து கொள்ளல். புனையும் ஆற்றல் பெறுதல்.
- அணி நலம் அமைக்கும் திறன் பெற்றுக்கொள்ள அணியின் பகுப்பு முறை அறிதல்
- பிற மொழிகளில் எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமே இலக்கணங்கள் அமையப் பெற்றிருக்க தமிழில் வாழ்வியலுக்கும் இலக்கணத்தை வகுத்துள்ளமையை அறியச் செய்தல்.
- அகப்புற இலக்கணங்களை இலக்கியச் சான்றுகளுடன் கற்றல்.
- களவியல் - கற்பியல் - பொருளியல் இலக்கணங்களை இலக்கியச் சான்றுகளோடு வாழ்வியலுடன் ஒப்பிட்டுக் கற்றல்.

**அலகு - 1**

**அகத்திணை இயல்**

**அலகு - 2**

**புறத்திணை இயல்**

**அலகு - 3**

**களவியல்**

**அலகு - 4**

**கற்பியல்**

**அலகு - 5**

**பொருளியல்**

## தொல்காப்பியம் - பொருளதிகாரம்

தொல்காப்பியரின் தொல்காப்பியம் தமிழுக்குக் கிடைத்துள்ள முதல் நூல் என்பதனோடு மட்டுமல்லாமல் ஆய்வியல் நெறிமுறைக்கும் அடிப்படையான நூலாக அமைகின்றது. இந்நூல் மூன்று அதிகாரங்களாகவும் ஒவ்வொன்றிலும் ஒன்பது ஒன்பது இயல்காளகவும் விரிவடைகின்றது.

## தொல்காப்பியம்

| எழுத்ததிகாரம் | சொல்லதிகாரம் | பொருளதிகாரம் |
|---|---|---|
| 1. நூன்மரபு | 1. கிளவியாக்கம் | 1. அகத்திணையியல் |
| 2. மொழிமரபு | 2. வேற்றுமையியல் | 2. புறத்திணையியல் |
| 3. பிறப்பியல் | 3. வேற்றுமை மயங்கியல் | 3. களவியல் |
| 4. புணரியல் | 4. விளிமரபு | 4. கற்பியல் |
| 5. தொகை மரபு | 5. பெயரியல் | 5. பொருளியல் |
| 6. உருபியல் | 6. வினையியல் | 6. மெய்ப்பாட்டியல் |

| | | |
|---|---|---|
| 7. உயிர் மயங்கியல் | 7. இடையியல் | 7. உவமையியல் |
| 8. புள்ளி மயங்கியல் | 8. உரியியல் | 8. செய்யுளியல் |
| 9. குற்றியலுகரப் புணரியல் | 9. எச்சவியல் | 9. மரபியல |

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் காணப்படும் ஒன்பது இயல்களில் பெரும்பாலானவற்றில் அகவாழ்வு பற்றிய வரையறைகளே அதிகமாகக் காணப்படுகின்றன. அகம் பற்றி விளக்கும் இயல்களாக அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல் என்னும் ஐந்தும் காணப்படுகின்றன.

புறத்திணையியலில் போரிடும் முறைகளும் புகழின் வெளிப்பாடும் எனப் பலவகைப்பட்ட புறச்செய்திகள் விளக்கப்படுகின்றன.

## அலகு - 1

## அகத்திணையியல்

### உள்ளடக்கம்

- அகத்திணை ஏழு வகை
- நிலங்களுக்கு உரிய முதல், கரு, உரிப்பொருள்கள்
- முதற்பொருள் நிலம்-பொழுது
- திணை யில் மயக்கம்
- ஐந்திணைக்கும் உரிய உரிப்பொருள்கள்
- ஐந்திணைக்கும் உரிய கருப்பொருள்கள்

- திணைக்கு உரிய மக்கட் பெயர்கள்
- கைக்கிளை, பெருந்திணைக்கு உரியர்
- பிரிவு நிகழும் வகைகள்
- மடல் ஏறுதல்
- நற்றாய் வருந்திக் கூறுவது
- உடன்போக்கிற்குப் பிறகு தோழி கூறுவது
- கண்டோர் கூற்று
- பிரிவு தொடர்பாகத் தலைவன் கூறுவது
- பாலை பற்றிய குறிப்பு
- உவமை பற்றிய செய்திகள்
- கைக்கிளை என்பது
- பெருந்திணை என்பது
- அகப்பொருளில் இயற்பெயர் கூடாது

## அகத்திணையியல்

**அகத்திணை ஏழு வகை**

**1. கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**

**முற்படக் கிளந்த எழுதிணை என்ப**

கைக்கிளை முதலாகப் பெருந்திணை இறுதியாக உடைய ஏழும் அகத்திணைகளாகும்.

**அகத்திணை ஏழு**

1. கைக்கிளை
2. முல்லை
3. குறிஞ்சி
4. பாலை
5. மருதம்
6. நெய்தல்
7. பெருந்திணை

புறத்திணையிலும் ஏழு வகையானப் பாகுபாடுகள் காணப்படுகின்றன.

**புறத்திணை ஏழு**

1. வெட்சி
2. வஞ்சி
3. உழிஞை
4. தும்பை
5. வாகை

6. காஞ்சி

7. பாடாண் திணை

**ஏழுதிணைகளில் நான்குக்கு நிலம்**

**2. அவற்றுள்,**

**நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்**

**படுதிரை வையம் பாத்திய பண்பே.**

மேலே கூறப்பட்டுள்ள ஏழு அகத்திணைகளில் முதலிலுள்ள கைக்கிளையையும் இறுதியிலுள்ள பெருந்திணையையும் தவிர்த்து விடவேண்டும். எஞ்சிய ஐந்து திணைகளில் நடுவிலுள்ள பாலைத் திணை நீங்கலாக முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நான்கு அகத்திணைகளுக்கும் கடல் சூழ்ந்த இவ்வுலகத்தில் நிலப்பாகுபாடு அமையும். கைக்கிளைப் பெருந்திணைக்கும் நிலப்பாகுபாடு இல்லை. இவை அனைத்து நிலங்களுக்கும் பொதுவானவை ஆகும்.

பழந்தமிழகத்தில் பாலை நிலம் என்றொரு பாகுபாடு இல்லை. காடும் காடு சார்ந்த இடமும் ஆகிய முல்லை நிலமும் மலையும் செழிப்பு அழிந்து பாலை நிலமாகும். பாலை நிலம் என்பது முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் வறட்சியில் மாறி அமையும் என்பதை இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார். சிலப்பதிகாரத்தில் பின்வருமாறு

**“முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து**

**நல்லியல்பு அழிந்து நடுங்குதுயர் உறுத்துப்**

**பாலை என்பதோர் படிவம் கொள்ளும்”**

**(சிலப். 11: 64-66)**

அகத்திணை ஏழில் கைக்கிளையும் பெருந்திணையும் தமக்கென்று நிலம் இல்லாமல் பொதுவாக அமையும். பாலைத் திணைக்குத் தனி நிலம் இல்லாமல் முல்லையும் குறிஞ்சியும் உறழும்போது பாலை நிலமாக அமையும்.

முதல் இரண்டு நூற்பாக்கள் உரைகள் உணர்த்தும் அகப்பொருள் செய்திகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

| **அகத்திணைகள்-7** | | |
|---|---|---|
| **நிலம் உள்ளவை** | **பொதுவானவை** | **திரிந்து வருவது** |
| 1. முல்லை<br>2. குறிஞ்சி<br>3. மருதம்<br>4. நெய்தல் | 1. கைக்கிளை<br>2. பெருந்திணை | முல்லை → குறிஞ்சி →<br>1. பாலை |

**முதற்பொருள்**

**முதல், கரு, உரிப்பொருள்கள்**

**“முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே**

**நுவலும் காலை முறைசிறந் தனவே**

**பாடலுள் பயின்றவை நாடும் காலை.”**

சான்றோர்களின் பாடல்களில் காணப்படும் பொருளை ஆராய்ந்து பார்க்கும்போது அவை 1 முதற்பொருள் 2. கருப்பொருள், 3. உரிப்பொருள் என்னும் மூன்றும் விளக்கும் முறையால் சிறந்து விளங்கும்.

**முதல்எனப் படுவது நிலம்பொழுது இரண்டின்**

**இயல்புஎன மொழிப இயல்பு உணர்ந்தோரே.**

இந்த உலகத்தின் அமைப்பை நன்கு உணர்ந்த சான்றோர்கள் நிலம், பொழுது (காலம்) என்னும் இரண்டையும் முதற்பொருள் எனக் குறிப்பிடுகின்றார்கள்.

**முதற்பொருள் : பொழுது (காலம்)**

பொழுது எனப்படும் காலம் இருவகைப்படும். அவை பெரும் பொழுது, சிறுபொழுது என இருவகைப்படும். பெரும்பொழுது கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முது வேனில் என ஆறு வகைப்படும். பெரும்பொழுது ஓர் ஆண்டு ஆறு பிரிவுகளாகப் பகுக்கப்படும். ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு இரண்டு மாதங்கள் அடங்கும்.

சிறுபொழுது மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல், எற்பாடு என ஆறு வகைப்படும். ஒரு நாளின் அறுபது நாழிகையும் ஒவ்வொரு சிறுபொழுதுக்கும் பத்துப்பத்து நாழிகையாக வரும்.

**முதற்பொருள் நிலம்**

**மாயோன் மேய காடுறை உலகமும்**

**சேயோன் மேய மைவரை உலகமும்**

**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**

**வருணன் மேய பெருமணல் உலகமும்**

**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்எனச்**

**சொல்லிய முறையான் சொல்லவும் படுமே.**

மாயோனாகிய திருமால் வாழும் காடாகிய முல்லை நிலமும் சேயோனாகிய முருகன் வாழும் மலையாகிய குறிஞ்சி நிலமும் வேந்தனாகிய இந்திரன் வாழும் நன்னீர் நிறைந்த மருத நிலமும் வருணன் விரும்பி வாழும் பெருமணல் உலகமாகிய நெய்தல் நிலமும் என இவை முன்னோரால் முறையாக வகுக்கப்பட்ட நிலமாகும்.

| **நிலம்** | **தெய்வம்** |
|---|---|
| காடு - முல்லை | மாயோன் - திருமால் |
| மைவரை - குறிஞ்சி | சேயோன் - முருகன் |
| தீம்புனல் - மருதம் | வேந்தன் - இந்திரன் |
| பெருமணல் - நெய்தல் | வருணன் - மழைக்கடவுள் |

**முல்லைத்திணையின் பொழுதுகள்**

**6. காரும் மாலையும் முல்லை.**

பெரும் பொழுதாகிய கார்காலமும் (ஆவணி, புரட்டாசி) சிறு பொழுதாகிய மாலைக் காலமும் முல்லைத் திணைக்கு உரிய பொழுதுகளாகும்.

**குறிஞ்சித்திணையின் பொழுதுகள்**

**7. குறிஞ்சி**

**கூதிர் யாமம் என்மனார் புலவர்.**

பெரும் பொழுதாகிய குளிர்காலம் எனப்படும் கூதிர் காலமும் (ஐப்பசி, கார்த்திகை) சிறு பொழுதாகிய நடு இரவு எனப்படும் யாமமும் குறிஞ்சித் திணைக்கு உரிய பொழுதுகள் எனப் புலவர் குறிப்பர்.

**குறிஞ்சித் திணைக்கு மேலும் பெரும்பொழுது**

**8. பனி எதிர் பருவமும் உரித்து என மொழிப.**

குறிஞ்சித் திணைக்குக் கூதிர் காலத்தோடு முன்பனிக் - காலமும் (மார்கழி தை) பெரும் பொழுதாக அமையும் எனக் குறிப்பர்.

முன்பனிக்காலம் எனப் பெரும் பொழுது மட்டும் குறிக்கப் பட்டதால் சிறுபொழுது யாமமாகவே கொள்ளப்படும்.

**மருதத்திணையின் பொழுதுகள்**

**9. வைகறை விடியல் மருதம்**

சிறு பொழுதுகளாகிய விடிவதற்கு முன்னுள்ள வைகறையும் விடியலும் மருதத்திணைக்கு உரியவை ஆகும்.

பெரும்பொழுது குறிக்கப் பெறாமையால் ஆண்டு முழுவதும் மருதத் திணைக்குப் பெரும்பொழுதாகும்.

இளம்பூரணர் வைகறை விடியல் என்னும் தொடரை வைகறை, விடியல் என இரு சிறுபொழுதாகக் கொள்ளாமல் ஒரே பொழுதாகக் கொள்கின்றார்.

**நெய்தல் திணையின் பொழுது**

**10. எற்பாடு**

**நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும்.**

நண்பகலின் பின் பத்து நாழிகையும் நெய்தல் திணையின் சிறுபொழுதாகும்.

மருதத்திணையைப் போன்றே நெய்தல் திணைக்கும் பெரும் பொழுது குறிக்கப்படாமையால் ஆண்டு முழுவதும் பெரும் பொழுதாகக் கருதப்படும்.

**பாலைத் திணையின் பொழுதுகள்**

**11. நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு**

**முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே.**

அன்பின் ஐந்திணைகளில் நடுவண் திணையாகிய பாலைத் திணைக்குச் சிறுபொழுது நண்பகலாகும். பெரும்பொழுது வேனில் காலமாகும். வேனில் எனவே இளவேனிலும் (சித்திரை, வைகாசி) முதுவேனிலும் (ஆனி, ஆடி) என இரண்டு பெரும்பொழுதுகள் பாலைத் திணைக்கு உரியவை ஆகும்.

**பாலைத் திணைக்கு மேலும் பெரும்பொழுது**

**12. பின்பனி தானும் உரித்தென மொழிப.**

மேலே கூறப்பட்ட இளவேனில், முதுவேனில் காலங்களோடு பின்பனிக் காலமும் (மாசி, பங்குனி) பாலைத் திணைக்கு உரியது ஆகும்.

மேலே ஏழு (6-12) நூற்பாக்களில் விளக்கப்பட்டுள்ள திணைக்கு உரிய பெரும்பொழுதையும் சிறு பொழுதையும் பின்வருமாறு பட்டியலிடலாம்.

| திணை | பெரும்பொழுது | சிறுபொழுது |
|---|---|---|
| முல்லை | கார்காலப் (ஆவணி, புரட்டாசி) | மாலை (6.00-10.00) |
| குறிஞ்சி | கூதிர்காலம் (ஐப்பசி, கார்த்திகை) முன்பனி (மார்கழி, தை) | யாமம் ( 10.00-2.00) |
| மருதம் | ஆண்டு முழுவதும் | வைகறை ( 2.00-6.00 )<br>விடியல் ( 6.00-10.00) |
| நெய்தல் | ஆண்டு முழுவதும் | எற்பாடு<br>(பிற்பகல் 2.00-6.00 மாலை) |
| பாலை | இளவேனில் (சித்திரை, வைகாசி)<br>முதுவேனில் (ஆனி, ஆடி)<br>பின்பனி (மாசி, பங்குனி) | நண்பகல்<br>(முற்பகல் 10.00-2.00) |

**பாலைத்திணைக்கு இருவகைப் பிரிவுகள்**

**13. இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றினும்**

**உரிய தாகும் என்மனார் புலவர்.**

தலைவியைத் தலைவன் பிரிந்து செல்வதும் தலைவியைத் தலைவன் உடன்போக்கில் கொண்டு செல்லும்போது தமரைப் பிரிவதும் எனப் பாலைத் திணைப் பிரிவு இருவகைப்படும் எனப் புலவர் கூறுவர்.

**திணையில் மயக்கம்**

**14. திணைமயக் குறுதலும் கடிநிலை இலவே**

**நிலன்ஒருங்கு மயங்குதல் இல்லென மொழிப**

**புலன்நன்கு உணர்ந்த புலமை யோரே.**

ஒரு திணைக்கு உரிய முதற்பொருள் இன்னொரு திணையோடு மயங்கி வருவது கடியப் படுவதில்லை. முதற்பொருளாகிய நிலம் அவ்வாறு மயங்குவதில்லை எனப் புலமை உடையோர் குறிப்பார்.

முதற்பொருளில் ஒருதிணைக்கு உரிய நிலம் இன்னொரு திணையில் மயங்காது. எனவே, பொழுது (காலம்) மயங்கி வரும் என்பது பெறப்படுகின்றது.

**முதற்பொருள், கருப்பொருள் மயங்குதல்**

**15. உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே.**

ஒரு திணைக்கு உரிய உரிப்பொருள் இன்னொரு திணையில் மயங்கி வருவதில்லை. ஆனால் ஒரு திணைக்கு உரிய கருப்பொருளும் முதற்பொருளும் (பொழுது) இன்னொரு திணையிலும் சிறிய அளவில் மயங்கி வரலாம்.

உரிப்பொருள் பெற்றுள்ளவை குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்னும் ஐந்து திணைகளாகும். உரிப்பொருள் இல்லாத கைக்கிளையும் பெருந்திணையும் மற்றைய திணைகளில் மயங்கி வரும் என நச்சினார்க்கினியர் குறிப்பிடுகின்றார்.

**ஐந்திணைக்கும் உரிய உரிப்பொருள்**

உரிப்பொருள் என்பது ஐந்திணைகளுக்கும் உரிய தலைவன், தலைவியின் உறவு நிலையில் உள்ள ஒழுக்கங்களை விளக்குவதாகும். இவற்றின் அடிப்படையிலும் திணைப்பாகுபாடு பகுக்கப்பட்டுள்ளது. முதற்பொருளில் காலம் என்பதும் கருப்பொருளும் கூட ஒரு திணையிலிருந்து மற்றொரு திணைக்கு மயங்கலாம். ஆனால் உரிப்பொருள் மயங்குவதில்லை. ஐந்திணைக்கும் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்பவை உரிப்பொருள்கள் ஆகும். எல்லாத் திணைக்கும் பொதுவான கைக்கிளை, பெருந்திணைக்கு உரிப்பொருள் இல்லை என நச்சினார்க்கினியர் குறிப்பிடுகின்றார்.

**16.** **புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்**
**ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை**
**தேரும் காலைத் திணைக்கு உரிப்பொருளே.**

தலைவனும் தலைவியும் புணர்தல், பிரிதல், பிரிந்த தலைவனுக்காக வருந்திக் காத்திருத்தல், பிரிவுக்காக வருந்தி இருத்தல், தலைவன் திரும்பி வந்ததும் ஊடுதல் என்பவையும். இவற்றின் காரணங்களும் ஐந்திணைகளுக்கும் உரிய உரிப்பொருள் ஆகும்.

| **திணை** | **உரிப்பொருள்** |
|---|---|
| குறிஞ்சி | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| பாலை | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |

| | |
|---|---|
| முல்லை | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| நெய்தல் | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |
| மருதம் | ஊடலும் ஊடல் நிமித்தமும் |

அகப்பாடல்களில் முதல், கரு, உரிப் பொருள்கள் வழியாக அவை எந்தத் திணையைச் சார்ந்தவை என்பதைக் கண்டறியலாம். இன்ன திணையைச் சார்ந்த பாடல் என்பதை அறிய இளம்பூரணர் மூன்று வழி காட்டுகின்றார்.

1. முதல், கரு, உரிப் பொருள் மூன்றும் வரின் நில அடிப்படையில் எந்தத் திணை என்பதை அறிய வேண்டும்.

2. கருப்பொருள். உரிப்பொருள் மட்டும் வந்தால் கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு திணை அறியவேண்டும்.

3. உரிப்பொருள் மட்டும் வந்தால் அதனைக் கொண்டு எந்தத் திணை என்பதை அறிய வேண்டும்.

எனவே ஒவ்வொரு அகப்பாடலிலும் திணையே அடிப்படையாகும். முதல், கரு, உரிப் பொருளைக் கொண்டு திணையை அறிய வேண்டும். இவ்வகையான நெறிமுறை தமிழைத் தவிர உலகில் வேறு எந்த மொழியிலும் இல்லை என அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

| **திணை அறிதல்** | | |
|---|---|---|
| பொருள் | பெருவழக்கு | சிறுவழக்கு |
| முதற்பொருள் | ✓ | ✓ |
| கருப்பொருள் | ✓ | |

| | | |
|---|---|---|
| உரிப்பொருள் | | |

**பாலைத் திணையின் பிரிதல் வகை**

**17. கொண்டுதலைக் கழிதலும் பிரிந்தவண் இரங்கலும்**

**உண்டுஎன மொழிப ஓரிடத் தான.**

களவு வாழ்க்கையில் தலைவன், தலைவியை அவள் தமரை விட்டுப் பிரித்து உடன் கொண்டு பாலை நிலத்தில் போவதும் போகும் வழியில் பிரிந்து வருவதை எண்ணி வருந்தி இரங்கலும் சில வேளைகளில் நிகழும்.

**18. கலந்த பொழுதும் காட்சியும் அன்ன.**

தலைவன், தலைவி இருவரும் இயற்கைப் புணர்ச்சி நிகழ்த்திய பின்னரும் முதன்முதலாகத் தலைவியைக் கண்டபோதும் ஏற்பட்ட அவளது உள்ள உணர்வுகளை இப்போதும் தலைவன் எண்ணிப் பார்ப்பதாகும்.

**முதற்பொருளின் வகைகள்**

**19. முதல்எனப் படுவது ஆயிரு வகைத்தே.**

திணைக்கு உரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்னும் முப்பொருளில் முதற்பொருள் நிலமும் பெரும்பொழுது, சிறுபொழுது என்னும் காலமும் ஆகும்.

**ஐந்திணைக்கு உரிய கருப்பொருள்**

முதற்பொருள்களாகிய ஐவகை நிலங்கள், பெரும்பொழுது. சிறுபொழுது என்னும் காலம் இவற்றைச் சார்ந்து வாழும் உயிரினங்கள், இருக்கும் பொருள்கள், பயன்படும் பொருள்கள் என அனைத்தும் கருப்பொருள் எனப்படும்.

**20. தெய்வம் உணாவே மாமரம் புள்பறை**

**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**

**அவ்வகை பிறவும் கருவென மொழிப.**

தெய்வம், உணவு, விலங்கினங்கள், மரம் போன்ற தாவரங்கள். பறவைகள், பறைபோன்ற இசைக் கருவிகள், செய்யும் தொழில், இசை எனப்படும் பண் போன்றவை என உலகிலுள்ள அனைத்தும் கருப்பொருள் ஆகும்.

முதற்பொருளாகிய நிலத்தையும் காலத்தையும் ஒட்டி முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலத்தும் தோன்றுவது கருப்பொருள் என நச்சினார்க்கினியர் குறிப்பிடுவார்.

ஐவகை நிலங்களுக்கும் வெவ்வேறு கருப்பொருள்கள் இருக்கின்றன. உரையாசிரியர்கள் குறிப்பிடும் அவற்றைப் பின்வரும் பட்டியலில் காணலாம்.

| **கருப்பொருள்** | **நிலம்** | | | | |
|---|---|---|---|---|---|
| | முல்லை | குறிஞ்சி | பாலை | மருதம் | நெய்தல் |
| தெய்வம் | திருமால் | முருகன் | கொற்றவை | இந்திரன் | வருணன் |
| உணவு | வரகு<br>முதிரை | தினை<br>ஐவனம்<br>நெல் | வழிப்பறியால்<br>வரும்<br>பொருள் | நெல் | மீன் |
| விலங்கு | மான் முயல் | யானை,<br>புலி, பன்றி | செந்நாய் | எருமை<br>நீர்நாய் | சுறா |
| மரம் | கொன்றை | வேங்கை | பாலை | மருதம் | புன்னை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | குருந்தம் | கோங்கு | கள்ளி, சூரை | | |
| பறவை | கானங்கோழி | மயில் கிளி | எருவை பருந்து | அன்னம் அன்றில் | கடற்காகம் |
| பறை | ஏறுகோட்பறை | தொண்டகப் பறை | ஆறலைப் பறை | நெல்லரிப் பறை | நாவாய்ப் பறை |
| செய்தி (தொழில்) | ஆநிரை மேய்த்தல் | வேட்டை | வழிப்பறி | உழவு | மீன் பிடித்தல் |
| யாழ் (பண்) | சாதாரி | குறிஞ்சி | பாலை | மருதம் | செவ்வழி |
| பூ | முல்லைப் பூ | குறிஞ்சிப் பூ | மராம் பூ | தாமரை கழுநீர் | நெய்தல் பூ |
| நீர் | ஆற்றுநீர் | அருவி சுனை | கூவல் சுனை | ஆற்று நீர் பொய்கை | கடல் கிணறு |

**கருப்பொருள் மயங்கி வருதல்**

**21.** **எந்நில மருங்கின் பூவும் புள்ளும்**

**அந்நிலம் பொழுதொடு வாரா ஆயினும்**

**வந்த நிலத்தின் பயத்த ஆகும்.**

ஒரு நிலத்திற்கு உரிய பூக்கள், பறவைகள் போன்ற கருப்பொருள்கள் அந்த நிலத்திற்கும் காலத்திற்கும் மட்டுமல்லாமல் பிறிதொரு நிலத்தில் காணப்பட்டாலும் காணப்படும் நிலத்தின் கருப்பொருளாகவே கருதப்படும்.

**திணைக்கு உரிய மக்கள் பெயர்கள்**

**22. பெயரும் வினையும்என்று ஆயிரு வகைய**

**திணைதொறும் மரீஇய திணைநிலைப் பெயரே.**

ஒவ்வொரு திணையிலும் வாழ்கின்ற மக்களின் பெயர் அவர்கள் வாழும் நில அடிப்படையிலும் செய்யும் தொழில் அடிப்படையிலும் என இரு நிலையில் பொருந்தி வரும்.

**முல்லை நிலத்தில் முதன்மைப் பெயர்கள்**

**23. ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்**

**ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே.**

முல்லைத் திணையில் மேய்த்தல் தொழிலில் ஈடுபடும் ஆடவர் ஆயர் என்றும் வேட்டையாடுபவர் வேட்டுவர் என்றும் குறிக்கப்படுவர். ஆட்சிப் பொறுப்புக்கு உரியவரும் இருப்பர்.

**முல்லை அல்லாப் பிறதிணைப் பெயர்கள்**

**24. ஏனோர் பாங்கினும் எண்ணும் காலை**

**ஆனா வகைய திணைநிலைப் பெயரே.**

முல்லை நிலத்தில் காணப்படும் திணை நிலப் பெயரைப் போன்றே குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் முதலிய திணைநிலைப் பெயர்களும் அந்தந்த நிலம் சார்ந்தே அமையும்.

இளம்பூரணரின் உரைவழி முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் திணைகளுக்கு உரிய நிலம் சார்ந்த திணைப் பெயர்களைப் பின்வருமாறு பட்டியல் இடலாம்.

| **மக்கட்பெயர்** | | | |
|---|---|---|---|
| **திணை** | **ஆண்** | **பெண்** | **தலைமை மக்கள்** |
| முல்லை | ஆயர்<br>வேட்டுவர் | ஆய்ச்சியர்<br>வேட்டுவித்தியர் | குறும்பொறை நாடன் |
| குறிஞ்சி | குறவர்<br>கானவர் | குறத்தியர்<br>கானத்தியர் | சிலம்பன், பொருப்பன், வெற்பன் |
| பாலை | எயினர் மறவர் | எயிற்றியர்<br>மறத்தியர் | காளை, மீளி, விடலை |
| மருதம் | உழவர் களமர் | உழத்தியர்<br>களத்தியர் | ஊரன், மகிழ்நன் |
| நெய்தல் | நுளையர்<br>பரதவர் | நுளைச்சியர்<br>பரத்தியர் | கொண்கன், சேர்ப்பன், துறைவன் |

**கைக்கிளை, பெருந்திணைக்கு உரியர் (25,26)**

**25. அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்**

| | | |
|---|---|---|
| ஒருதலைக்காமம் | கைக்கிளை | 1 |
| ஒத்த காமம் | குறிஞ்சி, முல்லை | 5 |

**கடிவரை**

**இலபுறத்து என்மனார் புலவர்.**

பிறரிடம் அடிமைத் தொழில் செய்வோரும் பிறர் ஏவிய தொழிலைச் செய்வோரும் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்னும் ஐந்திணை ஒழுக்கத்திற்கு உரியவர் ஆகார். கைக்கிளை, பெருந்திணைக்கு உரியவராகவே கருதப்படுவர். (25)

**26. ஏவல் மரபின் ஏனோரும் உரியர்**

**ஆகிய நிலைமை அவரும் அன்னர்.**

அடிமைத் தொழில் செய்வோர்,ஏவல் தொழில் புரிவோர் மட்டுமல்லாமல் பிறரை ஏவும் வலிமை படைத்தோரும் அக ஒழுக்கங்களிலும் அறம், பொருள், இன்பம் போன்றவற்றில் விருப்பம் உடையோராக இருப்போரும் கைக்கிளை. பெருந்திணைக்கு உரியவராகவே கருதப்படுவர்.

ஏழுவகையான அகத்திணையின் காதல் நிலைகளையும் தொல்காப்பியர்வழி ஆய்வாளர்கள் பின்வருமாறு விளக்குவர்.

| | | |
|---|---|---|
| | மருதம், நெய்தல் | |
| ஒவ்வாக் காமம் | பெருந்திணை | 1 |

தொல்காப்பியர் குறிப்பிடும் ஏழு திணைகளையும் நாற்கவிராச நம்பி.

**கைக்கிளை உடையது ஒருதலைக் காமம்**

**ஐந்திணை உடைடது அன்புடைக் காம்**

**பெருந்திணை உடையது பொருந்தாக்காமம்**

**(அகப். விள. 3,4,5)**

என மூன்றாகப் பகுத்துக் கூறுகின்றார்.

**பிரிவு ஒழுக்கத்தின் வகைகள்**

அக வாழ்க்கையில் தலைவன் தலைவியைப் பிரிதல் என்பது பல்வேறு நிலையில் நிகழ்கின்றது. அவை அனைத்தையும் தொல்காப்பியர் பதினொரு (27-37) நூற்பாக்களில் தொகுத்து விளக்குகின்றார்.

**பிரிவு நிகழும் வகைகள்**

**27. ஓதல் பகையே தூதுஇவை பிரிவே.**

பொதுவாகப் பிரிவு என்பது கற்றலின் பொருட்டும் பகையின் பொருட்டும் தூதின் பொருட்டும் என மூன்று நிலைகளில் அமையும்.

**ஓதல், தூதுப் பிரிவு**

**28. அவற்றுள்**

**ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன.**

மேலே குறிக்கப்பட்ட மூன்று வகைப் பிரிவுகளில் கற்பதற்காகவும் தூதிற்காகவும் ஏற்படும் பிரிவு, சமுதாயத்தில் உயர்ந்தோராக மதிக்கத் தக்கவர்களிடம் நிகழ்பவை ஆகும்.

**பகையின் பொருட்டுப் பிரிவு**

**29. தானே சேறலும் தன்னொடு சிவணிய**

**ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே .**

வேந்தன் போரின் பொருட்டுத் தானே பிரிந்து செல்வதும் வேந்தனுடன் ஏனைய வீரர்கள் பிரிந்து செல்வதும் எனப் பகைக்கான பிரிவு இருநிலையில் அமையும்.

**வழிபாடு முதலியவற்றுக்குப் பிரிவு**

**30. மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய**

**முல்லை முதலாச் சொல்லிய முறையான்**

**பிழைத்தது பிழையாது ஆகல் வேண்டியும்**

**இழைத்த ஒண்பொருள் முடியும் பிரிவே.**

கற்றல், பகை, தூது என்னும் முவ்வகைப் பிரிவுகள் அல்லாமல் வேறு வகையிலும் பிரிவு அமையும். தெய்வ வழிபாட்டின் காரணமாகவும் பிரிவு நிகழும்.

முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்னும் நிலம் சார்ந்த மக்களின் அறநெறி பொருட்டாகவும் பிரிவு நிகழும். மேலும் பொருள் ஈட்டும் பொருட்டாகவும் தலைவனுக்குப் பிரிவு நிகழும்.

**நால்வருக்கும் உரிய பிரிவு**

**31. மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே.**

தெய்வ வழிபாட்டிற்காகப் பிரியும் பிரிவு என்பது அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நான்கு வகையினர்க்கும் உரித்தாகும்.

**மன்னருக்கு உறுதுணை**

**32. மன்னர் பாங்கின் பின்னோர் ஆகுப.**

நாட்டைப் பாதுகாக்கும் மன்னர்க்கு உறுதுணையாக இருந்து உதவி செய்யக் கூடியவர்கள் பின்னோர் எனப்படும் வணிகரும் வேளாளரும் ஆவார்கள். அவர்களும் பிரிவுக்கு உரியவர்கள்.

**வணிகருக்குக் கல்வி**

**33. உயர்ந்தோர்க்கு உரிய ஒத்தி னான.**

பின்னோராகக் குறிக்கப்படும் வணிகர், வேளாளர்களில் உயர்ந்தோராகிய வணிகர்க்குக் கல்வி கற்பதற்கான பிரிவு உரியதாகும்.

**வேந்தருக்குக் கடமை செய்வோர்**

**34. வேந்துவினை இயற்கை வேந்தனின் ஒரீஇய**

**ஏனோர் மருங்கினும் எய்திடன் உடைத்தே.**

நாட்டைக் காப்பதற்கான கடமையில் வேந்தனைத் தவிர்த்துத் தூது போதல் போன்றவற்றைச் செய்வதற்கு உரியோர் வணிகரும் வேளாளரும் ஆவர்.

**பொருள் ஈட்டும் பிரிவு (35,36)**

**35. பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே.**

பொருள் தேடுவதற்காக ஏற்படும் பிரிவு என்பது வணிகர், வேளாளர் ஆகியோருக்கு உரியதாகும்.

**36. உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத்து ஆன.**

நால்வகைப் பிரிவினரில் அந்தணர் பொருள் தேடுவதற்குப் பிரியும் போது அவர்களின் ஒழுகலாறுகளைத் தவிர்க்கக் கூடாது.

பிரிவையும் அப்பிரிவுக்கு உரியோரையும் நச்சினார்க்கினியர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

ஓதலும் தூதும் அரசர், அந்தணர், வணிகர், உழுவித்து உண்ணும் வேளாளர், குறுநில மன்னர் ஆகியோர்க்கு உரியன. பகைவரால் துன்புறுத்தப்பட்ட நாட்டை மீட்டுப் பாதுகாத்தல் ஆகிய காவற் பிரிவு அரசர், குறுநில மன்னர் உழுவித்து உண்ணும் வேளாளர் ஆகியோருக்கு உரித்து.

பரத்தையின் பிரிவு அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்ற நால்வர்க்கும் உரித்து.

**மகளிருக்குப் பிரிவு**

**37. முந்நீர் வழக்கம் மகடூஉவொடு இல்லை.**

மழைநீர், ஆற்றுநீர், ஊற்று நீர் என முந்நீர் வழி உருவாகிய கடலைக் கடந்து தலைவனோடு செல்லும் வழக்கம் தலைவிக்கு இல்லை.

கடல் கடந்து போதல் தலைவிக்கு இல்லை என்றாலும் நிலத்து வழித் தலைவனோடு உடன் போதல் வழக்கமாகும் என உரையாசிரியர் குறிப்பர்.

**மடல் ஏறுதல்**

**38. எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்**

**பொற்புடை நெறிமை இன்மை யான.**

தலைவனுடன் கொண்டுள்ள காதலுக்கு எவ்வளவு இடர்ப்பாடுகள் வந்தாலும் தலைவி மடல் ஏறுதல் சிறந்த நெறியாகக் கருதப்படுவதில்லை.

திருவள்ளுவரும் கூட மகளிர் மடல் ஏறுதல் இல்லை என்பதைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**கடல்அன்ன காமம் உழந்தும் மடல்ஏறாப்**

**பெண்ணின் பெருந்தக்கது இல்.**

**(திருக் 1137)**

**பிரிவின் நிலை**

தலைவி தன் இல்லத்தில் உள்ளோரைப் பிரிந்து தலைவனுடன் செல்லும்போது பலரின் மனநிலை எவ்வாறு இருக்கும் என்பதை ஏழு (39-45) நூற்பாக்களில் தொல்காப்பியர் விளக்குகின்றார்.

தலைவி, தலைவனுடன் உடன் போகியபோது நற்றாய், செவிலித்தாய், கண்டோர், தோழி, தலைவன் முதலானோர் கூற்றுகள் பின்வரும் நூற்பாக்களில் விளக்கப்பட்டுள்ளன.

**நற்றாய் வருந்திக் கூறுவது (39,40)**

**39.** **தன்னும் அவனும் அவளும் சுட்டி**

**மன்னும் நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்**

**நன்மை தீமை அச்சம் சார்தல்என்று**

**அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ**

**முன்னிய காலம் மூன்றொடு விளக்கித்**

**தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும்**

**போகிய திறத்து நற்றாய் புலம்பலும்**

**ஆகிய கிளவியும் அவ்வழி உரிய.**

தன்னையும் உடன்போக்குச் சென்ற தலைவனையும் தலைவியையும் பற்றி நற்றாய் பேசுவாள் அவர்களைப் பற்றிய செய்தி அறிய சகுனம் பார்த்தல், நற்சொல் கேட்டல், குறிபார்த்தல் போன்ற காரியங்களில் ஈடுபடுவாள் மற்றவர்கள் பேசிக் கொள்வதில் வரும் சொற்களைத் தன்வாய்ச் சொல்லாக எண்ணி அவற்றின்வழி நன்மை தீமைகளை ஆராய்வாள். தலைவி தன் இல்லத்தில் வாழ்ந்த வாழ்க்கையையும் உடன்போக்கில் அவள் அடையும் இன்னல்களையும் இனி அவளுக்கு அமையப் போகும் வாழ்க்கையும் என எல்லாவற்றையும் எண்ணித் தோழியிடமும் தேடிப் போகும் வழியில் காண்போரிடமும் புலம்புவாள்.

பொய்யான வாக்குறுதிகளைக் கூறிய வஞ்சினம் மிக்க இளைஞனோடு தன் விருப்பப்படி, இவ்வூரில் பழிச்சொல் பரவ மலைகள் பல கடந்து சென்ற என் மகள் என்னை நினைத்துப் பார்த்திருப்பாளோ? என நற்றாய் புலம்பும் பாடல் ஐங்குறுநூற்றில் இடம் பெற்றுள்ளது.

**என்னும் உள்ளினள் கொல்லோ-தன்னை**

**நெஞ்சு உணத் தேற்றிய வஞ்சினக் காளையொடு**

**அழுங்கல் மூதூர் அலர் எழச்**

**செழும் பல் குன்றம் இறந்த என் மகளே? (ஐங்.372)**

40. **ஏமப் பேரூர்ச் சேரியும் சுரத்தும்**

**தாமே செல்லும் தாயரும் உளரே.**

பாதுகாப்பு மிக்க பேரூரின் சேரி இடத்தும் பாலை நிலத்திலும் தலைவனுடன் உடன்போகிய தலைவியைத் தாயர் தேடிச் செல்வார்கள்.

தாயர் எனப் பலர்பாலில் சொன்னமையால் சேரியின் பக்கம் நற்றாயும் பாலை நிலத்துப் செவிலித் தாயும் தேடிச் செல்வர் என நச்சினார்க்கினியர் குறிப்பிடுகின்றார்.

**இல்லம் விட்டுச் சென்றால் பிரிவே**

41. **அயலோர் ஆயினும் அகற்சி மேற்றே.**

தம் இல்லத்தை விட்டு நீங்கி அயல் இடத்திற்குச் சென்று விட்டாலே அது பாலைத் திணைக்கு உரிய பிரிவாகக் கருதப்படும்.

**உடன்போக்கிற்குப் பிறகு தோழி கூறுவது**

42. **தலைவரும் விழும நிலைஎடுத்து உரைப்பினும்**

**போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்**

**நீக்கலின் வந்த தம்உறு விழுமமும்**

**வாய்மையும் பொய்ம்மையும் கண்டோர்ச் சுட்டித்**

**தாய்நிலை நோக்கித் தலைப் பெயர்த்துக் கொளினும்**

**நோய்மிகப் பெருகித்தன் நெஞ்சு கலுழ்ந்தோளை**

**அழிந்தது கழீஇய ஒழிந்தது கூறி**

**வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தொடு**

**என்றிவை எல்லாம் இயல்புற நாடின்**

**ஒன்றித் தோன்றும் தோழி மேன.**

தலைவியின் உயிராக விளங்கும் தோழி அவளைப்பற்றி எல்லாவற்றையும் அறிந்திருப்பவள். தலைவனுடன் அவள் உடன்போக்குச் சென்ற பிறகு தோழியின் மொழி உண்மை நிலையை வெளிப்படுத்தும்.

தலைவன் தலைவியை விட்டுப் பிரியும்போது நிகழும் இன்னல்களை எடுத்துக் கூறுவாள். இருவரும் உடன்போக இசைவு கொடுப்பாள். உடன்போக்கினால் வரும் இடர்களை எடுத்துக் கூறுவாள். தலைவனும் தலைவியும் உடன்போக்குச் சென்றால் குடும்பத்தில் உள்ளவர்கள் அடையும் வருத்தங்களை எடுத்துக் கூறுவாள்.

உண்மையும் பொய்மையும் அறிந்தோரின் கூற்றைக் கேட்டு ஆராய்ந்து இல்லத்தவர் தலைவியைத் தேடிப் போவதைத் தடுப்பாள். அவர்களைத் திரும்ப அடைய வழி கூறுவாள். மகளைப் பிரிந்து வருந்தும் தாயை வருந்தாது இருக்க ஆற்றுப்படுத்துவாள்.

இவ்வாறு தலைவன், தலைவி இல்லத்தில் உள்ளோர் என அனைவருக்கும் தோழியின் பேச்சு ஆறுதல் தந்து அனைவரையும் அரவணைக்கும் வகையில் இருக்கும்.

எவ்வளவுதான் வளத்தோடு தாய் வீட்டில் வளர்ந்தாலும் தலைவனுடன் உறவு கொண்டபின் அவனைத் தவிர அவளுக்கு வேறு எதுவும் பெரியதில்லை. தலைவி தலைவனை நினைந்து வருந்தும்போது உடன்போக இசைவு தருவாள்.

பழந்தமிழ் இலக்கியங்களில் தோழி தலைவிக்குத் தோன்றாத் துணையாக இருந்து உதவுகின்றாள். இன்பம்கிட்டும் போது தலைவியுடன் சேர்ந்து மகிழ்வாள துன்பம் வருத்தும் போது வருந்தினாலும் தலைவிக்காக எதையும் செய்யத் தயங்க மாட்டாள். தோழியின் கூற்றுகளாக 785 பாடல்கள் வருவதாக ஆஇராம கிருட்டிணன் கூறுவார்.

களவு, கற்பு ஒழுக்கங்களின் படிகளை உருவாக்கி அவற்றில் செம்மாந்த நடை போடும் அகத்திணைப் படைப்பாகத் தோழி விளங்குகிறாள். (அகத்திணை மாந்தர், ப.39)

**கண்டோர் கூறுவது**

கண்டோர் எனப்படுவர், உடன்போக்குச் செல்லும் தலைவன், தலைவிக்கு அவர்கள் செல்லக் கூடிய இடத்தின் தொலைவையும் வழியையும் ஏற்படும் இன்னல்களையும் எடுத்துக் கூறுவர்.

43. **பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி**

**வழுவின் ஆகிய குற்றம் காட்டலும்**

**ஊரது சார்வும் செல்லும் தேயமும்**

**ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும்**

**புணர்ந்தோர் பாங்கின் புணர்ந்த நெஞ்சமொடு**

**அழிந்து எதிர்கூறி விடுப்பினும் ஆங்குஅத்**

**தாய்நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும்**

**சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும்**

**கண்டோர் மொழிதல் கண்டது என்ப.**

அருகருகே இருக்கும் ஊர்களைப் பற்றியும் அடுத்தடுத்துள்ள நாடுகளைப் பற்றியும் அவற்றுக்கான வழியைப் பற்றியும் மகிழ்ச்சியோடு சேர்ந்தும் சோர்ந்தும் வரும் தலைவன், தலைவிக்குக் கூறுவர்.

தலைவனுடன் சென்ற தலைவியைத் தேடி வரும் தாயின் நிலைக்கு இரங்கி ஆறுதல் கூறி, அவளைத் தேடிச் செல்ல வேண்டாம் எனத் தடுப்பர். தலைவன், தலைவி நீண்ட தொலைவு சென்றுவிட்டதைக் கூறி அவளைத் திருப்பி அனுப்புவர். உடன்போக்குச் சென்றவர்கள் மீண்டும் திரும்பி வரும்போது நலம் விசாரிப்பர்.

இவை எல்லாம் உடன்போக்குச் சென்ற தலைவன், தலைவி பற்றி வழியில் கண்டோரின் செயற்பாடுகளாக அமையும்.”

உடன்போக்குச் சென்றோரைத் தேடிச் செல்லும் செவிலித் தாய் வழியில் முக்கொல் தாங்கிய அந்தணர் (கண்டோர்) சிலர் எதிரில் வருவதைப் பார்க்கிறாள். அடையாளம் சொல்லிக் கேட்கின்றாள். அவர்கள் தலைவன், தலைவியைக் கண்டதாகக் கூறிச் செவிலித்தாயை ஆற்றுப்படுத்துகின்றனர். சந்தனம், முத்து, இசை போன்றவற்றால் பிறக்கும் இடத்திற்குப் பெருமை இல்லை எனவும் தலைவி தலைவனுக்கே உரியவள் என்றும் கூறுகின்றனர்.

பிரிவு தொடர்பாகத் தலைவன் கூறுவது

44. ஒன்றாத் தமரினும் பருவத்தும் சுரத்தும்
ஒன்றிய தோழியொடு வலிப்பினும் விடுப்பினும்
இடைச்சுர மருங்கின் அவள்தமர் எய்திக்
கடைக்கொண்டு பெயர்த்தலின் கலங்கு அஞர் எய்திக்
கற்பொடு புணர்ந்த கௌவை உளப்பட

அப்பால் பட்ட ஒரு திறத்தானும்
நாளது சின்மையும் இளமையது அருமையும்
தாளாண் பக்கமும் தகுதியது அமைதியும்
இன்மையது இளிவும் உடைமையது உயர்ச்சியும்
அன்பினது அகலமும் அகற்சியது அருமையும்

ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்
வாயினும் கையினும் வகுத்த பக்கமோடு
ஊதியம் கருதிப ஒருதிறத் தானும்
புகழும் மானமும் எடுத்து வற்புறுத்தலும்
தூதிடை இட்ட வகையி னானும்

**ஆகித் தோன்றும் பாங்கோர் பாங்கினும்**

**மூன்றன் பகுதியும் மண்டிலத்து அருமையும்**

**தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்**

**பாசறைப் புலம்பலும் முடிந்த காலத்துப்**

**பாகனொடு விரும்பிய வினைத்திற வகையினும்**

**காவற் பாங்கின் ஆங்கோர் பக்கமும்**

**பரத்தையின் அகற்சியின் பரிந்தோள் குறுகி**

**இரத்தலும் தெளித்தலும் எனஇரு வகையொடு**

**உரைத்திற நாட்டம் கிழவோன் மேன.**

தலைவன் தலைவியை மணந்து கொள்ளத் தலைவியின் இல்லத்தோர் உடன்படாத போதும் அவர்கள் உடன்படாதபோது தலைவியைத் தன்னுடன் உடன்போக்கில் அழைத்துச் செல்லும் பாலை நிலத்தின் கண்ணும் தலைவியை விட்டுப் பிரியும் போதும் உடன்போக்கின்போது தமர் வந்து தலைவியை உடன்கொண்டு செல்லும் போதும் தலைவனின் கூற்று நிகழும்.

யாக்கை நிலையில்லாதது, இளமை நிலையில்லாதது என்பவற்றை எண்ணாதபோதும் முயற்சியால் வரும் இன்பம் உயர்ந்தது, பொருள் பேராசையைத் தூண்டும் என்பவற்றை எண்ணாத போதும் தலைவன் கூற்று நிகழும். பொருள் இன்மையால் வரும் கேடுகளை நினைத்துப் பார்க்கும் போதும் பொருள் உடையவரிடம் இல்லாத குணத்தை நினைக்கும்போதும் தலைவன் கூற்று நிகழும், அன்பின் அருமை

குறித்து எண்ணும் போதும் செல்வத்தைப் பெரிதாக எண்ணும்போதும் தலைவன் கூற்று நிகழும்.

கல்வியின் பொருட்டாகப் பிரியும்போதும் படைப்பயிற்சி, கலைகள் போன்றவற்றைப் பயிலும்போதும் தலைவன் கூற்று நிகழும் நாடு காப்பது போன்ற செயல்களுக்காகப் பிரியும் போதும் அவற்றின் பொருட்டு ஏற்படும் புகழும் பிரியாமல் இருந்தால் ஏற்படும் இழுக்கு பற்றி வருந்தும் போதும் தலைவன் கூற்று நிகழும். இவ்வாறு பிரியும்போது தலைவியை ஆற்றி இருக்கக் கூறும்போதும் தலைவன் கூற்று நிகழும்.

வேந்தன் பொருட்டாகத் தூது செல்லும்போது வினையின் ஆற்றல், தன் ஆற்றல், பகைவர் ஆற்றல் போன்றவற்றை ஆராயும்போதும் தலைவன் கூற்று நிகழும். பாசறையின் தனிமையைப் பேசும் போதும் செய்யச் சென்ற வினையின் தன்மையை எடுத்துக் கூறும்போதும் தலைவன் கூற்று நிகழும்.

கொடிய விலங்குகளை வேட்டையாடி நாட்டைக் காத்த போதும் இறைவழிபாடு, புனல் விளையாட்டின் போதும் தலைவனின் கூற்று நிகழும். பிரிவுக்குப்பின் தலைவியிடம் வந்து இரந்து நிற்கும் போதும் அவளுக்குத் தெளிவை உண்டாக்கும் பொருட்டும் தலைவன் கூற்று நிகழும்.

தலைவன் பேசும் இடங்களின் தன்மை விரிவானதாக அமைகின்றது. அகவாழ்க்கையில் களவு, கற்புக் காலத்திலும் நாட்டிற்காகத் தூது சொல்லும் காலத்திலும் நாடுகாக்கும் காலத்திலும் எனத் தலைவன் கூற்று பரந்துபட்டு அமையும்.

**மற்றையோரின் கூற்று**

**45. எஞ்சி யோர்க்கும் எஞ்சுதல் இலவே.**

நற்றாய், செவிலித்தாய், கண்டோர், தோழி, தலைவன் ஆகியோருக்குக் கூற்று நிகழும் இடங்கள் இருப்பதைப் போன்று தலைவி. பாங்கன், பார்ப்பார், பாணர், கூத்தர் இடங்கள் நிகழும் இடங்கள் போன்றோருக்கும்

**பாலை பற்றிய குறிப்பு (46-48)**

**46. நிகழ்ந்தது நினைத்தற்கு ஏதுவும் ஆகும்.**

தற்போது தலைவியைப் பிரியக் கருதிய தலைவன் முன்பு பிரியும் போது நடந்ததை நினைத்துப் பார்ப்பதும் பாலைக்கு உரியது.

**47. நிகழ்ந்தது கூறி நிலையலும் திணையே.**

பிரிவு தொடர்பாக முன்பு நிகழ்ந்த ஒன்றை நினைவு கூர்ந்து பிரிவைத் தவிர்த்துத் தலைவியுடன் இருத்தலும் பாலைக்கு உரியது (47)

**48. மரபுநிலை திரியா மாட்சிய ஆகி**

**விரவும் பொருளும் விரவும் என்ப.**

குறிஞ்சி, முல்லை, பாலை,மருதம், நெய்தல் என்னும் ஐந்திணைகளில் நடுவணதாகவும் பொதுவாகவும் உள்ள பாலைத் திணையில் பிற திணையின் மரபு வழியாக வரும் முதல், கரு, உரிப்பொருள் அளவோடு விரவி வரலாம்.

பாலைக்கு ஓதிய பாசறைப் புலம்பற்கண்ணும் தேர்ப்பாகற்குக் கூறுதற்கண்ணும் முல்லைக்குரிய முதற்பொருளும் கருப்பொருளும் விரவுதலாம் என இளம்பூரணர் சான்று கொடுக்கின்றார்.

முல்லை நிலமும் குறிஞ்சி நிலமும் செழுமை குன்றித் தோன்றிய பாலை நிலம் பற்றிய பாடல்கள் தலைவன் தலைவியின் பிரிவின் சோகத்தைப் பிழிந்து காட்டுவன.

**உவமை பற்றிய செய்திகள்**

உலமம், பொதுவான உள்ளுறை இருவகைப்படும், உள்ளுறை உவமையின் பொருள் நிலத்திற்கு உரிய உவமை என தெய்வம் அல்லாத கருப்பொருளில் பொருந்தி இருக்கும். மற்ற உவமைகள் வண்ணம், வடிவம், பயன், வினை போன்றவற்றால் தெளிவாக வெளிப்படும்.

**உவமையின் வகைகள்**

**49. உள்ளுறை உவமம் ஏனை உவமம் எனத்**

**தள்ளாது ஆகும் திணை உணர் வகையே.**

உள்ளுறையாக வரும் உவமம், ஏனைய வகையில் வரும் உவமம் என இருவகையில் உவமம் வரும். உள்ளுறை உவமத்தின் குறிப்புப் பொருளை அந்தந்தத் திணையின் முதற்பொருளுடன் கூடிய கருப்பொருள் வழி அறிந்து கொள்ளலாம்.

**உள்ளுறை உவமம் (50,51)**

**50. உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம்எனக்**

**கொள்ளும் என்ப குறி அறிந்தோரே.**

உள்ளுறை உவமத்தின் வழிப் பொருளை அறிந்து கொள்வதற்குக் கருப்பொருள்களில் தெய்வம் நீங்கிய பிறவற்றை இடமாகக் கொண்டு வரும் என இலக்கணம் அறிந்தோர் குறிப்பிடுவர்.

**51. உள்ளுறுத்து இதனொடு ஒத்துப்பொருள் முடிகஎன**

**உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்.**

உள்ளே பொருந்தி உள்ள கருப்பொருளை அது ஒத்து, முடியும் பொருளோடு பொருத்திக் கூறுவதே உள்ளுறை உவமம் ஆகும்.

தலைவன் தாமரை போன்ற அழகுள்ள தலைவியிடம் இன்பம் நுகர்ந்து விட்டுப் பிறகு, பலர் இன்பம் பெற்ற நீலமலர் போன்ற பரத்தையிடம் குறைந்த இன்பம் பெறச் செல்கிறான் என்பது. உள்ளுறை உவமப் பொருளாகும்.

ஓர் அகப்பாடலைப் படைக்கும் ஆசிரியன், உவமையைக கூறி, அதனுள்ளே பிறிதொரு பொருளை உள்ளுறுத்து (உள்ளே அமைத்து) அதைப் படிக்கும்போது அதனால் பெறப்படும் உட்பொருளும் அவ்உவமையும் ஒன்றோடு ஒன்று ஒத்துப் போகுமாறு பாட்டுப் பொருள் அமைக என அதற்கேற்றபடி படைப்பான். இங்ஙனம் உள்ளுறுத்து இறுவதை (உள்ளே பொருத்தி முற்ற முடிக்கப்படுவது) உள்ளுறை உவமம்.

(தொல்காப்பியம்-பொருளதிகாரம் -1, ப.59)

அகப்பொருள் பாடல்களில் பெரும்பாலும் பயின்று வருவது உள்ளுறை உவமம். இதில் வெளிப்படையாகத் தோன்றும் கருத்துகள் உள்ளே அடிப்படையாக உறைந்து கொண்டிருக்கும் கருத்துக்களுக்கு உவமையாக வரும்படி அமைக்கப் பெற்றிருக்கும்.

**உள்ளுறை அல்லாத பிற உவமை**

**52. ஏனை உவமம் தான்உணர் வகைத்தே.**

உள்ளுறை அல்லாத பிற பொதுவான வண்ணம், வடிவம், பயன், வினை ஆகியவற்றால் வரும். உவமை, உவமிக்கப்படும் பொருளோடு இயல்பாகப் பொருந்தி வரும். துடி போன்ற இடை என்னும் உவமத் தொடரில் உவமை இடையின் வடிவத்தை உணர்த்துகின்றது. (52)

**கைக்கிளை என்பது**

கை - சிறுமை ˙ கிளை- உறவ் ஆதலின் கைக்கிளை ஆவது பெருமை இல்லாத தலைமக்கள் உறவ் தலைவி தன்னை விரும்பா நிலையில் தலைவன் மாத்திரம் தலைவியை விரும்பும் உறவு கைக்கிளை ஆயிற்று.

**காமம் சாலா இளமை யோள்வயின்**

**ஏமஞ் சாலா இடும்பை எய்தி**

**நன்மையும் தீமையும் என்றுஇரு திறத்தான்**

**தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்**

**சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்**

**புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே.**

காம உணர்வு கொண்ட இளைஞன், காம உணர்வு தோன்றாத இளம்பெண் ஒருத்தியிடம் தன் உணர்வை வெளிப்படுத்துகிறான். ஒன்றும் அறியாத அவளிடம், அவனுடைய அளவற்ற காம உணர்வை வெளிப்படுத்த அவளைப் புகழ்ந்தும் பழித்தும் பேசுகின்றான். அறியாப் பருவத்து அவளிடம் மறுமொழி இல்லாததால் தானே பேசி மகிழ்ச்சி அடைவான்.

பருவம் அடைந்த இளைஞன் தன்னுடைய காம உணர்வை அவ்வுணர்வே இல்லாத இளம் பெண்ணிடம் காட்டுவதே கைக்கிளை ஆகும். கைக்கிளைக்காமம் யாரிடம் தோன்றும் என்பதைப் பிற்காலத்தில் தோன்றிய நம்பியகப் பொருள் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

**அதுவே**

**இறைமை இல்லோர்க்கும் இழிகுலத்தோர்க்கும்**

**முறைமை உரித்தே முன்னும் காலை**

**(அகப்.விள.242)**

கைக்கிளை என்னும் பொருந்தாக் காமத்தை வ.சுப.மாணிக்கம் மிகவும் எளிமையாக விளக்குகின்றார்.

**பெருந்திணை என்பது**

கைக்கிளை என்பது காம உணர்வுள்ள இளைஞன் அவ்வுணர்வை அறியாத ஒருத்தியிடம் வெளிப்படுத்துவதாகும். இங்குப் புணர்ச்சி நிகழ்வதில்லை. ஆனால் பெருந்திணை என்பது 1. வயதுமிக்க முதிய தலைமகன் பருவம் வந்த இளம் பெண்ணிடம் உறவு கொள்வது. 2. வயது முதிர்ந்த தலைமகள் இளைஞனிடம் உறவு கொள்வது. 3. வயது முதிர்ந்த இருவரும் உறவுகொள்வது என மூன்று வகையில் அமையும்.

**54.** **ஏறிய மடல்திறம் இளமை தீர்திறம்**

**தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்**

**மிக்க காமத்து மிடலொடும் தொகைஇச்**

**செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே.**

**தொல்காப்பியம் பொருளதிகாரம்**

1. தலைவியை அடைவதற்காக மடல் ஏறுவது. 7. இளமை நீங்கி, முதுமை அடையும் போது காம உணர்வு மிகுந்து இருப்பது. காமம் மிருந்து இருப்பதால் அறிவு அழிந்து இருப்பது. காம் மிகுதியால் வலியப் பற்றிப் புணர்ந்து மகிழ்வது என்னும் இந்நான்கு இயல்புகளும் பெருந்திணைக்கு உரியவை ஆகும்.

தன் குறை தீரப் பெறாத தலைவன் பனங்கருக்கால் குதிரை செய்து, தன் உடம்பு முழுவதும் நீறு பூசிக் கொண்டு, பூளைப்பூ, எலும்பு, எருக்கம்பூ ஆகிய இவற்றை மாலையாகக் கட்டி அணிந்து கொண்டு அக்குதிரை மீது அமர்ந்து அதனைச் சிலர் வீதியில் இழுத்துச் செல்ல வீதியில் செல்லுதல்

**கைக்கிளை பெருந்திணைக்குப் பொது**

**55.** **முன்னைய நான்கும் முன்னதற்கு என்ப**

பெருத்திாகைக்குக் கூறிய மடல் ஏறுதல், முதுமையிலும் காம் உணர்வு மிகுந்து இருந்தல், காமத்தால் அறிவு அழிதல், வலிய பற்றிப் புணர்தல் என்னும் நான்கு இயல்புகளும் கைக்கினைக்கும் பொருந்தும் என்பர். (55)

**அகத்திணைக்கு உரிய பா வகை**

**56.** **நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**

**பாடல் சான்ற புலன்நெறி வழக்கம்**

**கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்**

**உரியது ஆகும் என்மனார் புலவர்.**

கருத்துகளைத் தொகுத்து ஓரிடத்து வழங்கும் தாடக வழக்கு ஒழுகலாறுகளை விளக்கும் உலக வழக்கு புலமை மிக்காரின் புலன்நெறி வழக்கு போன்றவற்றை உள்ளடக்கிய கைக்கிளை முதலாகப் பெருத்திணை ஈறாக உள்ள ஏழுதிணைப் பாடு பொருளுக்குக் கவிப்பாவும் பரிபாடலுமே சிறந்த பாவகை என புலவர் கூறுவர்

**அகப்பொருளில் இயற்பெயர்**

57. **மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்**

**சுட்டி ஒருவர்ப் பெயர் கொளப் பெறாஅர்.**

மக்களின் அகவாழ்க்கையை விளக்கும் முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்னும் ஐந்திணைப் பாடல்களிலும் ஒருவரின் இயற்பெயரைக் கூறாமல் பொதுவாகக் கூறுவதே மரபு என்பர்.

நாடன், ஊரன், வெற்பன், ஆயன் என்பவை பொதுவான பெயர்களாகும். இவை அந்தந்த நிலத்தில் வாழ்பவரைக் குறிக்கும். பாரி, ஓரி என ஒருவரைச் சுட்டும் இயற்பெயர் வருமாயின் புறப்பாடலில் அடங்கிவிடும். இயற்பெயர் சுட்டாமல் வரும் கைக்கிளை, பெருந்திணைப் பாடல்களும் அகப் பாடலாகவே கருதப்படும்.

கான் அமர் நன்னன் போல (.392:26)

என்னும் அகப்பாடல் சான்றில் நன்னன் என்னும் குறுநில மன்னன் பெயர் வருகின்றது. இ∴து ஒரு வரலாற்றுத் தகவலாக வருவதால் அகப்பாடலாகவே கருதப்படும். நன்னன் அகப்பாடலின் மாந்தர் இல்லை

பெயர் சுட்டப் படாமல் வரும் அகப்பாடலில் சிறு புறக்குறிப்பு வந்தாலும் அது அகப்புறப் பாடலாகக் கொள்ளபடும். வேம்பு தலை யாத்த நோன் காழ் எ∴கம் (நெடுநல்.177) என்னும் இந்த அடி வேப்பம் பூவைச் சூட்டிய வேல் எனப்பொருள் தருகிறது. வேம்பு பாண்டியரின் பூ என்பதால் நெடுநல்வாடை அகப்புறப்பாடல் எனப்படுகின்றது.

கைக்கிளை முதலாகப் பெருந்திணை ஈறாக உள்ள ஏழு திணைகளிலும் இயற்பெயர் சுட்டப்படாமல் வருவதே மரபாகும். கைக்கிளை, பெருந்திணைகளில் பெயர் சுட்டப்படாமல் வந்தால் அகம் என்றும் பெயர் சுட்டப்பட்டிருந்தால் அகப்புறம் என்றும் நச்சினார்க்கினியர் குறிப்பிடுகின்றார்.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping |
|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | அகத்திணை குறித்த பாகுபாடுகளை விளக்குக (1,2) | K2 | CO5 | PO4 |
| 2 | நிலங்களுக்கு உரிய முதல், கரு, உரிப் பொருள்கள் யாவை? (3) | K4 | CO2 | PO2 |
| 3 | முதற்பொருளை விரிவாக எழுதுக (4-12) | K3 | CO4 | PO1 |
| 4 | திணைகளுக்கு உரிய தெய்வங்களைக் குறிப்பிடுக (5) | K5 | CO1 | PO2 |
| 5 | திணை மயக்கம் என்றால் என்ன? (14) | K1 | CO2 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | பாலைத்திணை பற்றிய நினைவுக் குறிப்பை எழுதுக (46-48) | K2 | CO1 | PO4 |
| 2 | உவமை பற்றிய செய்திகளை விளக்கி எழுதுக (49-52) | K1 | CO4 | PO5 |
| 3 | கைக்கிளை பற்றி விளக்குக (53) | k6 | CO2 | PO2 |
| 4 | பெருந்திணை குறித்து எழுதுக (54) | K2 | CO2 | PO1 |
| 5 | அகத்திணைக்கு உரிய பா வகைகளை எழுதுக (56) | K4 | CO3 | PO3 |

## அலகு - 2

# புறத்திணையியல்

## உள்ளடக்கம்

- ❖ வெட்சித்திணை - துறைகள்
- ❖ வெட்சியின் உட்பிரிவு

    காஞ்சித்திணை - துறைகள்

- ❖ வஞ்சித்திணை - துறைகள்
- ❖ உழிஞைத்திணை - துறைகள்
- ❖ தும்பைத்திணை - துறைகள்
- ❖ வாகைத்திணை - துறைகள்
- ❖ மறத்துறைகள்
- ❖ அறத்துறைகள்
- ❖ காஞ்சித்திணை - துறைகள்
- ❖ பாடாண்திணை - துறைகள்

## புறத்திணையியல்

புறத்திணையியலில் வெட்சித்திணை முதல் பாடாண் திணை வரையிலுள்ள ஏழு திணைகள் விளக்கப்படுகின்றன.

### 1. வெட்சித்திணை

ஒரு நாட்டுடன் போரிடக் கருதிய வேந்தன் முதலில் அந்நாட்டின் ஆநிரைகளைக் கவர்ந்து வரக் கருதுவான். வெட்சிப் பூவைச் சூடிய மறவர்கள் பகைவர் நாட்டு ஆநிரைகளைக் கவர்ந்து வருவது வெட்சித் திணை எனப்படும்.

**59.** **அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்**

**புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்**

**வெட்கி தானே குறிஞ்சியது புறனே**

**உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே.**

அகத்திணையின் இலக்கணத்தை நன்கு உணர்ந்தவர்கள் புறத்திணை இலக்கணத்தைத் தெளிவாக உணரும்போது புறத்திணை ஆகிய வெட்சித் திணைக்கு அகத்திணையாகிய குறிஞ்சித் திணை புறனாக அமைவதை அறிவர். வெட்சித் திணைக்கு அச்சத்தை உணர்த்தும் வகையில் பதினான்கு துறைகள் உள்ளன.

வெட்சித்திணை அகத்திணையாகிய குறிஞ்சித்திணைக்குப் புறமாக வருகின்றது. குறிஞ்சித்திணை மலையும் மலை சார்ந்த பகுதியுமாகும். இங்குத் தலைவன், தலைவியின் களவொழுக்க வாழ்க்கை நிகழ்கின்றது.

இதே போன்று வெட்சிப் பூவைச் சூடிப் பிறநாட்டு ஆநிரைகளைக் களவிற் கொள்ளுதல் வெட்சித் திணையாகும். வெட்சிப் பூவும் மலை சார்ந்த பகுதியில் பூக்கக்

கூடியதாகும். ஆநிரை கவர்தலும் மீட்டலும் மலையும் மலை சார்ந்த குறிஞ்சி நிலப் பகுதியில் நிகழ்கின்றன.

முதற்பொருளாகிய நிலம், பொழுதுகள், கருப்பொருளாகிய பூ, உரிப் பொருளாகிய களவிற் கூடுதல் ஆகிய எல்லாவற்றானும் ஒத்தலின் வெட்சித்திணை குறிஞ்சித்திணைக்குப் புறனாயிற்று.

(தமிழ் இலக்கணப் பேரகராதி, புறம், ப.296)

**வெட்சித்திணையின் இலக்கணம்**

**60. வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்**

**ஆதந்து ஓம்பல் மேவற்று ஆகும்.**

போர் நிகழ்வதற்கு முன்னர் வேந்தனால் ஏவப்பட்ட வீரர்கள் பகைவர் நாட்டிற்குச் சென்று அவர்களுக்குத் தெரியாமல் வேந்தனின் ஆணைப்படி அநிரை தொல்காப்பியர் கூறிய வழக்கமாகும். வேந்தன் ஆணை இடாமலும் ஆநிரை கவர்ந்து வருதல் பிற்கால அறியலாகும். இதனைப் புறப்பொருள் வெண்பாமாலைவழி

**வென்றிவேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியும்**

**சென்றிகன் முனை ஆ தந்தவை (புற.வெண்.1)**

அரசர் பொருட்டாக ஆநிரை கவர்ந்தால் அது போருக்கு அறிகுறி ˙ மக்கள் தாமாகச் செய்தால் அது களவு என இரா. இளங்குமரனார் குறிப்பிடுகின்றார்.

**வெட்சித்திணையின் துறைகள்**

பகை மன்னரின் நாட்டைக் கவர்வதற்கு முன்னர் வேந்தனின் ஏவற்படி வீரர்கள் அங்குச் சென்று ஆநிரைகளைக் கவர்ந்து வருவர். அவ்வாறு கவர்ந்து வருவதில்

பதினான்கு வகையான நிகழ்வுகள் (துறைகள்) இருக்கும். அவை வரும் நூற்பாவில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

**61.** **படை இயங்கு அரவம் பாக்கத்து விரிச்சி**

**புடைகெடப் போகிய செலவே புடைகெட**

**ஒன்றின் ஆகிய வேயே வேய்ப்புறம்**

**முற்றின் ஆகிய புறத்துஇறை முற்றிய**

**ஊர்கொலை ஆகோள் பூசல் மாற்றே**

**நோயின்று உய்த்தல் நுவல்வழித் தோற்றம்**

**தந்துநிறை பாதீடு உண்டாட்டுக் கொடைஎன**

**வந்த ஈரேழ் வகையிற்று ஆகும்.**

1. படை இயங்கு அரவம்
2. பாக்கத்து விரிச்சி
3. புடைகெடப் போகிய செலவு
4. புடைகெட ஒற்றின் ஆகிய வேய்
5. வேய்ப்புறம்முற்றின் ஆகிய புறத்து இறை
6. முற்றிய ஊர் கொலை
7. ஆகோள்
8. பூசல் மாற்று
9. நோயின்று உய்த்தல்

10. நுவல்வழித் தோற்றம்

11. தந்து நிறை

12. பாதீடு

13. உண்டாட்டு

14. கொடை

1. படை இயங்கு அரவம்: வேந்தனின் ஏவற்படி, பகைநாட்டு ஆநிரைகளைக் கவர வெட்சி மறவர்தம் ஊர்ப்புறத்தில் கூடியபோது எழுகின்ற பேரொலி.

2. பாக்கத்து விரிச்சி: ஆநிரைகளைக் கவரக் கூடியுள்ள வெட்சி மறவர்கள் பறவை ஒலி வழியாகவும் வழிச்செல்வோரின் வாய்மொழி வழியாகவும் நல்ல நிமித்தம் கேட்டல்.

3. புடைகெடப் போகிய செலவு: ஆநிரைகளைக் கவரச் செல்லும்போது பகைவர் நாட்டு ஒற்றர்கள் அறியாதவாறு போதல்.

4. புடைகெட ஒற்றின் ஆகிய வேய்: ஆநிரைகளைக் கவரச் செல்லும் வெட்சி மறவர்கள் பகைவர் நாட்டின் நிலைமையை ஒற்றர்வழி அறிந்து கொள்ளுதல்.

5. வேய்ப்புறம் முற்றின் ஆகிய புறத்து இறை: ஒற்றர் அறிந்து வந்து சொல்லிய பிறகு, பகைவர் நாட்டு எல்லையில் சென்று முற்றுகை இடுதல்.

6. முற்றிய ஊர் கொலை: முற்றுகைக்குப்பிறகு ஆநிரைகள் நிற்கும் இடத்திற்குச் சென்று அங்குக் காவல் புரிவோரைக் கொன்று அழித்தல்.

7. ஆகோள்: கைப்பற்றிய பகைவர் நாட்டு ஆநிரைகளைக் கொண்டு தம் நாட்டிற்குக் கிளம்புதல்.

8. பூசல் மாற்று ஆநிரைகளைக் கவர்ந்து தம் நாட்டிற்குத் திரும்பும் போது மீட்க வரும் பகைவர் நாட்டுக் கரந்தை வீரர்களுடன் வெட்சி மறவர் போரிட்டு அவர்களை விரட்டுதல்.

9. நோயின்றி உய்த்தல் : கவர்ந்து வரும் பகைவர் நாட்டு ஆநிரைகளைத் துன்புறுத்தாமல் பாதுகாப்புடன் தம் நாட்டிற்கு ஓட்டி வருதல்.

10. நுவல்வழித் தோற்றம்: ஆநிரை கவரச் சென்ற வெட்சி மறவரின் வரவுக்காகக் கவலையோடு காத்திருந்த ஊரார், உறவினர் நிற்கும் இடத்தை அடைதல்.

11. தந்து நிறை: கவர்ந்து வந்த ஆநிரைகளை ஓட்டிச் சென்று ஊரிடத்தில் நிறுத்துதல்.

12. பாதீடு: கவர்ந்து வந்த பகைவர் நாட்டு

13. உண்டாட்டு: ஆநிரை கவர்ந்து வந்த மகிழ்ச்சியைக் கொண்டாடும் வகையில் குடித்தும் உண்டும் மகிழ்ந்தும் ஆடுதல்.

14. கொடை: பகைவர் நாட்டிலிருந்து கவர்ந்து வந்த ஆநிரைகளில் ஒரு பகுதியை எளியோருக்கு வழங்குதல்.

இவ்வாறு வெட்சித்திணையில் பகைவர் நாட்டு ஆநிரைகளைக் கவரக் கிளம்புவது முதல் கவர்ந்து வந்து பகிர்ந்து கொள்ளுதல், கொடை அளித்தல் ஈறாகப் பதினான்கு துறைகள் விளக்கப்பட்டுள்ளன.

**வெட்சித்திணைக்குப் புறனடை**

**62. மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த**

**கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே.**

வீரச் செயல்களைப் புரிவோரின் குடியின் மாண்புகளைக் கூறுதலும் வெற்றிச் செல்வியாகிய கொற்றவையின் பெருமையைக் கூறுதலும் வெட்சித்திணைக்கு உரியவை ஆகும்.

இவ்வாறு பெருமை கூறுவதிலும் வழிபடுவதிலும் பால் வேறுபாடு இல்லை. ஆண், பெண்பாலர்க்குப் பொதுவே. இருப்பினும் ஆடவரைப் பற்றியதாயின் இல்லாண்முல்லை என்றும் மகளிரைப் பற்றியதாயின் மூதின்முல்லை என்றும் கூறுவர்.

### 1. கரந்தைத்திணை

பகை நாட்டார் கவர்ந்து சென்ற தம் நாட்டு ஆநிரைகளை மீட்பதற்காகக் கரந்தைப் பூவைச் சூடிச் செல்வதே கரந்தைத் திணை எனப்படும். தொல்காப்பியர் ஆநிரை கவரும் வெட்சித்திணையின் ஒரு பகுதியாகவே ஆநிரை மீட்கும் கரந்தைத் திணையையும் அடக்கியுள்ளார். பிற்கால இலக்கணங்களில் வெட்சியும் கரந்தையும் தனித்தனித் திணைகளாக விளக்கப்படுகின்றன.

**63. வெறிஅறி சிறப்பின் வெவ்வாய் வேலன்**

**வெறியாட்டு அயர்ந்த காந்தளும் உறுபகை**

**வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்**

**போந்தை வேம்பே ஆர்என வருஉம்**

**மாபெரும் தானையர் மலைந்த பூவும்**

வாடா வள்ளி வயவர் ஏத்திய
ஓடாக் கழல்நிலை உளப்பட ஓடா
உடல்வேந்து அடுக்கிய உன்ன நிலையும்
மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்

ஆரமர் ஓட்டலும் ஆபெயர்த்துத் தருதலும்
சீர்சால் வேந்தன் சிறப்பெடுத்து உரைத்தலும்
தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தலும்
மனைக்குரி மரபினது கரந்தை அன்றியும்

வருதார் தாங்கல் வாள்வாய்த்துக் கவிழ்தல் என்று
இருவகைப்பட்ட பிள்ளை நிலையும்
வாள்மலைந்து எழுந்தோனை மகிழ்ந்துபறை தூங்க
நாடுஅவற்கு அருளிய பிள்ளை யாட்டும்
காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல் என்று

**இருமூன்று மரபின் கல்லொடு புணரச்**

**சொல்லப் பட்ட எழுமூன்று துறைத்தே.**

ஆநிரை கவர்தல் என்னும் வெட்சித் திணையிலேயே அடக்கப்பட்டுள்ள கரந்தைத் திணையில் இருபத்தொரு துறைகள் காணப்படுகின்றன.

1. வெறியாட்டு நிகழ்த்துதல்
2. வேந்திடை தெரிதல்
3. வேந்திடை தெரிதல்
4. வேந்திடை தெரிதல்
5. வாடா வள்ளி
6. கழல் நிலை
7. உன்னநிலை
8. பூவைநிலை
9. ஆர் அமர் ஓட்டல்
10. ஆநிரை மீட்டல்
11. சிறப்பெடுத்து உரைத்தல்
12. நெடுமொழி கூறுதல்
13. வருதார் தாங்கல்
14. வாள்வாய்க் கவிழ்தல்
15. பிள்ளையாட்டு

16. காட்சி

17. கால்கோள்

18. நீர்ப்படை

19. நடுகல்

20. பெரும்படை

21. வாழ்த்தல்

1. வெறியாட்டு நிகழ்த்துதல்: ஆநிரை மீட்டலின் வெற்றி குறித்து வேலன் காந்தள் மலரைசூடிக் கடுமையான சொற்களைக் கூறும் வெறியாட்டு எனப்படும் காந்தள்.

2. **வேந்திடை தெரிதல்-பனம்பூ:** வேந்தர்களுடைய வீரர்கள் போரிடும்போது அடையாளம் காட்டுவதற்காகப் போரிடும் மறவர்கள் பனம்பூ முதலானவற்றைத் திணைக்கு உரிய பூவோடு அணிந்து கொள்ளுதல்.

3. **வேந்திடை தெரிதல்-வேப்பம்பூ:** வேந்தர்களுடைய வீரர்கள் போரிடும்போது அடையாளம் காட்டுவதற்காகப் போரிடும் மறவர்கள் வேப்பம்பூ முதலானவற்றைத் திணைக்கு உரிய பூவோடு அணிந்து கொள்ளுதல்.

4. **வேந்திடை தெரிதல்-ஆத்திப்பூ:** வேந்தர்களுடைய வீரர்கள் போரிடும்போது அடையாளம் காட்டுவதற்காகப் போரிடும் மறவர்கள் ஆத்திப்பூ முதலானவற்றைத் திணைக்கு உரிய பூவோடு அணிந்து கொள்ளுதல்.

5. **வாடா வள்ளி:** வாடடி வள்ளி என்பது ஒரு வகையான சுத்தாகும். வாடுதல் இல்லாமல் நிகழ்த்தி கொண்டிருப்பதால் வாடா வள்ளி எனப்படுதல் வாடும் வள்ளி கொடியினின்று வேறுபடுத்தவும் வாடா வள்ளி எனப்படுதல்,

6. **கழல்நிலை:** இ்.தும் ஓர் ஆடல் நிகழ்வாகும். வீரக் கழலைக் காலில் அணிந்து கொண்டு கூட்டாக ஆடுதல்

7. **உன்ன நிலை:** உன்னம் என்பது மரவகையுள் ஒன்றாகும். தன் நாட்டிற்குக் கேடு வருமாயின் மரம் உலர்ந்து விடும். கேடுவாராக் காலத்தில் செழித்து நிற்கும்.

8. **பூவை நிலை:** மாயோனாகிய திருமாலின் நிறத்தை ஒத்த பூவின் சிறப்பைப் போற்றிக் கூறுதல் திருமால் முதலிய தெய்வங்களுடன் அரசனை ஒப்பிட்டுக் கூறல்.

9. **ஆர் அமர் ஓட்டல்:** ஆநிரை கவர்ந்து செல்வோரைத் தடுத்து, அவர்களிடமிருந்து தம் ஆநிரையை மீட்டு வெட்சியாரைத் தோற்று ஓடச் செய்தல்.

10. **ஆநிரை மீட்டல்:** ஆநிரை கவர்ந்து சென்ற வெட்சியாரைத் தோற்கடித்து அவரிடமிருந்து மீட்டு வருதல்.

11. **சிறப்பெடுத்து உரைத்தல்:** கவர்ந்து சென்ற ஆநிரைகளை மீட்கக் காரணமாக இருந்த தங்கள் மன்னனின் சிறப்பை எடுத்து உரைத்தல்.

12. **நெடுமொழி கூறுதல்:** போரில் தன்னுடைய உயிரைக் கொடுத்தாவது ஆநிரைகளை மீட்கப் போவதாக வஞ்சினம் கூறுதல்.

13. **வருதார் தாங்கல்:** போரிடுவதற்கு முன் படையாக வரும் தூசிப் படையைத் தடுத்துப் போரிட்டு ஆற்றலை வெளிப்படுத்துதல்.

14. **வாள் வாய்க் கவிழ்தல்:** எதிரில் போரிட வருவோரைத் தன் வாள் வன்மையால் எதிர்த்துப் போரிட்டுப் பகைவரை அழித்துத் தானும் வீழ்ந்துபடுதல்.

15. **பிள்ளையாட்டு:** வாட்போர் செய்து வெற்றி தேடித் தந்த இளம் வீரனுக்குப் பரிசுகள் கொடுத்துக் கொண்டாடுதல்.

16. **காட்சி:** ஆநிரையை மீட்கும்போது இறந்து பட்ட வீரனுக்கு நடுகல் அமைத்து வழிபடக் கல் தேடுதல்.

17. **கால்கோள்:** நடு கல்லுக்காகத் தெரிவு செய்த கல்லைத் தக்க இடத்திற்குக் கொண்டு வருதல்,

18. **நீர்ப்படை:** வழிபாட்டிற்காகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு வந்த கல்லை நீரினால் தூய்மைப் படுத்துதல்.

19. **நடுகல்:** வழிபாட்டிற்கு உரிய நடுகல்லைத் தக்க இடத்தில் நிலை நிறுத்தி வைத்தல்,

20. **பெரும்படை:** நடுகல்லைச் சுற்றிலும் கோயில் எழுப்பி அதில் அவ்வீரனின் சிறப்புகளைத் தீட்டிச் சிறப்பித்தல்,

21. **வாழ்த்தல்:** நடுகல்லுக்கு எல்லாவிதச் சிறப்புகளையும் செய்த பின்னர் அதனைத் தெய்வமாக வழிபடுதல்.

இவ்வாறு ஆநிரை மீட்டலின் துறைகள் இருபத்தொன்றாக அமையும். கரந்தை வெட்சித் திணையுள் அடக்கித் தொல்காப்பியத்தில் விளக்கப்பட்டுள்ளது.

## 2. வஞ்சித்திணை

ஆநிரை கவர்தல், மீட்டல் இரண்டு நிலையில் தோற்ற மன்னன் அல்லது வென்ற மன்னன் யாராவது ஒருவர் நாட்டைக் கவர வஞ்சிப் பூவைச் சூடிக் கொண்டு போர்மேற் செல்வது வஞ்சித்திணை ஆகும். இப்போர் காடும் காடு சார்ந்த முல்லை நிலப்பகுதியில் நிகழும்:

**வஞ்சித்திணையின் இலக்கணம்**

**64. வஞ்சி தானே முல்லையது புறனே**

**எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்**

**அஞ்சுதகத் தலைச்சென்று அடல் குறித்தன்றே.**

வஞ்சித்திணை என்பது அகத்திணையாகிய முல்லைத் திணைக்குப் புறமாக அமைகின்றது. மண்ணாசை மிக்க வேந்தன் ஒருவன் நாடு கவரப் படையுடன் வரும்போது, அவனை நாட்டுக்கு உரிய மன்னன் போரிட்டு வெல்வது வஞ்சித்திணை ஆகும்

வஞ்சித்திணை முல்லைத் திணைக்குப் புறனாக இருப்பதற்குக் காரணம் நிலம், உரிப்பொருள் போன்றவை ஒத்திருத்தலே ஆகும்.

முல்லை நிலம் காடு சார்ந்தது. வஞ்சிப் போர் நடக்கும் இடமும் காடாகும். முல்லை நிலத்தில் தலைவனைப் பிரிந்த தலைவி ஆற்றி இருப்பாள், வஞ்சித்திணையிலும் போர்மேற் சென்ற தலைவனைப் பிரிந்து தலைவி ஆற்றி இருப்பாள். இவ்வகையில் இரண்டும் ஒப்புமை உடையவையாக உள்ளன.

**வஞ்சித்திணையின் துறைகள்**

மண்ணாசை கொண்டு போரிட வந்த வேந்தனை வஞ்சிப்பூ சூடித் தாக்கி அழிக்கும் வஞ்சித்திணையில் பதின்மூன்று துறைகள் காணப்படுகின்றன.

**65. இயங்குபடை அரவம் எரிபரந்து எடுத்தல்**

**வயங்கல் எய்திய பெருமை யானும்**

**கொடுத்தல் எய்திய கொடைமை யானும்**

**அடுத்து ஊர்ந்து அட்ட கொற்றத் தானும்**

**மாராயம் பெற்ற நெடுமொழி யானும்**

**பொருளின்று உய்த்த பேராண் பக்கமும்**

**வருவிசைப் புனலைக் கற்சிறை போல**

**ஒருவன் தாங்கிய பெருமை யானும்**

**பிண்டம் மேய பெருஞ்சோற்று நிலையும்**

**வென்றோர் விளக்கமும் தோற்றோர் தேய்வும்**

**குன்றாச் சிறப்பின் கொற்ற வள்ளையும்**

**அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇக்**

**கழிபெரும் சிறப்பின் துறைபதின் மூன்றே.**

வஞ்சித்திணைக்கு மேலுள்ள தொல்காப்பிய நூற்பாவில் பதின்மூன்று துறைகள் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

1. இயங்குபடை அரவம்
2. எரிபரந்து எடுத்தல்
3. வயங்கல் எய்திய பெருமை
4. கொடுத்தல் எய்திய கொடைமை
5. அடுத்து ஊர்ந்து அட்ட கொற்றம்

6. மாராயம் பெற்ற நெடுமொழி

7. பொருளின்று உய்த்த பேராண் பக்கம்

8. ஒருவன் தாங்கிய பெருமை

9. பெருஞ்சோற்று நிலை

10. வென்றோர் விளக்கம்

11. தோற்றோர் தேய்வு

12. கொற்ற வள்ளை

13. தழிஞ்சி

1. **இயங்குபடை அரவம்:** மண்ணாசை கொண்டு போரிட வந்த வீரர் கூட்டமும் எதிர்த்துப் போரிடும் வஞ்சிப்படையினரும் ஆரவாரம் செய்தல்.

2. **எரி பரந்து எடுத்தல்:** இரண்டு நாட்டுப் படை வீரர்களும் தீயிட்டு அழிவை உண்டாக்குதல்.

3. **வயங்கல் எய்திய பெருமை:** போரிட்டுக் கொள்ளும் மன்னர்கள் தங்கள் படைவீரர்களின் ஆற்றலைப் புகழ்தல்.

4. **கொடுத்தல் எய்திய கொடைமை:** வீரர்கள் திறம்படப் போரிட வேண்டும் என்பதற்காகப் போரிடும் மன்னர்கள் தங்கள் வீரர்களுக்குக் கொடை அளித்தல்.

5. **அடுத்து ஊர்த்து அட்ட கொற்றம்:** பகைவர் நாட்டில் புகுந்து அங்குள்ள காவல்களை அழித்துப் பகைவர்களைக் கொல்லுதல்.

6. **மாராயம் பெற்ற நெடுமொழி:** தங்கள் படைகளின் பெருமைகளைப் பேசிக் கொள்ளுதல் பட்டங்கள் பெற்றோர் புகழ்மொழி பேசுதல்.

7. **பொருளின்று உய்த்த பேராண் பக்கம்:** பகைவர் படையை ஒரு பொருட்டாகக் கருதாமல் போரிடும் வீரர்களின் ஆண்மையை விளக்குதல்.

8. **ஒருவன் தாங்கிய பெருமை:** பகைவர் படையின் தாக்குதலுக்கு ஆற்றாமல் தன் படை சிதறிய போது ஒரு வீரன் தான் மட்டுமே கற்றூண் போல நின்று தடுத்துப் போரிடுதல்.

9. **பெருஞ்சோற்று நிலை:** போர் தொடங்குவதற்கு முன்னர்ப் போர் வீரர்களுக்குச் சோறு அளித்து மன்னன் தானும் உண்ணுதல்.

10. **வென்றோர் விளக்கம்:** போரில் வெற்றி பெற்ற மன்னன் பல சிறப்புகளைப் பெறுதல். குறிப்பாகத் தோற்ற மன்னன் திறை கொடுத்தல்.

11. **தோற்றோர் தேய்வு:** போரில் தோல்வி அடைந்த மன்னன், வென்ற மன்னனுக்குத் திறைப் பொருள் கொடுப்பதைக் குறைபாடாகக் கருதுதல்.

12. **கொற்றவள்ளை:** வென்ற மன்னனின் சிறப்பைப் பாடுவதைப் போன்று தோற்ற மன்னரின் நிலையும் வருத்தத்துடன் பாடுதல்.

13. **தழிஞ்சி:** போர்க் களத்தில் சீறிவரும் படைக் கருவிகளைத் தடுத்து விழுப்புண் பட்டவர்களை ஆரத்தழுவிக் காத்தல்.

இப்பதின்மூன்று நிகழ்வுகளும் வஞ்சித்திணைக்கு உரிய துறைகளாகத் தொல்காப்பியத்தில் குறிக்கப்பட்டுள்ளன.

### 3. உழிஞைத் திணை

வேந்தன் ஒருவன் இன்னொரு நாட்டின் மேல் படை எடுத்துச் சென்று அந்நாட்டு மதிலை முற்றுகை இடுவதும் மதிலுக்கு உரிய வேந்தன் உள்ளிருந்து காத்தலும் உழிஞைத்திணை எனப்படும்

**உழிஞைத்திணையின் இலக்கணம்**

**66.** **உழிஞை தானே மருதத்துப் புறனே**

**முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்**

**அனைநெறி மரபிற்று ஆகும் என்ப.**

உழிஞைத்திணை அகத்திணையாகிய மருதத்திணைக்குப் புறமாக அமைகின்றது. முழுமையான மதிலை மாற்றார் முற்றுகை இடுதலும் மதிலுக்கு உரியோர் அதனை உள்ளிருந்து காத்துக் கொள்ளுதலும் உழிஞைத் திணையாகும்.

உழிஞைத்திணை மருதத்திணைக்குப் புறமாகியதற்குக் காரணம் இரண்டு திணைக்கும் நிலம் வயலும் வயல் சார்ந்த இடமுமாகும். மருதத்திணையில் தலைவி தலைவனுடன் ஊடிக் கதவு அடைத்திருப்பாள். பகைவர் மதிலை முற்றுகை இடும்போது உள்ளிருப்போர் கதவு அடைத்திருப்பர். இவ்வகையால் உழிஞைத் திணை மருதத்திற்குப் புறமாகின்றது.

**உழிஞைத் திணையின் துறைகள்**

**67.** **அதுவே தானும் இருநால் வகைத்தே.**

உழிஞைத் திணையின் துறைகள் நான்கு நான்காக எட்டுப் பிரிவுக்குள் அடங்கும்.

**68.** **கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமும்**

**உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்**

**தொல் எயிற்கு இவர்தலும் தோலது பெருக்கமும்**

**அகத்தோன் செல்வமும் அன்றி முரணிய**

**புறத்தோன் அணங்கிய பக்கமும் திறம்பட**

**ஒருதான் மண்டிய குறுமையும் உடன்றோர்**

**வருபகை பேணார் ஆரெயில் உளப்படச்**

**சொல்லப்பட்ட நாலிரு வகைத்தே**

மேலுள்ள நூற்பாவில் இருவகையான நிலையில் உழிஞைத்துறைகள் அமைந்துள்ளன. மதிலை முற்றுகை இட்டாரின் செயல்கள், மதிலின் உள்ளிருந்து காப்போரின் செயல்கள் என இருநிலையில் எட்டுத்துறைகள் அமையும்.

**மதில் முற்றுகை**

1. கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம்
2. உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பு
3. தொல் எயிற்று இவர்தல்
4. தோலது பெருக்கம்

1. **கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம்:** தன்னை மதிக்காதவர் நாட்டைப் போரிட்டு வெல்வதற்கு முன்பே தனது நாடாக எண்ணி வெற்றிப் பெருமிதம் கொள்ளுதல்.

2. **உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பு:** பகைவரது நாட்டைக் கைப்பற்ற எண்ணியதை முடித்துக் காட்டும் சிறப்பைப் பெற்றிருத்தல்.

3. **தொல் எயிற்று இவர்தல்:** பகைவரது தொன்மையான மதிலின் மேல் ஏறி முழுவதையும் வளைத்து நிற்றல்.

4. **தோலது பெருக்கம்:** மதில் காப்போரின் தாக்குதலைத் தடுப்பதற்காக மதில் மேல் ஏறியோர் கேடயம் போன்ற கருவிகளைக் கொண்டு செல்லுதல்.

**2. மதில் காத்தல்**

1. அகத்தோன் செல்வம்
2. புறத்தோன் அணங்கிய பக்கம்
3. திறம்பட ஒருதான் மண்டிய குறுமை
4. உடன்றோர் வருபகை பேணார் ஆரெயில்

1. **அகத்தோன் செல்வம்:** மதிலை உள்ளிருந்து காக்கும் மன்னன் தன் பெருஞ் செல்வத்தால் உள்ளிருக்கும் மக்களையும் காத்தல்.

2. **புறத்தோன் அணங்கிய பக்கம்:** பல காலம் உள்ளிருந்து மதிலைக் காத்தோர் வெளியேறி வந்து மதிலை முற்றுகை இட்டோருடன் போர் புரிதல்.

3. **திறம்பட ஒருதான் மண்டிய குறுமை:** முற்றுகையால் மதில் அழியத் தொடங்கியபோது அகத்தே இருப்பவன் தான் ஒருவனாக வந்து போரிடும் நிலையைக் கூறுதல்

4. **உடன்றோர் வருபகை பேணார் ஆரெயில்:** மதில் உள்ளிருந்து காத்தோர் வெளிவந்து முற்றுகை இட்டவர்களின் வலிமையைப் பொருட்படுத்தாமல் மதிலின் வலிமையை எடுத்துக்கூறுதல்.

இவ்வாறு முற்றுகை இடும் புற உழிஞையர், உள்ளிருந்து காக்கும் அக உழிஞையரின் செயல்கள் எட்டுத்துறைகளாக உழிஞைத் திணையில் பகுக்கப்பட்டுள்ளன.

**புற, அக உழிஞைக்குப் பொதுத்துறைகள்**

மேலே விளக்கப்பட்டுள்ள எட்டு உழிஞைத் துறைகளும் முற்றுகை இட்டோருக்கு நான்கும் மதிலைக் காப்போருக்கு நான்கும் என அமைந்துள்ளன. பின் வரும் நூற்பாவில் உள்ள பன்னிரண்டு துறைகளும் முற்றுகை இடுவதற்கும் காப்பதற்கும் பொதுவாக உள்ளன.

**69.** **குடையும் வாளும் நாள்கோள் அன்றி**
**மடையமை ஏணிமிசை மயக்கமும் கடைஇச்**
**சுற்றமர் ஒழிய வென்றுகைக் கொண்டு**
**முற்றிய முதிர்வும் அன்றி முற்றிய**
**அகத்தோன் வீழ்ந்த நொச்சியும் மற்றதன்**

**புறத்தோன் வீழ்ந்த புதுமை யானும்**
**நீர்ச்செரு வீழ்ந்த பாசியும் அதாஅன்று**
**ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்**
**மதில்மிசைக்கு இவர்ந்த மேலோர் பக்கமும்**
**இகல்மதில் குடுமிகொண்ட மண்ணு மங்கலமும்**

**வென்ற வாளின் மண்ணொடு ஒன்றத்**
**தொகைநிலை என்னும் துறையொடு தொகைஇ**
**வகைநால் மூன்றே துறைஎன மொழிப.**

மதிலை முற்றுகை இடுதல் அதனைக் காத்தல் என்னும் இருநிலைக்கும் பின்வரும் கொடுக்கப்பட்டுள்ளன. பன்னிரண்டு துறைகள்

1. குடை நாட்கோள்

2. வாள் நாட்கோள்

3. மடையமை ஏணிமிசை மயக்கம்

4. அமர்வென்று கைக்கொண்டு முற்றிய முதிர்வு

5. அகத்தோன் வீழ்ந்த நொச்சி

6. புறத்தோன் வீழ்ந்த புதுமை

7. நீர்ச்செரு வீழ்ந்த பாசி

8. ஊர்ச் செரு வீழ்ந்த பாசி மறன்

9. மதில் மிசைக்கு இவர்ந்தோர் பக்கம்

10. இகல் மதில் குடுமி கொண்ட மண்ணு மங்கலம்

11. வென்ற வாளின் மண்ணுதல்

12. உழிஞைத் தொகைநிலை

1. **குடைநாட்கோள்:** போர் நடை பெறுவதற்கு முன்னர் வேந்தனின் வெண்கொற்றக் குடையை நல்ல நாள் பார்த்துப் புறவீட்டிற்குக் கொண்டு செல்லுதல்.

2. **வாள்நாட்கோள்:** போருக்குச் சிறப்பைத் தரும் வாளினைத் தூய்மைப்படுத்தி வழிப்பட்டுப் போர்க்களத்திற்கு எடுத்துச் செல்லுதல்.

3. **மடையமை ஏணிமிசை மயக்கம்:** மதிலின் மீது அமைக்கப்பட்டுள்ள ஏணியில் நின்று புறத்தில் உள்ளோரும் அகத்தில் உள்ளோரும் போர் புரிதல்.

4. **அமர்வென்று கைக்கொண்டு முற்றிய முதிர்வு:** முற்றுகை இட்டிருந்த புற உழிஞையர் வெளி மதிலைக் கைப்பற்றிப் பின்னர் அக மதிலைக் கைப்பற்றுதல்.

5. **அகத்தோன் வீழ்ந்த நொச்சி:** புற உழிஞையர் மதிலைக் கைப்பற்றிய பிறகு அக உழிஞையர் வெளி வந்து போர் புரிதல்.

6. **புறத்தோன் வீழ்ந்த புதுமை:** இரு படையினரும் போரிட்டதில் மதிலை முற்றுகை இட்டோரை மதிலைக் காத்தோர் வீழ்த்தி வெற்றி பெறுதல்.

7. **நீர்ச் செரு வீழ்ந்த பாசி:** நீரை விட்டு அகலாத பாசியைப் போலப் புற உழிஞையரும் அக உழிஞையரும் புறம் கொடாமல் போரிடுதல்.

8. **ஊர்ச் செரு வீழ்ந்த பாசி மறன்:** பாசி நீரில் விலகுவதும் சேர்வதுமாக இருப்பது போல் ஊருக்கும் புற மதிலுக்கும் இடையில் நின்று போரிடுதல்.

9. **மதில் மிசைக்கு இவர்ந்தோர் பக்கம்:** ஊருக்கும் புறமதிலுக்கும் இடையில் நின்று போர் புரிவதோடு அல்லாமல் மதில்மேல் நின்றும் போரிடுதல்.

10. **இகல் மதில் குடுமி கொண்ட மண்ணு மங்கலம்:** மதில் மேல் நின்று போரிட்டுப் பகைவரை வீழ்த்தி முடியைக் கைப்பற்றி நீராடுதல்.

11. **வென்ற வாளின் மண்ணுதல்:** வென்ற உழிஞையர், தமக்கு வெற்றியைப் பெற்றுத் தந்த வாளினைப் புனித நீராட்டுதல்.

12. **உழிஞைத் தொகைநிலை:** அக, புற உழிஞையருள் வெற்றி பெற்ற வேந்தன் தம்முடைய வீரர்களை ஒன்று சேர்த்துப் பெருமைப் படுத்துதல்.

இவ்வாறு வரும் நிகழ்வுகள் பன்னிரண்டும் மதிலை முற்றுகை இட்டோருக்கும் அதனைக் காத்தோருக்கும் பொதுவாக நிகழும் உழிஞைத் துறைகளாகும்.

**புறத்துழிஞை**

மதிலைக் கவர வந்த மாற்றரசரின் வீரர்கள் காட்டரணைக் கடந்து வந்து, அகழியின் வெளிப்புறக்கரையில் நின்று அரண்மனைக்குள் புகுந்து போரிட முயற்சி செய்வது புறத்துழிஞை எனப்படும்.

**அகத்துழிஞை**

மதிலைக் கவர வந்த உழிஞை வீரர் அகழியைக் கடந்து அரண்மனைக்குள் புகுந்து மகளிர் அலறும்படி நடுங்க வைத்து மதிலைக் காப்போருடன் போரிடுவது அகத்துழிஞை எனப்படும்.

## 4. தும்மைத் திணை

ஆநிரை கவர்தல் போர் தொடங்குவதற்காக வெட்சித் திணையில் நிகழ்வது அதற்கடுத்து நாட்டைக் கவர வஞ்சித்திணையில் போர் நிகழும் அடுத்து மதிற்போர் உழிஞைத் திணையில் நிகழும். தும்பைத்திணைப் போர் மன்னர்களின் ஆற்றலை வெளிப்படுத்துவதற்காக நிகழும். அதாவது தன்னுடைய வலிமையை உலகம் புகழ வேண்டும் என ஒரு மன்னன் போர் தொடுப்பான் போரிட வருவோனிடம் தன் வலிமையைக் காட்டவேண்டும் என மாற்று வேந்தனும் போரிட வருவான். எனவே வலிமையாகிய ஆண்மையைக் காட்ட நிகழ்வதே தும்பைத் திணைப் போராகும்.

வலிமையை வெளிப்படுத்த நிகழும் தும்பைத் திணைப்போர் மணலும் மணல் சார்ந்த நெய்தல் நிலப்பகுதியில் நிகழும்.

**தும்பைத்திணையின் இலக்கணம்**

**70.** **தும்பை தானே நெய்தலது புறனே**

**மைந்து பொருள் ஆகவந்த வேந்தனைச்**

**சென்றுதலை அழிக்கும் சிறப்பிற்று என்ப.**

தும்பைத்திணை அகத்திணையாகிய நெய்தல் திணைக்குப் புறமாக அமைகின்றது. வலிமையைக் காட்ட வலிய போர் செய்யவரும் மன்னனைப் போரிட்டு அழிக்கும் சிறப்பை விளக்கும் என்பர்.

நெய்தல் திணை மணலும் மணல் சார்ந்த இடத்தில் தலைவனைப் பிரிந்த தலைவியின் இரங்கலை வெளிப்படுத்தும். இதுபோலவே வலியச் சென்று வலிமையைக் காட்டும் போரில் தோற்றவர்களில் கணவனை இழந்த பெண்டிர் வருந்தி இரக்கத்திற்கு உள்ளாகி இருப்பர். அதாவது நெய்தல் திணையில் தலைவனைப் பிரிந்து தலைவி இரங்கி இருப்பாள். தும்பைத் திணையில் தலைவி கணவனைப் பிரிந்தும் இழந்தும் வருந்தி இருப்பாள்.

**தும்பைத் திணையின் சிறப்புகள்**

**71. கணையும் வேலும் துணையுற மொய்த்தலின்**

**சென்ற உயிரின் நின்ற யாக்கை இருநிலம்**

**தீண்டா அருநிலை வகையொடு**

**இருபாற் பட்ட ஒருசிறப் பின்றே.**

வலிமை கருதி நடக்கும் தும்பைத் திணையில் போர் செய்யும் வீரன் மேல் அம்புகளும் வேல்களும் பாய்ந்து உயிர் நீங்கியது. இருப்பினும் உடம்பு கீழே விழாமல் நிற்கின்றது. இஃது எவ்வாறு என்றால் ஊர்ந்து செல்லும் அட்டையை இரண்டாக வெட்டினாலும் உயிர் போகாமல் ஊர்வது போல வீரனின் உடலும் அம்பு, வேல்களால் தாங்கப்படுவதால் கீழே விழவில்லை.

**தும்பைத் திணையின் துறைகள்**

தன் வலிமையைக் காட்டப் போரிடும் மன்னனுக்கும் அவனை எதிர்த்துப் போரிடும் மன்னனுக்குமான தும்பைத் திணையில் பன்னிரண்டு துறைகள் காணப்படுகின்றன.

72. **தானை யானை குதிரை என்ற**

**நோனார் உட்கும் மூவகை நிலையும்**

**வேல்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன்**

**தான்மீண்டு எறிந்த தார்நிலை அன்றியும்**

**இருவர் தலைவர் தபுதிப் பக்கமும்**

**ஒருவனை ஒருவன் உடைபடை புக்குக்**

**கூழை தாங்கிய பெருமையும் படையறுத்துப்**

**பாழி கொள்ளும் ஏமத் தானும்**

**களிறு எறிந்து எதிர்ந்தோர் பாடும் களிற்றொடு**

**பட்ட வேந்தனை அட்ட வேந்தன்**

**வானோர் ஆடும் அமலையும் வாள்வாய்த்து**

**இருபெரு வேந்தர் தாமும் சுற்றமும்**

**ஒருவரும் ஒழியாத் தொகைநிலைக் கண்ணும்**

**செருவகத்து இறைவன் வீழ்ந்தெனச் சினைஇ**

**ஒருவன் மண்டிய நல்லிசை நிலையும்**

**பல்படை ஒருவற்கு உடைதலின் மற்றவன்**

**ஒள்வாள் வீசிய நூழிலும் உளப்படப்**

**புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்தே .**

1. தானை-காலாட்படை
2. யானை
3. குதிரை
4. தார் நிலை
5. தபுதிப் பக்கம்
6. கூழை தாங்கிய பெருமை
7. பாழி கொள்ளும் ஏமம
8. களிறு எறிந்து எதிர்ந்தோர்பாடு
9. வாளோர் ஆடும் அமலை
10. ஒருவரும் ஒழியாத் தொகைநிலை
11. ஒருவன் மண்டிய நல்லிசை
12. ஒள்வாள் வீசிய நூழில்

1. **தானை - காலாட்படை:** வலிமையைக் காட்ட வல்ல தும்பைத் திணைப் போரில் மாறுபாடு கொண்ட இருநாட்டுக் காலாட் படையினரும் போரிடுதல்.

2. **யானை:** இரு நாட்டு யானைப் படைகளும் மன்னர்களின் வலிமையை வெளிப்படுத்த மோதிக் கொள்ளுதல்.

3. **குதிரை**: இரு நாட்டுக் குதிரைப் படையினரும் தம்முடைய வலிமையைக் காட்டக் கடுமையாகப் போரிடுதல்.

4. **தார்நிலை:** வெற்றியை விரும்பிப் போர் முகத்துச் சென்ற மன்னனை மாற்றார் சூழ்ந்து கொள்ள, அதுகண்ட அம்மன்னனின் படைத்தலைவன் தன் நிலை விட்டு வந்து மன்னனுடன் நின்று போரிடுதல்.

5. **தபுதிப் பக்கம்:** இரண்டு மன்னர்களின் படைத்தலைவர்களும் நேருக்கு நேர் நின்று கடுமையாகப் போரிட்டு உயிர் நீத்தல்,

6. **கூழை தாங்கிய பெருமை:** பெரும் படைகள் மோதிக் கொண்டு தளர்ச்சி அடையும்போது பின்னணிப்படை வீரன் முன்னே சென்று தாக்குதல்.

7. **பாழி கொள்ளும் ஏமம்:** படைக்கருவி பழுதாகிப் போரிட முடியாத நிலை ஏற்பட்ட போது உடல் வலிமையால் எதிரியுடன் மல்லுக்கட்டிப் போரிடுதல்.

8. **களிறு எறிந்து எதிர்ந்தோர் நோக்கு:** மன்னன் ஏறி வந்த களிற்றினை வீழ்த்திய மாற்று மன்னனின் வீரர்கள் மகிழ்ச்சி கொள்ளுதல்.

9. **வாளோர் ஆடும் அமலை:** களிற்றின் மேல் ஏறிப் போரிட வந்த மன்னனை வீழ்த்திக் கொன்ற மாற்றுப் படை வீரர்கள் மகிழ்ந்து பாடுதல்.

10. **ஒருவரும் ஒழியாத் தொகைநிலை:** வலிமை காட்ட நடந்த தும்பைத் திணைப் போரில் இரு மன்னர்களும் சுற்றத்தினரும் வீரரும் தொகையாக மடிதல்.

11. **ஒருவன் மண்டிய நல்லிசை**: போரில் தன் மன்னனை வீழ்த்திய மாற்றாருடன் சினந்து போரிட்டுப் படைத் தலைவன் புகழ் பெறுதல்.

12. **ஒள்வாள் வீசிய நூழில்:** போர்க் களத்தில் தன்னுடைய படை வீரர்கள் தோற்றுச் சிதறியபோதும் வீரன் ஒருவன் தனியாக நின்று பகைவரை வெட்டி வீழ்த்துதல்.

இவ்வாறு தும்பைத் திணையில் காணப்படும் பன்னிரண்டு துறைகளும் பல்வேறு நிகழ்வுகளை வெளிப்படுத்துகின்றன.

## 5. வாகைத்திணை

எத்தொழிலைச் செய்வோரும் தத்தம் தொழிலில் மிகுந்த ஈடுபாட்டுடன் வெற்றி பெறும் வகையில் செய்வதே வாகையாகும். வாகைத்திணையே வெற்றியின் சின்னமாகும்.

**வாகைத்திணையின் இலக்கணம்**

**73. வாகை தானே பாலையது புறனே**

**தாவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்**

**பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப.**

வாகைத் திணை என்பது அகத்திணையாகிய பாலைத்திணையின் புறமாகும். குற்றமில்லாத கொள்கையோடு தத்தம் இயல்புகள் மற்றவரிடமிருந்து மேம்படும் வகையில் வெளிப்படுத்துவது வாகைத்திணை எனப்படும்.

வாகைத் திணை, அகத்திணையாகிய பாலைத் திணைக்குப் புறமாகிறது. பாலைத் திணைக்குத் தனி நிலம் இல்லாமை போல வாகைத் திணைக்கும் தனி நிலம் இல்லை. பாலையில் குடும்ப வாழ்க்கையை வளர்க்கப் பிரிவு ஏற்படுகின்றது. வாகைத் திணையில் தம் மேம்பாட்டை வெளிப்படுத்தப் போரின் பொருட்டுப் பிரிவு ஏற்படுகின்றது. எனவே, வாகை பாலைக்குப் புறமாகின்றது.

**வாகைத் திணையின் பாகுபாடு**

**74.** **அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்**

**ஐவகை மரபின் அரசர் பக்கமும்**

**இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்**

**மறுவில் செய்தி மூவகைக் காலமும்**

**நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்**

**நாலிரு வழக்கின் தாபதப் பக்கமும்**

**பாலறி மரபில் பொருநர் கண்ணும்**

**அனைநிலை வகையொடு ஆங்குஎழு வகையின்**

**தொகைநிலை பெற்றது என்மனார் புலவர்.**

வாகைத் திணைக்கு உட்பட்டவையாகப் பின் வரும் ஏழு வகைப் பாகுபாடுகளைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

1. அறுவகைப்பட்ட பார்ப்பனர் பக்கம்
2. ஐவகை மரபின் அரசர் பக்கம்
3. இரு மூன்று மரபின் ஏனோர் பக்கம்
4. அறிவன் தேயம்
5. நாலிரு வழக்கின் தாபதப் பக்கம்
6. பக்கம் பொருநர்கண்

7. அனை நிலை வகை

1. **அறு வகைப்பட்ட பார்ப்பனர் பக்கம்**: ஓதல், ஓதுவித்தல், வேள்வி செய்தல், வேள்வி செய்வித்தல், ஈதல், ஏற்றுக் கொள்ளுதல் போன்றவை பார்ப்பனர் ஒழுக்கம்.

2. **ஐவகை மரபின் அரசர் பக்கம்:** ஓதல், வேள்வி செய்தல், ஈதல், படை வழங்குதல், குடி மக்களைப் பாதுகாத்தல் அரசர் ஒழுக்கம்.

3. **இரு மூன்று மரபின் ஏனோர் பக்கம்:**

    1. ஓதல், வேள்வி செய்தல், ஈதல், உழ்வுசெய்தல், வாணிகம் செய்தல், ஆநிரை காத்தல் என்பன வணிகரது ஒழுக்கம்.

    2. உழவு செய்தல், பிற தொழில் செய்தல், விருந்தோம்பல், விலங்கினம் வளர்த்தல், வழிபடுதல், வேதம் அல்லாக் கல்விகற்றல் வேளாளர் ஒழுக்கம்.

4. **அறிவன் தேயம்:** மழை, பனி, வெயில் போன்றவற்றைத் திறம்பட அறிந்து தெரிவிப்பது அறிவன் எனப்படும் கணியனின் கடமை.

5. **நாலிரு வழக்கில் தாபதப் பக்கம்**: நீராடல், நிலத்தில் உறங்கல், தோலாடை உடுத்தல், சடை வளர்த்தல், தீவளர்த்து வழிபடுதல், ஊர்ப்பக்கம் செல்லாமை, காட்டுணவு உண்டல், தெய்வ வழிபாடு போன்றவை தவம் செய்வோர் ஒழுக்கம்.

6. **பக்கம் பொருநர்கண்:** வாள் வலியாலும் தோள் வலியாலும் பகைவருடன் போரிட்டு வெற்றி வாகை சூடுவது போரிடுவோரின் கடமை.

7. **அனை நிலை வகை:** சொல், பாட்டு, கூத்து போன்றவற்றால் வெற்றி வாகை சூடுவது, சூதாட்டத்தில் வெல்வது, விலங்குச் சண்டையால் வெல்வது என வெற்றி வாகை சூடும் வகைகள்.

இவ்வகை வாகைத்திணை என்பது அவரவர் தொழில்களில் கடமையும் ஒழுக்கமும் தவறாது முதன்மை பெறுவது எனக் குறிப்பர்.

**வாகைத் திணையின் துறைகள்**

வாகைத் திணையில் மறத்துறை தொடர்பான ஒன்பது துறைகளும் அறத்துறை தொடர்பான ஒன்பது துறைகளும் பின்வரும் நூற்பாவில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

75. **கூதிர்வேனில் என்றுஇரு பாசறைக்**

**காதலின் ஒன்றிக் கண்ணிய மரபினும்**

**ஏரோர் களவழி அன்றிக் களவழித்**

**தேரோர் தோற்றிய வென்றியும் தேரோர்**

**வென்ற கோமான் முன்தேர்க் குரவையும்**

**ஒன்றிய மரபின் பின்தேர்க் குரவையும்**

**பெரும்பகை தாங்கும் வேலி னானும்**

**அரும்பகை தாங்கும் ஆற்ற லானும்**

**புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கமும்**

**ஒல்லார் நாணப் பெரியவர்க் கண்ணிச்**

**சொல்லிய வகையின் ஒன்றொடு புணர்ந்து**

**தொல்லுயிர் வழங்கிய அவிப்பலி யானும்**

**ஒல்லார் இடவயின் புல்லிய பாங்கினும்**
**பகட்டி னானும் ஆவி னானும்**
**துகள்தபு சிறப்பின் சான்றோர் பக்கமும்**

**கடிமனை நீத்த பாலின் கண்ணும்**
**எட்டுவகை நுதலிய அவையத் தானும்**
**கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை யானும்**
**இடையில் வண்புகழ்க் கொடைமையானும்**
**பிழைத்தோர்த் தாங்கும் காவ லானும்**

**பொருளொடு புணர்ந்த பக்கத் தானும்**
**அருளொடு புணர்ந்த அகற்சி யானும்**
**காமம் நீத்த பாலி னானும்என்று**
**இருபால் பட்ட ஒன்பதின் துறைத்தே.**

மேலுள்ள வாகைத்துறையைத் தொகுத்துக் கூறும் நூற்பாவில் முதலில் ஒன்பது மறத்துறை தொடர்பான துறைகள் காணப்படுகின்றன. மறத்துறை என்பது வீரத்தை வெளிப்படுத்துவது.

**1. மறத்துறைகள்**

1. பாசறை காதலின் ஒன்றுதல்

2. களவழித் தோன்றிய வென்றி

3. முன் தேர்க்குரவை

4. பின் தேர்க்குரவை

5. வேலினது வென்றி

6. அரும்பகை தாங்கும் ஆற்றல்

7. வல்லாண் பக்கம்

8. அவிப்பலி

9. ஒல்லாரிடத்துப் புல்லிய

1. **பாசறைக் காதலின் ஒன்றுதல்:** கூதிர்ப்பாசறை வேனிற்பாசறை என வேறுபட்ட காலப் போர் நிலை வெற்றியை அடிப்படையாகக் கொண்டு நிகழ்தல். பிரிதல் இருப்பினும் வெற்றி வாகை முதன்மை பெறுதல்.

2. **களவழித் தோன்றிய வென்றி**: உழவர்கள் நெற்களத்தில் பலருக்குக் கொடுத்து மகிழ்வது போலப் போர்க் களத்தில் வெற்றி பெற்ற மன்னன் களிறு, குதிரைகளைப் பரிசாக வழங்குதல்.

3. **முன் தேர்க் குரவை:** தேர்ப்படையை வென்ற அரசனின் தேரின் முன் வென்ற களிப்பில் வீரர்கள் குரவைக் கூத்து ஆடுதல்.

4. **பின் தேர்க் குரவை:** தம்முடைய அரசன் தேர்ப்படையில் வென்றதால் தேரின் பின்பக்கம் நின்று குரவைக் கூத்து ஆடுதல்.

5. **வேலினது வென்றி:** பகை நாட்டவரை வென்று வாகை சூடக் காரணமாக இருந்த வேலினைப் புகழ்தல்.ழூ

6. **அரும் பகை தாங்கும் ஆற்றல்:** பெரும் படையுடன் போரிட வந்துள்ள பகைவரை எதிர்த்துப் போரிடும் ஆற்றல் பெற்றிருத்தல்.

7. **வல்லாண் பக்கம்:** அழியும் தன்மையுள்ள உயிரை ஒரு பொருட்டாகக் கருதாமல் நிலைத்த புகழைப் பெறப் போரில் தன் ஆண்மையைக் காட்டல்.

8. **அவிப் பலி:** தன் மன்னனுடைய வெற்றிக்குத் தன் உயிரைப் பலியாகத் தருவதாகக் கூறி வெற்றிக்குப் பின்னர்ப் பகைவரும் நாணும்படி தன்னைப் பலிகொடுத்தல்.

9. **ஒல்லாரிடத்துப் புல்லிய பாங்கு:** பொருந்தாத பகைவருடன் போரிட்டுத் தன் மன்னனுக்காக ஆற்றலைக் காட்டி நிற்றல்.

மேலுள்ள நூற்பாவின் பின் பகுதியில் அறத்துறை தொடர்பாக ஒன்பது துறைகள் காணப்படுகின்றன. அறத்துறை என்பது நீதி சார்ந்து வாழ்வது.

1. சான்றோர் பக்கம்
2. கடிமனை நீத்தல்
3. முன் தேர்க்குரவை
4. கட்டமை ஒழுக்கம்
5. வண்புகழ்க் கொடை
6. பிழைத்தோர்த் தாங்கும் காவல்
7. பொருளொடு புணர்ந்த பக்கம்
8. அருளொடு புணர்ந்த அகற்சி
9. காமம் நீத்தல்

1. **சான்றோர் பக்கம்:** உழவுக்காகவும் போருக்காகவும் விலங்குகளைப் பெற்று உழவுக்கும் பகைக்கும் அஞ்சாத சான்றோராகத் திகழ்தல்.

2. **கடிமனை நீத்தல்:** மனையறத்தில் பெருமை மிக்கோராகத் திகழப் பிறன்மனை நோக்காத பேராண்மையுடன் திகழ்தல்.

3. **எட்டு வகை நுதலிய அவை**: குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவு நிலைமை, அழுக்காறாமை, அவா இன்மை என்னும் சான்றோர் அவை விரும்பும் குணத்தைப் பெற்றிருத்தல்,

4. **கட்டமை ஒழுக்கம்**: அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, நடுவுநிலைமை, வெ.ஃகாமை, புறங்கூறாமை, தீவினையச்சம், அழுக்காறாமை, பொறையுடைமை போன்றவற்றைப் பெற்றிருத்தல்.

5. **வண்புகழ்க் கொடை:** புகழைப் பிறருக்குக்கொடுக்க இடங்கொடுக்காது தான் மட்டுமே பெற்றிருக்க இடைவெளி இல்லாமல் கொடுத்துக் கொண்டே இருத்தல்.

6. பிழைத்தோர்த் தாங்கும் காவல்: பிழை செய்தோரைப் பொறுத்து, அவருக்குப் பொருளுதவி செய்து காத்தல்.

7. **பொருளொடு புணர்ந்த பக்கம்:** நாட்டின் அறம் செழிக்க, மெய்ப்பொருள் செழிக்கப் பலவற்றையும் அறிந்திருத்தல்

8. **அருளொடு புணர்ந்த அகற்சி**: எவற்றின் மேலும் ஆசைப்படாமல் உயிர்களைக் காத்துப் பற்றற்ற நிலையில் வாழ்தல்.

9. **காமம் நீத்தல்:** உலகப் பற்றுகளை நீக்கி என்றும் இன்பம் தரும் வாழ்க்கையை விரும்புதல்.

மேற்குறிப்பிட்டவாறு அகவாழ்வில் வெற்றி பெற ஒன்பது துறைகள் கூறப்பட்டுள்ளன. மொத்தமாகப் பதினெட்டு வாகைத்துறைகள் விளக்கப்பட்டுள்ளன.

## 6. காஞ்சித்திணை

இவ்வுலக வாழ்க்கையில் எவையுமே நிலையானவை இல்லை. இளமை நிலைப்பதில்லை யாக்கை நிலைப்பதில்லை செல்வமும் நிலைப்பதில்லை. என்றும் நிலையான இன்பத்தை அளிக்கவல்ல வீடு பேற்றினை விளக்குவதே காஞ்சித்திணை ஆகும்.

**காஞ்சித் திணையின் இலக்கணம்**

**76.** **காஞ்சி தானே பெருந்திணைப் புறனே**
**பாங்கரும் சிறப்பின் பல்லாற்றானும்**
**நில்லா உலகம் புல்லிய நிலைத்தே.**

காஞ்சித் திணை அகந்திணையாகிய பெருந்திணைக்குப் புறமாகும். இவ்வுலகத்தை, எந்த நிலையில் பார்த்தாலும் அது புன்மைத் தன்மை கொண்ட நிலை இல்லாத பொருள்களைக் கொண்டதாகும்.

**காஞ்சித் திணையின் துறைகள்**

**77.** **மாற்றரும் கூற்றம் சாற்றிய பெருமையும்**
**கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்**
**பண்புற வரூஉம் பகுதி நோக்கிப்**
**புண்கிழித்து முடியும் மறத்தி னானும்**
**ஏமச் சுற்றம் இன்றிப் புண்ணோன்**

**பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும்**
**இன்னன்என்று இரங்கிய மன்னை யானும்**

இன்னது பிழைப்பின் இதுவாகியர் எனத்
துன்னரும் சிறப்பின் வஞ்சினத் தானும்
இன்னகை மனைவி பேஎய்ப் புண்ணோன்

துன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும்
நீத்த கணவன் தீர்த்த வேலின்
பெயர்த்த மனைவி வஞ்சி யானும்
நிகர்த்துமேல் வந்த வேந்தனொடு முதுகுடி
மகட்பாடு அஞ்சிய மகட்பா லானும்

முலையும் முகனும் சேர்த்திக் கொண்டோன்
தலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ
ஈரைந்து ஆகும் என்ப பேரிசை
மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம்
மாய்ந்த பூசல் மயக்கத் தானும

தாமே எய்திய தாங்கரும் பையுளும்
கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதா னந்தமும்
நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து
தனிமகள் புலம்பிய முதுபாலையும்

**கழிந்தோர் தேஎத்துக் கழிபடர் உறீஇ**
**ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்**
**காதலி இழந்த தபுதார நிலையும்**
**காதலன் இழந்த தாபத நிலையும்**
**நல்லோள் கணவனொடு நனிஅழல் புகீஇச்**

**சொல்லிடை இட்ட பாலை நிலையும்**
**ஆய்பெரும் சிறப்பின் புதல்வற் பயந்த**
**தாய்தப வரூஉம் தலைப்பெயல் நிலையும்**
**மலர்தலை உலகத்து மரபுநன்கு அறியப்**
**பலர் செலச் செல்லாக் காடு வாழ்த்தொடு**
**நிறையரும் சிறப்பின் துறை இரண்டு உடைத்தே.** **36**

காஞ்சித் திணைத் துறையை விளக்கும் நூற்பாவில் இருபது காஞ்சித்துறைகள் னப்படுகின்றன. இவற்றில் பத்துத்துறைகள் போர்க்கள நிகழ்வுகள் பற்றியவையாகவும் பத்துத் துறைகள் பிற இட நிகழ்வுகள் பற்றியவையாகவும் உள்ளன.

**1. போர்க்கள நிகழ்வுகள் (10)**

1. கூற்றம் சாற்றிய பெருங்காஞ்சி
2. அறிவுடையோர் காட்டிய முதுமைக் காஞ்சி
3. புண்கிழித்துக் காட்டும் மறக் காஞ்சி

4. போய் ஓம்பிய பேஎய்க் காஞ்சி

5. உலகத்தார் இரங்கும் மன்னைக் காஞ்சி

6. வஞ்சினக் காஞ்சி

7. தொடாக் காஞ்சி

8. வஞ்சிக் காஞ்சி

9. மகட்பாற் காஞ்சி

10. இறந்த நிலை

1. **கூற்றம் சாற்றிய பெருங்காஞ்சி:** போர்க்களத்திற்கு எவராலும் தடுக்க முடியாத எமன் வருவான் எனக் கூறுவது பெருங்காஞ்சி.

2. **அறிவுடையோர் காட்டிய முதுமைக் காஞ்சி:** இவ்வுலக நிலையாமையை அறிவுடையோர், அல்லாதோர்க்கு அறிவுரையாகக் கூறியது முதுமைக் காஞ்சி.

3. **புண்கிழித்துக் காட்டும் மறக் காஞ்சி:** நற்பேற்றை எண்ணித் தன்மீது பட்ட புண்ணைக் கிழித்துக் காட்டி இறந்து படுவது மறக காஞ்சி.

4. **பேஎய் ஓம்பிய பேஎய்க் காஞ்சி:** போர்க் களத்தில் இறந்து பட்டவனைக் காக்கச் சுற்றம் இன்மையால் அவனைப் பேய்கள் காப்பது பேய்க் காஞ்சி.

5. **உலகத்தார் இரங்கும் மன்னைக் காஞ்சி:** இவ்வளவு பெருமை மிக்க வீரன் போர்க் களத்தில் இறந்து பட்டான் என உலகத்தார் இரங்குவது மன்னைக் காஞ்சி.

6. **வஞ்சினக் காஞ்சி:** போர்க் களத்தில் இன்ன செயலைச் செய்யாவிட்டால் இன்ன கெடுதலை அடைவேன் எனக்கூறுவது வஞ்சினக் காஞ்சி.

7. **தொடாக் காஞ்சி:** போர்க் களத்தில் புண்பட்டுக் கிடக்கும் “தன்கணவனைப் பேய்கள் நெருங்காதவாறு மனைவி காப்பது தொடாக் காஞ்சி.

8. **வஞ்சிக் காஞ்சி:** தன் கணவனின் உயிரைப் போக்கிய வேலினை எடுத்து மனைவி தன் உயிரை மாய்த்துக் கொள்வது வஞ்சிக் காஞ்சி.

9. **மகட்பாற் காஞ்சி:** மாற்றான் தன் பெண்ணைப் பெறும் தகுதி இருந்தும் குலம், பண்பு போன்ற காரணங்களால் கொடுக்க மறுப்பது மகட்பாற் காஞ்சி.

10. **இறந்த நிலை:** போர்க் களத்தில் இறந்து கிடக்கும் கணவன் தலையோடு தன் மார்பகத்தையும் முகத்தையும் பதித்து உயிர்விடுவது இறந்தநிலை.

**2.பிற இட நிகழ்வுகள் (10)**

1. பூசல் மயக்கம்
2. தாம் எய்திய தாங்கரும் பையுள்
3. மூதானந்தம்
4. தனிமகள் புலம்பிய முதுபாலை
5. கையறு நிலை
6. மனைவியை இழந்த தபுதாரநிலை
7. கணவனை இழந்த தாபதநிலை
8. பாலை நிலை
9. தலைப்பெயல் நிலை
10. காடு வாழ்த்து

1. **பூசல் மயக்கம்:** போர்க்களத்தில் புகழை நிலை நாட்டி இறந்து பட்டவனின் பெருமைகளைக் கூறிச் சுற்றத்தார். அழுது புலம்புதல்,

2. **தாம் எய்திய தாங்கரும் பையுள்:** கணவனைப் போரில் இழந்ததால் அவனை இழந்த மனைவி அடைந்த வருத்தத்தை வெளிப்படுத்துதல்.

3. **மூதானந்தம்:** கணவன் களத்தில் இறந்துபட்டதால் மனைவியும் உடன் இறந்ததைப் பெருமையாகப் பேசி உலகறியச் செய்தல்,

4. **தனிமகள் புலம்பிய முதுபாலை:** கணவனைப் போரில் இழந்து பாலை நிலத்தில் நின்று வருந்தி அழும் மனைவியின் நிலை கூறுதல்.

5. **கையறு நிலை:** இறந்துபட்டோரை எண்ணி இருக்கின்றவர்கள் பல்வேறு நிலைகளைக் கூறிப் புலம்புதல்.

6. **மனைவியை இழந்த தபுதாரநிலை:** மனைவியை இழந்து வருந்தி இருக்கும் கணவனின் நிலையை வெளிப்படுத்துதல்.

7**. கணவனை இழந்த தாபதநிலை:** கணவனை இழந்து வருந்தி இருக்கும் மனைவியின் நிலையை வெளிப்படுத்துதல்.

8**. பாலை நிலை:** கணவன் இறந்து பட்டதால் அவனோடு தானும் எரிபுகச் சென்றதைத் தடுத்தபோது மனைவி நோக்கியதை விளக்குதல்.

9. **தலைப்பெயல் நிலை:** போர்க்களத்தில் விழுப்புண்படாது முதுகில் புண்பட்டதால் அவனைத் தழுவித் தாய் புலம்பி அழுதல்.

10. **காடு வாழ்த்து:** உலகில் உள்ளோர் இறந்து பட்டாலும் தான் மட்டும் என்றும் இருக்கும் சுடு காட்டை வாழ்த்துதல்.

இவ்வாறு போர்க்கள நிலையையும் போரால் மக்கள் படும் இன்னல்களையும் நிலையாமையே நிலைத்து நிற்பது என்பதையும் இருபது காஞ்சித் துறைகள் வெளிப்படுத்துகின்றன.

## 7. பாடாண் திணை

வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை என்னும் ஐந்து புறத்திணைகளிலும் சிறப்புற்று விளங்கும் ஆண் மகனின் புகழைப் பாடுவதால் பாடாண் திணை எனப்படுகிறது.

**பாடாண் திணையின் இலக்கணம் (78-86)**

**78.** **பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே**

**நாடுங் காலை நாலிரண்டு உடைத்தே.**

பாடாண் திணை அகத்திணையாகிய கைக்கிளைத் திணைக்குப் புறமாகும். இஃது எட்டு வகையான பகுதிகளை உடையது.

1. கடவுள் வாழ்த்து
2. வாழ்த்தியல்
3. மங்கலம்
4. செவியறிவுறுத்தல்
5. ஆற்றுப்படை
6. பரிசில்
7. கைக்கிளை
8. வசை

பாடாண்திணை கைக்கிளைத் திணையோடு ஒத்திருக்கும் காரணத்தால் அத்திணைக்குப் புறமாகிறது. கைக்கிளை என்பதற்குத் தனியான நிலம் இல்லை் எல்லா நில ஒருதலைக் காமத்திற்கும் பொருந்தி வரும். இதே போன்று பாடாண் திணைக்கும் தனி நிலம் இல்லை. எல்லா நிலத்து ஆடவனின் புகழைப் பாடுவது பாடாண் திணை. கைக்கிளையில் காதல் ஒருவரிடம் தோன்றுவது போலப் பாடாண் திணையில் புகழ் ஒருவனைச் சேர்கின்றது.

**79. அமரர்கண் முடியும் அறுவகை யானும்**

**புரைதீர் காமம் புல்லிய வகையிலும்**

**ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப.**

கொடிநிலை, கந்தழி, வள்ளி, புலவராற்றுப்படை, புகழ்தல், பரவுதல் என்னும் ஆறு முறைகளும் கடவுளைப் புகழ்வதற்கு மட்டுமல்லாமல் பாட்டுடைத் தலைவனைப் புகழ்ந்து கூறும் போது பாடாண் திணையாகக் கொள்ளப்படும்.

**80. வழக்கியல் மருங்கின் வகைபட நிலைஇப்**

**பரவலும் புகழ்தலும் கருதிய பாங்கினும்**

**முன்னோர் கூறிய குறிப்பினும் செந்துறை**

**வண்ணப் பகுதி வரைவின்று ஆங்கே.**

பாடாண் திணை பற்றிய செய்திகள் வாழ்த்துதல், புகழ்தல் எனப் பலவும் தொன்றுதொட்டு வழங்கி வருகின்றன. கடவுள் தொடர்பான கொடிநிலை முதலான அறுவகைப் பராவுதலைச் செந்துறை வண்ணத்தில் பாடுவது போன்று உலகியலில் உயர்ந்த பாடாண் மக்களையும் பாடுதலும் நீக்கப்படாது எனக்குறிப்பர்.

**81. காமப் பகுதி கடவுளும் வரையார்**

**ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்.**

கடவுளர் மாட்டும் காம நிகழ்வுகள் ஏற்படுவதில் எந்தவித வரையறையும் இல்லை. அதே போன்று கடவுளிடத்து மானிடப் பெண்டிர் காதல் கொள்வதற்கும் வரையறை இல்லை என்பர்.

82. **குழவி மருங்கினும் கிழவது ஆகும்.**

குழந்தையைப் போற்றுமிடத்தும் பாடாண் காமப்பகுதி கூறுவதற்கு உரியது எனக் குறிப்பர்.

83. **ஊரொடு தோற்றமும் உரித்துஎன மொழிப**

**வழக்கொடு சிவணிய வகைமை யான.**

ஊரின்கண் நிகழக் கூடிய காமப் பகுதியின் சிறப்பும் பாடாண் பகுதியில் புகழ்ந்து பாடுவதற்கு உரியதாகும். (25)

84. **மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே.**

பாடாண் திணைப் பாடல்களில் மெய்ப் பெயராகிய உண்மையான இயற்பெயரைக் குறிப்பிடுவதைப் புலவர் ஏற்பர்.

85. **கொடிநிலை கந்தழி வள்ளி என்ற**

**வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்**

**கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே.**

தெய்வங்களுக்கான கொடிநிலை, கந்தழி, வள்ளி என்னும் குற்றமற்ற மூன்றும் பாட்டுடைத் தலைவனின் புகழ் பாடும்போது கடவுள் வாழ்த்தோடு சேர்ந்து வரும்.

86. **கொற்ற வள்ளை ஓரிடத் தான.**

கொடிநிலை, கந்தழி, வள்ளி போன்றவற்றைப் போன்று வஞ்சித் திணைக்குழூ உரிய கொற்ற வள்ளையும் பாட்டுடைத் தலைவனின் புகழ்பாடப் பாடாண் திணையில் வரும்.

**பாடாண்திணையின் துறைகள் (1)**

**87.**

**கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தலும்**
**அடுத்து ஊர்ந்து எய்திய இயன்மொழி வாழ்த்தும்**
**சேய் வரல் வருத்தம் வீட வாயில்**
**காவலர்க்கு உரைத்த கடைநிலை யானும்**
**கண்படை கண்ணிய கண்படை நிலையும்**
**கபிலை கண்ணிய வேள்வி நிலையும்**

**வேலின் நோக்கிய விளக்கு நிலையும்**
**வாயுறை வாழ்த்தும் செவியறி வுறூஉவும்**
**ஆவயின் வரூஉம் புறநிலை வாழ்த்தும்**
**கைக்கிளை வகையொடு உளப்படத் தொகைஇத்**
**தொக்க நான்கும் உளஎன மொழிப.**

இந்நூற்பாவில் பாடாண் திணைக்கு உரிய பத்துத் துறைகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

1. ஏத்தலும் பழித்தலும்
2. இயன்மொழி வாழ்த்து

3. கடைநிலை

4. கண்படை நிலை

5. வேள்வி நிலை

6. வேலை நோக்கிய விளக்கு நிலை

7. வாயுறை வாழ்த்து

8. செவியறிவுறூஉ

9. புறநிலை வாழ்த்து

10. கைக்கிளை வகை

1. **ஏத்தலும் பழித்தலும்:** வறியோருக்கு ஒன்றைக் கொடுத்து மகிழ்வோரைப் போற்றிப் புகழ்தல் எதனையும் ஈயாதோரை இகழ்ந்து கூறுதல்.

2. **இயன்மொழி வாழ்த்து:** பாட்டுடைத் தலைவனின் பெருமைகளை அவன் முன்னிலையிலும் சுற்றத்தார் மற்றோரிடத்தும் புகழ்ந்து கூறுதல்.

3. **கடைநிலை:** பரிசில் பெறுவதற்காக நீண்ட தொலைவிலிருந்து வந்து வாயிலில் நிற்பவர் தம்மைப் பற்றி வள்ளலிடம் சொல்லக் கூறுதல்.

4. **கண்படைநிலை:** அரசவையில் நீண்ட நேரம் இருந்த அரசனையும் மேலோரையும் துயில் கொள்ளுமாறு மருத்துவரும் அமைச்சரும் வேண்டுதல். அரசன் இனிது துயின்றமை கூறல் என்பது இளம்பூரணர்

5. **வேள்வி நிலை:** வெற்றி பெற்றதற்காகப் பாடாண் திணைத் தலைவன ஆநிரைகளைக் கொடையாகக் கொடுத்தல்.

6. **வேலை நோக்கிய விளக்குநிலை:** விளக்கு எரிவது போன்ற நிலையில் இருக்கும் வேலின் சிறப்பினை எடுத்துக்கூறுதல்,

7. **வாயுறை வாழ்த்து:** வேம்பு கசந்தாலும் பின் பயன் தருவது போல உள்ளதை மறைக்காமல் எடுத்துக் கூறி மெய்ந்நிலை உரைத்து வாழ்த்துதல்.

8. **செவியறிவுறூஉ:** தலைமை நிலையில் இருக்கும் மன்னன் போன்றோருக்கு ஒழுக்கம் பணிவு போன்றவற்றை அறிவுரையாகக் கூறுதல்.

9. **புறநிலை வாழ்த்து:** பாடாண் திணைத் தலைவன் தெய்வக் காப்போடு அனைத்து வளமும் பெற்று வாழ வேண்டும் என வாழ்த்துதல்.

10. **கைக்கிளை வகை:** முன்பு அன்புடையராகி இருந்து பிறகு பிரிந்தவனிடம் அவளை ஏற்றுக் கொள்ளுமாறு சான்றோர் கூறுதல்.

இவ்வாறு" பாடாண் துறையின் ஒரு பகுதியாகப் பத்துத் துறைகள் மேலுள்ள நூற்பாவில் விளக்கப்பட்டுள்ளன.

**பாடாண் திணையின் துறைகள் (2)**

**88.**

**தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்**
**சூதர் ஏத்திய துயில்எடை நிலையும்**
**கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
**ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**
**பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்**

**சென்றுபயன் எதிரச் சொன்ன பக்கமும்**
**சிறந்த நாளினிற் செற்றம் நீக்கிப்**

**பிறந்த நாள்வயின் பெருமங் கலமும்**

**சிறந்த சீர்த்தி மண்ணுமங் கலமும்**

**நடைமிகுந்து ஏத்திய குடைநிழல் மரபும்**

**மாணார்ச் சுட்டிய வாள்மங் கலமும்**

**மன்னயில் அழித்த மண்ணுமங் கலமும்**

**பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும்**

**பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி**

**நடைவயின் தோன்றிய இருவகை விடையும்**

**அச்சமும் உவகையும் எச்சம் இன்றி**

**நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்**

**காலம் கண்ணிய ஓம்படை உளப்பட**

**ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பின்**

இந்நூற்பாவிலும் பாடாண் திணைக்கு மேலும் பத்துத் துறைகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

1. துயில் எடைநிலை
2. பயன் எதிரச் சொன்ன பக்கம்
3. பெரு மங்கலம்
4. சீர்த்தி மண்ணுமங்கலம்

5. குடை நிழல் மரபு

6. வாள் மங்கலம்

7. எயில் அழித்த மண்ணு மங்கலம்

8. கடைக் கூட்டு நிலை

9. இருவகை விடை

10. நிமித்தம் பார்த்தல்

1. **துயில் எடை நிலை:** கேடு இல்லாத நற்புகழைப் பெற வேண்டித் துயில் கொண்டிருக்கும் மன்னர்களை ஏத்திப்பாடும் சூதர்கள் துயில் எழுப்புதல்.

2. **பயன் எதிரச் சொன்ன பக்கம்:** வள்ளல்களிடம் பரிசில் பெற்று வரும் கூத்தர், பாணர், பொருநர், விறலியர் போன்றோர் எதிரில் வருவோருக்குப் பரிசில் பெற வழிகாட்டுதல்.

3. **பெருமங்கலம்:** தம்முடைய பிறந்த நாளில் சினத்தை நீக்கிப் பலருக்கும் பரிசில் வழங்கிக் கொண்டாடுதல்.

4. **சீர்த்தி மண்ணுமங்கலம்:** ஒவ்வோர் ஆண்டும் எல்லா வளமும் சிறக்க வேண்டிப் புனிதநீராடி முடிசூட்டு விழாவைக் கொண்டாடுதல்.

5. **குடைநிழல் மரபு:** அனைவருக்கும் நிழலைக் கொடுத்துக் காக்கும் வெண்கொற்றக் குடையைப் போற்றுதல்.

6. **வாள் மங்கலம்:** போர்க்களத்தில் பகைவரைக் கொல்வதற்குக் காரணமாக விளங்கும் வாளினைப் போற்றி வணங்குதல்.

7. **எயில் அழித்த மண்ணுமங்கலம்:** மாற்றாரின் மதிலை அழித்துச் சிதைத்த மகிழ்ச்சியைக் கொண்டாடப் புனித நீராடுதல்.

8. **கடைக் கூட்டு நிலை**: பரிசில் பெறுவோன் தன் வரவை வாயிலோனிடம் கூறி அவன் வழியாகப் பரிசினைப் பெற்றுப் போதல்

9. **இருவகை விடை:** மன்னனிடம் பரிசில் பெற்றபிறகு அவனைப் போற்றிப் புகழ்ந்தபின் அவனே விடை தருதல் அல்லது தாமே விடை பெறுதல்

10. **நிமித்தம் பார்த்தல்:** நாள், கோள் பார்த்து அவற்றின் வழி அச்சத்தைப் போக்கி மகிழ்ச்சியை உருவாக்கிச் சிறப்பாக வாழ் வாழ்த்தும் ஓம்படை.

எல்லாப் புறத்திணைகளிலும் புகழுடன் விளங்கும் பாடாண் தலைவனின் பெருமைகள் மேற்கண்டவாறு பலதுறைகளில் தொகுத்து விளக்கப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்டவாறு விளக்கப்பட்டுள்ள ஏழு புறத்திணைகளையும் அவற்றுக்கான பொதுப் பொருளையும் துறைகளையும் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

| **புறத்திணைகள்** | **துறைகள்** |
|---|---|
| 1. வெட்சி<br><br>1.1 கரந்தை | ஆநிரை கவர்தல் - 14 + 2<br><br>ஆநிரை மீட்டல் - 21 |
| 2. வஞ்சி | பிறர் நாட்டைக் கவர<br><br>விரும்பி நடக்கும் போர் - 13 |
| 3. உழிஞை | மதில் முற்றுகை - 4<br><br>மதில் காத்தல் - 4<br><br>பொது - 12 |
| 4. தும்பை | மதில் காத்தல், தகர்த்தலுக்குப் பிறகு |

| | |
|---|---|
| | களத்தில் நிகழும் போர் 12 |
| 5. வாகை | மறத்துறை - 9<br><br>அறத்துறை - 9 |
| 6. காஞ்சி | போர்க்கள நிகழ்வுகள் - 10<br><br>பிற இட நிகழ்வுகள் - 10 |
| 7. பாடாண் | பாடப்படும் ஆண் மகனின் பெருமை கூறுதல் 10 + 10 |

ஒவ்வொரு புறத்திணையும் ஒவ்வோர் அகத்திணைக்குப் புறமாக வருகின்றது. இவற்றிடையே உள்ள ஒற்றுமையைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

**1. வெட்சி குறிஞ்சியது புறம்**

ஆநிரைகளைக் கவர்தலும் தலைவன் தலைவி களவொழுக்கத்தில் ஈடுபடுதலும் எனக் களவு வெட்சியிலும் குறிஞ்சியிலும் ஒன்றாக இருப்பதால் ஒன்றுக்கு ஒன்று அகம், புறம் ஆகும்.

| **வெட்சி - புறம்** | **குறிஞ்சி - அகம்** |
|---|---|
| மலையும் மலை சார்ந்த பகுதிகளிலும் ஆநிரைகளைக் கவர்ந்து வருதல் வெட்சித் திணை ஆகும். | மலையும் மலை பகுதிகளிலும் தலைவனும் தலைவியும் சந்தித்துக் களவொழுக்கத்தில் ஈடுபடுவது குறிஞ்சித்திணை ஆகும் |

**2. வஞ்சி முல்லையது புறம்**

தலைவன் பிரிந்து செல்வது இரண்டிலும் ஒன்றாக இருப்பதாலும் பிரிந்தபின் தலைவனும் தலைவியும் வருந்தி இருத்தல் ஒன்றாக இருப்பதாலும் வஞ்சித் திணையும் குறிஞ்சித் திணையும் ஒன்றற்கு ஒன்று அகம், புறம் ஆகும்.

| **வஞ்சி - புறம்** | **முல்லை - அகம்** |
|---|---|
| 1. வஞ்சித் திணைத் தலைவன் போரிடத் தலைவியைப் பிரிதல் | 1. முல்லைத் திணைத் தலைவன் தலைவியைப் பிரிந்து இருத்தல். |
| 2 போரிடச் சென்ற தலைவனை நினைத்துத் தலைவி வருந்தி இருத்தல். | 2. தலைவனை நினைத்துத் தலைவி வருந்தி இருத்தல் |

**3. உழிஞை மருதத்துப் புறம்**

மாற்று வேந்தன் மதிலைக் கவர முற்றுகை இடுவதும் தலைவன் பரத்தையின்பால் சென்றிருப்பதும் ஒன்றுபடுகின்றன. மதிலுக்குரிய வேந்தன் உள்ளிருத்தலும் ஊடல்கொண்ட தலைவி கதவடைத்து உள்ளிருப்பதும் ஒன்றாக இருப்பதால் உழிஞைத் திணையும் மருதத்திணையும் ஒன்றுக்கு ஒன்று அகம், புறம் ஆகும்.

| **உழிஞை - புறம்** | **மருதம் - அகம்** |
|---|---|
| 1. மதிலைக் கவர வந்த வேந்தனும் | 1. பரத்தையிடம் என்று வந்த தலைவனை |

| | |
|---|---|
| கதவடைத்து உள்ளிருக்கும் மதிலுக்கு உரிய வேந்தனும் மாறுபட்டுப் போர் புரிதலாகும். | உள்ளே விடாமல் தலைவி வாயிலை அடைத்து ஊடி இருத்தலாகும். |
| 2. மதிலுக்கு உரிய வேந்தன் கதவடைத்து உள்ளே இருக்கிறான். | 2. தலைவனோடு ஊடிய தலைவி கதவடைத்து உள்ளே இருக்கிறாள். |

**4. தும்பை நெய்தலது புறம்**

மாறுபட்ட வேந்தர்கள் மலை, காடு, வயல் போன்ற இடங்களில் போரிட இயலாது. பரந்துபட்ட மணற் பரப்பாகிய நெய்தலில் தான் போரிட முடியும். போர் முடிவதும் நெய்தலின் சிறுபொழுது எற்பாடு ஆகும். நெய்தலும் மணலும் மணல் சார்ந்த இடமுமாக இருப்பதால் தும்பைத் திணையும் நெய்தல் திணையும் ஒன்றுக்கு ஒன்று அகம், புறம் ஆகும்.

| **தும்பை - புறம்** | **நெய்தல் - அகம்** |
|---|---|
| 1. போரிடும் வேந்தர்கள் பரந்த மணற் பரப்பாகிய நெய்தல் நிலத்தில் போரிடுவர். | 1. அகத்திணையாகிய நெய்தல் மணலும் மணல் சார்ந்த இடமுமாகும். |
| 2. போர் முடிவது எற்பாடு காலம் ஆகும். | 2. நெய்தலின் சிறுபொழுது எற்பாடு ஆகும். |

**5. வாகை பாலையது புறம்**

புகழ் வேண்டிப் போரிடுவதற்கு எல்லாவகை நிலமும் பொது. அதுபோலப் பாலை எனத்தனி நிலம் இல்லை. எனவே வாகைத் திணையும் பாலைத் திணையும் ஒன்றுக்கு ஒன்று அகம், புறம் ஆகும்.

| **வகை - புறம்** | **பாலை - அகம்** |
|---|---|
| 1 . புகழ் வேண்டிப் போர் புரியும் வேந்தர், தனக்கென ஒரு நிலம் இல்லாத பாலை போலக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என எல்லா நில வேந்தரோடும் போரிடுவர். | 1. பாலை என்பதற்குத் தனியாக ஒரு நிலம் இல்லை. குறிஞ்சி, முல்லை போன்ற நிலங்கள் திரிந்ததே பாலையாகும். |
| 2. புகழ்வேண்டி மன்னர்களோடு போரிட்டுப் பிரிவர் | 2. பொருளின் பொருட்டோ, போரின் பொருட்டோ தலைவன் செல்லும் போது இருவரும் பிரிந்திருப்பர். |

**6. காஞ்சி பெருந்திணையது புறம்**

பொருந்தாத தன்மைகள் இரண்டிலும் இருப்பதால் காஞ்சியும் பெருந்திணையும் ஒன்றற்கு ஒன்று அகம், புறம் ஆகும்.

| **காஞ்சி - புறம்** | **பெருந்திணை - அகம்** |
|---|---|
| ஆனிரை கவர்தல் - மீட்டல் மதில் முற்றுகை, போர், வீரம் வெளிப் படுத்துதல் போன்ற மறக் குணங்கள் இல்லாமல் நிலையாமை பற்றிப் | ஐந்திணைக் காதல் போல அல்லாமல் இளையோரை முதியோர் விரும்புதலும் முதியோரை இளையோர் விரும்புதலும் பெருந்திணை -பொருத்தம் இல்லாமல் |

| | |
|---|---|
| பொருந்தாமல் பேசுவது. | இருப்பது. |

**7. பாடாண் கைக்கிளையது புறம்**

எல்லா நிலத்திலும் வீரம் வெளிப்படும். கைக்கிளை என்னும் ஒருதலைக் காமமும் எல்லா நிலத்திலும் நிகழும். எனவே பாடாண் திணையும் கைக்கிளைத் திணையும் ஒன்றுக்கு ஒன்று அகம், புறம் ஆகும்.

| பாடாண் - புறம் | கைக்கிளை - அகம் |
|---|---|
| 1. வீரத்தை வெளிப்படுத்துவதற்குத் தனிப்பட்ட நிலம் இல்லை. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலத்திலும் வீரம் வெளிப்படலாம். | 1. ஒருதலைக் காமமாகிய கைக்கிளை நிகழ்வதற்கும் தனிப்பட்ட நிலம் இல்லை. ஐவகை நிலத்திலும் நிகழலாம். |
| 2. பாடாண் திணையில் வீரம், புகழ் போன்றவை ஒருவனுக்கே சேர்கின்றன. | 2. கைக்கிளையிலும் காதல் தலைவியிடம் ஏற்படாமல் தலைவனிடம் மட்டுமே ஏற்படுகின்றது. |

**திணை**

| புறத்திணை | அகத்திணை |
|---|---|
| 1. வெட்சி | குறிஞ்சி |

| | |
|---|---|
| 2. வஞ்சி | முல்லை |
| 3. உழிஞை | மருதம் |
| 4. தும்பை | நெய்தல் |
| 5. வாகை | பாலை |
| 6. காஞ்சி | பெருந்திணை |
| 7. பாடாண் | கைக்கிளை |

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | புறத்திணை தொடர்பான பொதுக் கருத்துகளைத் தொகுத்து எழுதுக. | K2 | CO5 | PO4 |
| 2 | புறத்திணையின் திணைகளைப் பற்றி எழுதுக. | K4 | CO2 | PO2 |
| 3 | வெட்சித் திணை, துறைகள் குறித்து விரிவாக எழுதுக. | K3 | CO4 | PO1 |
| 4 | கரந்தைத்திணை, துறைகள் குறித்த கருத்துகளை எழுதுக. | K2 | CO1 | PO2 |
| 5 | வஞ்சித்திணை, துறைகள் தொடர்பான கருத்துகளை விளக்குக. | K5 | CO2 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | உழிஞைத் திணை, துறைகள் தொடர்பான கருத்துகளை | K2 | CO1 | PO4 |

| | | | | |
|---|---|---|---|---|
| | விளக்குக. | | | |
| 2 | தும்பைத் திணை, துறைகள் தொடர்பான கருத்துகளை எழுதுக. | K4 | CO4 | PO5 |
| 3 | வாகைத் திணை பற்றிய செய்திகளை விளக்குக. | k5 | CO2 | PO2 |
| 4 | காஞ்சித்திணை பற்றி கருத்துகளை விளக்கி எழுதுக. | K2 | CO2 | PO1 |
| 5 | பாடாண்திணை தொடர்பான கருத்துகளை விளக்கி எழுதுக. | K3 | CO3 | PO3 |

# அலகு - 3

## களவியல்

### உள்ளடக்கம்

- களவொழுக்கம் நிகழக் காரணம்
- இயற்கைப் புணர்ச்சி
- களவொழுக்கத்தில் தலைவன், தலைவியின் பண்பு
- களவொழுக்கத்தின் தொடர்ச்சி

- இயற்கைப் புணர்ச்சிக்கு முந்தைய நிலை
- களவொழுக்கத்தில் தலைவனின் கூற்று
- பாங்கர் நிமித்தம் பன்னிரண்டு
- தலைவியின் வேட்கைக் குறிப்பு
- களவொழுக்கத்தில் தலைவியின் கூற்று
- உயிரினும் சிறந்தது கற்பு
- களவொழுக்கத்தில் தோழியின் கூற்று
- களவொழுக்கத்தில் செவிலியின் கூற்று
- களவொழுக்கத்தில் நற்றாயின் கூற்று
- களவொழுக்கத்தில் நற்றாய், செவிலி, தலைவி, செவிலி, தோழி
- இருவகைக் குறியிடம்
- களவொழுக்கம் அலர் ஆதல்
- வரைவு இன்றிப் பிரிவில்லை

பழந்தமிழர் வாழ்வில் இல்லறம் என்பது முதலில் களவொழுக்கத்தில் தோன்றும். களவொழுக்கம் என்பது ஒத்த தகுதிகள் உள்ள தலைவனும் தலைவியும் சந்தித்துப் பழகுவர். அதற்குப் பிறகே கற்பு வாழ்க்கை என்னும் இல்லற வாழ்க்கை தொடரும். களவியல் தலைவன் தலைவியின் களவொழுக்க நிகழ்வுகளை விரிவாக விளக்குகின்றது.

## 1. களவொழுக்கம்

**களவும் காந்தருவமும்**

**89. இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**
**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**
**காமக் கூட்டம் காணும் காலை**
**மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்**
**துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே. 5**

இன்பம், பொருள், அறம் என்னும் மனையியல் பண்புகள் நிறைந்த குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என்னும் அன்பின் ஐந்திணை வாழ்க்கையில் களவொழுக்கம் என்பது மொழியில் மறையோரால் வரையறை செய்யப்பட்ட எட்டு வகை மணங்களுள் யாழினை உடைய காந்தருவர் செய்யும் கந்தருவ மணத்தோடு ஒத்த தன்மை உடையது.

வட நூலார் குறிப்பிடும் மணமுறைகள் பின்வருமாறு எட்டு வகையில் அமையும்.

1. பிரமம்
2. பிரசாபத்தியம்
3. ஆரிடம்
4. தெய்வம்
5. காந்தருவம்
6. ஆகரம்
7. இராக்கதம்

8. பைசாசம்

1. **பிரமம்:** ஒத்த குலத்தில் நாற்பத்து எட்டு ஆண்டு பிரமச்சரியம் கடைபிடித்தவனுக்குப் பன்னிரண்டு வயது பெண்ணைக் கொடுப்பது.

2. **பிரசாபத்தியம்:** மகளைக் கொள்ளக் கூடிய குலத்திற்கு உரியவன் கொடுத்த பரிசத்தை இரு மடங்காங்கி மகளுக்குக் கொடுத்து மணம் முடிப்பது

3. **ஆரிடம் :** தக்கான் ஒருவனுக்கு ஆவும் ஆனேறும் பொற்கோட்டுப் பொற்குளம்பினவாக அணி செய்து பெண்ணை நீர் வார்த்துக் கொடுப்பது.

4. **தெய்வம்:** வேள்வி செய்யக் கூடிய ஒருவனுக்கு வேள்வித் தீ வார்த்து அதன் முன்னர்ப் பெண்ணைக் கொடுப்பது.

5. **காந்தருவம்:** விண்ணில் வாழும் காந்தருவ குமாரரும் கன்னியரும் எதிர்ப்படும்போது தம்முள் ஒத்துக் கூடி மகிழ்தல்.

6. **ஆசுரம்:** கொல்லேறு தழுவிய வீரன் ஒருவனுக்குப் பெண்ணை மணமுடித்துக் கொடுத்தல்.

7. **இராக்கதம்:** மணப்பெண்ணை அவளின் தமரிடமிருந்து பெறாமல் வலிய பற்றிச் சென்று மணத்தல்.

8. **பைசாசம்:** மூத்தவர், மதுவுண்டு களித்தவர், துயில்பவர் போன்றோரைப் புணர்தல் இழிந்தவளை மணத்தல்.

தொல்காப்பியர் தமிழரின் களவொழுக்கத்தையும் வடநூலார் குறிப்பிடும் காந்தருவ மணத்தையும் ஒப்பிடும் நச்சினார்க்கினியர் இரண்டுக்கும் உள்ள விளக்குகின்றார்.

**களவொழுக்கம் நிகழக் காரணம்**

**90.** **ஒன்றே வேறே என்றுஇரு பால்வயின்**

**ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்**

**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப**

**மிக்கோன் ஆயினும் கடிவரை இன்றே.**

இல்லறத்தில் ஒருவனும் ஒருத்தியுமாக இணைந்து வாழ்கின்றவர்களைப் பிறவிகள்தோறும் இணைப்பதும் பிரிப்பதும் ஊழின் ஆணையாகும். தலைவனும் தலைவியும் நல்லூழின் ஆணையால் எல்லாக் குணங்களிலும் ஒத்தவராயின் எதிர்ப்பட்டு ஒருவரை ஒருவர் காண்பர். தலைவியை விடத் தலைவன் உரு, செல்வம போன்றவற்றில் உயர்ந்திருந்தாலும் குற்றம் இல்லை.

தலைவன், தலைவிக்கு இடையே உள்ள ஒத்த பண்புகளாகப் பத்து வகைகளைத் தொல்காப்பியர் பின்வரும் நூற்பாவில் குறிப்பிடுகின்றார்.

**பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு**

**உருவு நிறுத்த காம வாயில்**

**நிறையே அருளே உணர்வொடு திருஎன**

**முறைஉறக் கிளந்த ஒப்பினது வகையே.**

**(தொல்காப்பியம்-பொருளதிகாரம்.269)**

ஒத்த பிறப்பு, ஒழுக்கம், ஆண்மை, ஆண்டு, அழகு, அன்பு, நிறை, அருள், அறிவு, செல்வம் என்பவையே ஒத்த பண்புகளாகும்.

**2. இயற்கைப் புணர்ச்சி**

ஒத்த பண்புள்ள தலைவனும் தலைவியும் எதிர்ப்பட்டு ஒருவரை ஒருவர் விரும்பிக் களவொழுக்கம் மேற்கொள்வது இயற்கைப் புணர்ச்சி எனப்படும்.

**ஐயப் படுதல்**

**91.** **சிறந்துழி ஐயம் சிறந்தது என்ப**

**இழிந்துழி இழிவே சுட்ட லான.**

ஒத்த தலைவனும் தலைவியும் எதிர்ப்படும்போது அவர்களிடையே ஒருவர்மேல் ஒருவர்க்கு ஐயம் உண்டாயின் அதுவே களவொழுக்கத்திற்குச் சிறந்ததாகும். ஐயம் வரினே நிலைமை தெரியும். குறைபாடு தெரியின் களவொழுக்கம் சிறக்காது.

அழகு மிக்க இவள் தெய்வ மகளோ? அழகு மயிலோ? காதணி பூண்ட நங்கையோ? என் நெஞ்சம் மயங்கித் தவிக்கிறது. இவ்வாறு எதிர்ப்பட்ட தலைவியைக் கண்டு தலைவன் ஐயப்படுவதைத் திருவள்ளுவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை**

**மாதர்கொல் மாலும்என் நெஞ்சு. (திருக்.108)**

**ஐயம் தெளிதல்**

**92.** **வண்டே இழையே வள்ளி பூவே**

**கண்ணே அலமரல் இமைப்பே அச்சம்என்று**

**அன்னவை பிறவும் ஆங்குஅவண் நிகழ**

**நின்றவை களையும் கருவி என்ப**

அவள் அணிந்துள்ள பூக்களின்மேல் வண்டுகள் மொய்க்கின்றன் உடம்பில் அணிகலன்கள் உள்ளன் மார்பிலும் தோளிலும் வள்ளிக்கொடி ஓவியம்

வரையப்பட்டுள்ளது சூடியுள்ள மாலையில் உள்ள பூ வாடி இருக்கிறது் கண்கள் சுழன்று இமைக்கின்றன் அச்சப்படுவது அசைவில் தெரிகிறது. உடல் வியர்த்தல், கால் நிலத்தில் படுதல் போன்றவற்றால் மண்ணுலக மகவே எனத் தெளியலாம் எனப் புலவர் குறிப்பர்.

**களவொழுக்கத்தின் குறிப்பு**

**93. நாட்டம் இரண்டும் அறிவு உடம்படுத்தற்குக்**

**கூட்டி உரைக்கும் குறிப்புரை ஆகும்.**

தலைவன், தலைவி இருவரின் கண்கள் இரண்டும் அவர்களது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தப் பார்த்துக் கொள்ளுமாயின் அதுவே களவொழுக்க நாட்டத்திற்குக் குறிப்பு மொழியாகும்.

**களவொழுக்கத்தின் தொடர்ச்சி**

**94. குறிப்பே குறித்தது கொள்ளு மாயின்**

**ஆங்கவை நிகழும் என்மனார் புலவர்.**

தலைவனின் மனக் குறிப்பை எதிர்ப்பட்ட தலைவியின் கண்ணும் கருத்தும் உடன்பட்டால் களவொழுக்கம் தொடரும் எனப் புலவர் குறிப்பர்.

**தலைமகனின் பண்பு**

**95. பெருமையும் உரனும் ஆடூஉ மேன.**

களவொழுக்கத்தில் தலைவி விரும்பத்தக்க தலைவன், பெருமை மிக்கவனாகவும் உள்ளத்தில் உறுதி உள்ளவனாகவும் இருத்தல் முதன்மை ஆகும்.

**தலைவியின் பண்பு**

**96.** **அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்**

**நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப.**

அச்சப்படுதல் நாணம் அடைதல், பேதைமையுடன் இருத்தல் என்னும் இம்மூன்று பண்புகளும் பெண்ணிற்கு உரியவையாகக் குறிப்பர்.

**இயற்கைப் புணர்ச்சிக்கு முந்தையநிலை**

**97.** **வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்**

**ஆக்கம் செப்பல் நாணுவரை இறத்தல்**

**நோக்குவ எல்லாம் அவையே போறல்**

**மறத்தல் மயக்கம் சாக்காடு என்றுஅச்**

**சிறப்புடை மரபினவை களவென மொழிப.**

தலைவன், தலைவியின் நோக்குவழி இசைவு ஏற்பட்டபின் இருவருக்கும் களவொழுக்கத்தில் அளவிலா விருப்பம் உண்டாதல், இடைவிடாது காதல் உணர்வையே நினைத்துக் கொண்டிருத்தல், உடல் மெலிதல், உறக்கம் வாராது தவித்தல், நாணத்தை விட்டு நிறை அழிதல், பார்ப்பவை எல்லாம் தாம் விரும்பியவையாகவே தெரிதல், தன்நிலை மறந்து பித்துப் பிடித்த நிலையில் இருத்தல் மயக்கநிலையை அடைதல், இறந்துபட நினைத்தல் என இவை அனைத்தும் களவொழுக்க எண்ணத்தால் ஏற்படும் நிலைகள் ஆகும்.

**தலைவன் செயல்**

**98.** **முன்னிலை ஆக்கல் சொல்வழிப் படுத்தல்**
**நன்னயம் உரைத்தல் நகைநனி உறாஅ**
**அந்நிலை அறிதல் மெலிவுவிளக் குறுத்தல்**
**தன்னிலை உரைத்தல் தெளிவுஅகப் படுத்தல்என்று**
**இன்னவை நிகழும் என்மனார் புலவர்.**

முன்னால் நின்று பேசாத வண்டு, நெஞ்சு போன்றவற்றை முன்னிலையாகக் கொண்டு தன் உள்ளக் கிடக்கையைக் கூறுவது அவை சொல்லாதவற்றைச் சொல்வது போலத் தானே பேசுவது தலைவி வெளிப்படையாக நகைக்காத புன்னகையை அறிந்து கொள்வது தலைவியின் பிரிவால் தன் உள்ள மெலிவைக் குறிப்பாக உணர்த்துவது தனது உள்ளத்து வேட்கைப் பெருக்கைத் தலைவியிடம் கூறுவது தலைவியின் ஆவலை அறிந்து அதற்கு ஏற்றாற்போல அவள் மகிழுமாறு பேசுவது போன்றவை இயற்கைப் புணர்ச்சியில் தலைவனின் செயல்களாக வெளிப்படும்.

**3. களவின்கண் தலைவன் கூற்று**

**99.** **மெய்தொட்டுப் பயிறல் பொய்பா ராட்டல்**
**இடம்பெற்றுத் தழாஅல் இடையூறு கிளத்தல்**
**நீடுநினைந்து இரங்கல் கூடுதல் உறுதல்**
**சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழித்**
**தீராத் தேற்றம் உளப்படத் தொகைஇப்**

**பேராச் சிறப்பின் இருநான்கு கிளவியும்**

**பெற்றவழி மகிழ்ச்சியும் பிரிந்தவழிக் கலங்கலும்**

**நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைப்பினும்**

**குற்றம் காட்டிய வாயில் பெட்பினும்**

**பெட்டவாயில் பெற்று இரவுவலி உறுப்பினும்**

**ஊரும் பேரும் கெடுதியும் பிறவும்**

**நீரிற் குறிப்பின் நிரம்பக் கூறித்**

**தோழியைக் குறையுறும் பகுதியும் தோழி**

**குறையவள் சார்த்தி மெய்யுறக் கூறலும்**

**தண்டாது இரப்பினும் மற்றைய வழியும்**

**சொல்லவள் சார்த்தலின் புல்லிய வகையினும்**

**அறிந்தோள் அயர்ப்பின் அவ்வழி மருங்கில்**

**கேடும் பீடும் கூறலும் தோழி**

**நீக்கலின் ஆகிய நிலைமையும் நோக்கி**

**மடல்மா கூறும் இடனுமார் உண்டே.**

இந்நூற்பாவில் இயற்கைப் புணர்ச்சியில் தலைவனுக்கான கூற்றாகக் காணப்படும் செய்திகளை மூன்று வகையாகப் பகுத்துக் கொள்ளலாம்.

**1. இயற்கைப் புணர்ச்சியில் முதல் நிலை (8)**

இயற்கைப் புணர்ச்சியில் தலைவனும் தலைவியும் இணையத் தொடங்குமுன் எட்டு வகையான நிகழ்வுகள் காணப்படுகின்றன.

1. மெய்தொட்டுப் பயிறல்
2. பொய் பாராட்டல்
3. இடம் பெற்றுத் தழாஅல்
4. இடையூறு கிளத்தல்
5. நீடு நினைந்து இரங்கல்
6. கூடுதல் உறுதல்
7. சொல்லிய நுகர்ச்சி
8. தீராத் தேற்றம்

1. **மெய் தொட்டுப் பயிறல்:** தலைவன் தலைவியுடன் கூடுவதற்கு முன்னர் அவள் அச்சம், நாணம், மடம் போன்றவற்றைத் தவிர்ப்பதற்காக அவளுடைய உடலைத் தொட்டுப் பழகுதல்.

2. **பொய் பாராட்டல்:** கற்பனை நயம் தோன்றத் தலைவியின் நெற்றி, கூந்தல் போன்றவற்றைப் பாராட்டிக் கூறுதல்

3. **இடம் பெற்றுத் தழாஅல்:** பொய் பாராட்டிய பிறகு அதனைப் பற்றுக் கோடாகக் கொண்டு தலைவியைத் தழுவுவதற்காக மேலும் பாராட்டுதல்.

4. **இடையூறு கிளத்தல்:** தலைவனின் செய்கைகளாலும் பேச்சாலும் நாணமுற்ற தலைவி கண்புதைத்துக் கொம்பிலும் கொடியிலும் சார்ந்து நிற்றல்.

5. **நீடு நினைந்து இரங்கல்:** தலைவியுடன் மெய்யுறு புணர்ச்சி நிகழ்வதற்குக் காலம் கடந்து கொண்டிருப்பதை எண்ணித் தலைவன் வருந்துதல்.

6. **கூடுதல் உறுதல்:** தலைவன் ஆற்றாமையில் தவிப்பதைக் கண்ட தலைவி நாணத்தை விலக்கிப் புணர்ச்சிக்கு உடன்படுதல்.

7. **சொல்லிய நுகர்ச்சி:** தலைவன் தான் எண்ணியபடியே முதன் முதலாகத் தலைவியுடன் கூடி மகிழ்தல்.

8. **தீராத் தேற்றம்:** இயற்கைப் புணர்ச்சிக்குப் பிறகு இனி எப்போதும் தலைவியைப் பிரியேன் எனத் தலைவன் சூளுரைத்தல்.

மேற்குறிக்கப்பட்ட எட்டு வகைகளும் தலைவன் தலைவியின் புணர்ச்சிக்கான தொடக்கம் முதல் கூடுவது வரையிலான நிகழ்வுகளை விளக்குகின்றன.

**2. இயற்கைப் புணர்ச்சிக்குப் பிந்தைய நிலை (4)**

தலைவன், தலைவிக்கும் இடையே இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த பிறகு, தலைவனின் மன உணர்வுகளைப் பின்வரும் நான்கு வகைகளும் விளக்குகின்றன.

1. பெற்றவழி மகிழ்ச்சி
2. பிரிந்தவழிக் கலங்கல்
3. நிகழ்பவை உரைத்தல்
4. குற்றம் காட்டிய வாயில் பெட்பு

1. **பெற்றவழி மகிழ்ச்சி:** அரிதாகும் என நினைத்த தலைவியின் கூட்டம் விரைந்து கிடைத்ததை எண்ணித் தலைவன் மகிழ்ச்சி அடைதல்.

2. **பிரிந்தவழிக் கலங்கல்:** தலைவியுடன் கூடி மகிழ்ந்த தலைவன் அவளைப் பிரிந்த பிறகு இனி அவளைக் கூடுதல் அரிது என வருந்துதல்.

3. **நிகழ்பவை உரைத்தல்:** தலைவன் தன் மன நிலையைப் பாங்கனிடம் கூற, அவன் பல நற்குணங்களைக் கூறினாலும் தலைவன் தன் நிலையையே கூறுதல்.

4. **குற்றம் காட்டிய வாயில் பெட்பு:** தலைவன் தன் இடர்ப்பாடுகளை எடுத்துக் கூறியபோது பாங்கன் தலைவனின் துயர் துடைக்க விருமபுதல்.

இவ்வாறு இயற்கைப் புணர்ச்சியின் பிரிவுக்குப் பிறகு தலைவன் பலவற்றை எண்ணி இரங்கலும் பாங்கன் அவற்றைக் களைய முற்படுதலும் நான்கு பாகுபாட்டில் விளக்கப்பட்டுள்ளன.

**3. தலைவன் தோழியிடம் நிகழ்த்தும் கூற்று (7)**

இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் தலைவியை நினைந்து வருந்துவதும் தோழியின் வழியாக அவளை அடைய முற்படுவதும் மின்வரும் ஏழு பகுதிகளில் விளக்கப்பட்டுள்ளன.

1. இரவு வலியுறுப்பு
2. நீரிற் குறிப்பது
3. மெய்யுறக் கூறல்
4. தண்டாது இரத்தல்
5. புல்லிய வகை
6. கேடும் பீடும் கூறல்
7. மடல்மா கூறும் இடம்

1. **இரவு வலியுறுப்பு:** இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் பிரிந்த தலைவியைக் கூறுவதற்காகப் பலரை ஆராய்ந்து இறுதியில் தோழியை வாயிலாகப் பெறுதல்.

2. **நீரிற் குறிப்பது:** வாயிலாகத் தோழியை அடைந்த தலைவன் அவன் வழியாகத் தலைவி பற்றிய எல்லாக் குறிப்புகளையும் அறிய முற்படுதல்.

3. **மெய்யுறக் கூறல்:** தான் கூறக் கூடிய அனைத்தும் தலைவியின் பாற்பட்டதே எனத் தோழி அறியுமாறு தலைவன் கூறுதல்.

4. **தண்டாது இரத்தல்:** வாயிலாக அமைந்த தோழியிடம் தலைவன் இரவுக் குறியிலும் பகற் குறியிலும் தலைவியைக் காண விரும்புவதைக் கூறுதல்.

5. **புல்லிய வகை:** தலைவன் தலைவியைக் கூடப் பல்வேறு வழிகளில் தோழியை நாடியதை அறிந்த தலைவி தானே புணர்ச்சிக்கு உடன்படுதல்.

6. **கேடும் பீடும் கூறல்:** தலைவன் பலமுறை இரந்தும் தலைவியை இயற்கைப் புணர்ச்சிக்கு அழைத்து வாராத நிலைக்குக் காரணம் மறதியும் இல்லத்தில் இற்செறிப்புமே எனக் கூறுதல்.

7. **மடல்மா கூறும் இடம்** : தலைவனின் இரங்கலுக்கு இணங்காமல் இருந்தால் மடலேறுவது தவிர வேறு வழி இல்லை என அவன் தோழியிடம் கூறுதல்.

**தலைவன் தோழியிடம் மேலும் பேசும் சூழல்**

**100.** **பண்பின் பெயர்ப்பினும் பரிவுற்று மெலியினும்**

**அன்புற்று நகினும் அவள்பெற்று மலியினும்**

**ஆற்றிடை உறுதலும் அவ்வினைக்கு இயல்பே**

தலைவியின் இளமைப் பண்பைக் கூறித் தலைவனை நீங்கிப் போகுமாறு கூறும்போது தலைவன் தலைவியை எண்ணி உடல் மெலிந்தபோதும் தலைவனின்

மெலிந்த நிலை அறிந்து நகைக்கும் போதும் தலைவியைச் சந்திக்கத் தோழி உடன்பட்ட போதும் தலைவன் செல்லும் வழியில் உள்ள இடையூறுகளைக் கூறும்போதும் என ஐந்து சூழல்களில் தலைவனுக்குத் தோழியிடம் கூற்று நிகழும்.

**பாங்கர் நிமித்தம் பன்னிரண்டு**

**101. பாங்கர் நிமித்தம் பன்னிரண்டு என்ப.**

பாங்கன் - பாங்கி எனப்படும் பாங்கர் நிமித்தமாக- காரணமாகக் கூடும் கூட்டம் பன்னிரண்டு எனக் கூறுவர்.

**பாங்கர் நிமித்தம் பன்னிரண்டு**

1. காட்சி
2. ஐயம்
3. தெளிவு
4. வேட்கை
5. ஒருதலை உள்ளுதல்
6. மெலிதல்
7. ஆக்கம் செப்பல்
8. நாணுவரை இறத்தல்
9. நோக்குவ அவையே போறல்

10. மறத்தல்

11. மயக்கம்

12. சாக்காடு

**கைக்கிளைக்கு உரியவை**

**102. முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே.**

பன்னிரண்டு நிமித்தங்களுள் காட்சி, ஐயம், தெளிவு என்னும் மூன்றும் கைக்கிளைத் திணைக்கு உரியவை ஆகும்.

**பெருந்திணைக்கு உரியவை**

**103. பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே.**

பன்னிரண்டு வகை நிமித்தங்களுள் ஈற்றில் வரும் நோக்குவ அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு என்னும் நான்கும் பெருந்திணைக்கு உரியவை ஆகும்.

**ஐந்திணைக்கும் உரியவை**

**104. முதலொடு புணர்ந்த யாழோர் மேன**

**தவலரும் சிறப்பின் ஐந்நிலம் பெறுமே.**

நிலமும் பொழுதுமாகிய முதற்பொருளுடன் தொடர்புடைய களவு என்னும் யாழோர் (காந்தருவர்) ஒழுக்கம் ஐந்திணையோடு ம.தொடர்புடையதாம்.

வேட்கை, ஒருதலை உள்ளுதல், மெலிதல், ஆக்கம் செப்பல், நாணுவரை இறத்தல் ஐந்திணைக் களவொழுக்கத்திற்கு உரியவை ஆகும்.

இம்மூன்று நூற்பாவில் பகுக்கப்பட்டுள்ள பாங்கர் நிமித்தங்கள் பன்னிரண்டு பின்வருமாறு ஏழு திணைகளுக்கும் பட்டியல் இடலாம்.

| திணை | நிமித்தம் | |
|---|---|---|
| கைக்கிளை | காட்சி, ஐயம், தெளிவு | 3 |
| பெருந்திணை | நோக்குவ அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு | 4 |
| ஐந்திணை | வேட்கை, ஒருதலை உள்ளுதல், மெலிதல், ஆக்கம் செப்பல், நாணுவரை இறத்தல் | 5 |

**மேலும் தலைவன் கூற்று**

**105.** **இருவகைக் குறிபிழைப்பு ஆகிய இடத்தும்**
**காணா வகையின் பொழுதுநனி இகப்பினும்**
**தான்அகம் புகாஅன் பெயர்தல் இன்மையின்**
**காட்சி ஆசையின் களம்புக்குக் கலங்கி**
**வேட்கையின் மயங்கிக் கையறு பொழுதினும்**

**புகாஅக் காலைப் புக்கெதிர்ப் பட்டுழிப்**
**பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்**
**வேளாண் எதிரும் விருப்பின் கண்ணும்**
**தாளாண் எதிரும் பிரிவி னானும்**
**நாணு நெஞ்சு அலைப்ப விடுத்தல் கண்ணும்**

**வரைதல் வேண்டித் தோழி செப்பிய**

**புரைதீர் கிளவி புல்லிய எதிரும்**

**வரைவு உடம்படுதலும் ஆங்கதன் புறத்தும்**

**புரைபட வந்த மறுத்தலொடு தொகை இக்**

**கிழவோன் மேன என்மனார் புலவர்.**

மேலே குறிக்கப்பட்டுள்ள நூற்பாவில் பத்து வகையான தலைவன் கூற்றுகள் குறிக்கப்பட்டுள்ளன.

1. இருவகைக் குறிபிழைப்பு
2. காணா வகை
3. கையறு பொழுது
4. விருந்தின் பகுதி
5. வேளாண் எதிர் விருப்பு
6. தாளாண் எதிர் பிரிவு
7. நெஞ்சு அலைப்ப விடுத்தல்
8. புல்லிய எதிர்
9. வரைவு உடம்படுதல்
10. புரைபட வந்த மறுத்தல்

1. **இருவகைக் குறிபிழைப்பு**: தலைவனும் தலைவியும் சந்திக்கக் குறித்த பகல், இரவுக் குறி இடம் தவறுதலாகும்போது தலைவன் கூற்று நிகழ்தல்.

2. **காணா வகை**: குறித்த இடத்திற்குக் குறித்த நேரத்தில் தலைவி வாராதபோது தலைவனின் கூற்று நிகழ்தல்.

3. **கையறு பொழுது:** தலைவியைக் காணும் வேட்கையில் குறியிடத்திற்குச் சென்று அங்கு அவளைக் காணாதபோது கலங்கியும் மயங்கியும் போன நிலையில் பேசுதல்.

4. **விருந்தின் பகுதி:** தலைவியின் இல்லத்தில் விருந்து உண்ணும் சமயத்தில் அவளைச் சந்திக்கும்போது பேச்சு நிகழ்தல்.

5. **வேளாண் எதிர் விருப்பு:** தலைவி தலைவனுக்கு விருந்து செய்ய விரும்பும் நேரத்தில் தோழி அவனை ஏற்றுக் கொள்ளும் இடத்தில் தலைவன் பேசுதல்.

6. **தாளாண் எதிர் பிரிவு**: வாள் வலிமையைக் காட்டுவதற்காகத் தற்காலிகமாகப் பிரியும்போது தலைவன் கூற்று நிகழ்தல்.

7. **நெஞ்சு அலைப்ப விடுத்தல்:** களவொழுக்கத்தில் தலைவியைச் சந்தித்தபோது அவளுடைய நாணம் நீங்காமல் இருந்த நிலையில் தலைவன் பேசுதல்.

8. **புல்லிய எதிர்:** திருமணம் நிகழ்வதற்காகத் தோழி பொய்யும் மெய்யும் கலந்து கூறும்போது தலைவன் மறுமொழி கூறுதல்.

9. **வரைவு உடம்படுதல்:** களவொழுக்கத்தின் காலம் நீண்டு கொண்டிருக்கும் போதும் உடன் மணம் செய்ய வேண்டும் போதும் உடன்பட்டுப் பேசுதல்.

10. **புரைபட வந்த மறுத்தல்:** திருமணத்திற்கு உடன்படாது இன்னும் காலம் நீட்டிக்க நினைத்த போது தலைவன் கூற்று நிகழ்தல்.

மேற்குறிப்பிட்டவாறு களவொழுக்கத்தில் தலைவன் கூற்று நிகழும் என்பது இந்நூற்பாவில் விளக்கப்பட்டுள்ளது.

**தலைவியின் வேட்கைக் குறிப்பு**

**106.** **காமத் திணையில் கண்நின்று வரூஉம்**

**நாணும் மடனும் பெண்மைய ஆகலின்**

**குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை**

**நெறிப்பட வாரா அவள் வயினான.**

அகத்திணை ஒழுக்கத்தில் பெண்மைக்கு அடிப்படையான பண்புகள் நாணமும் பேதைமையும் ஆகும். எனவே, தலைவியின் காம வேட்கை வெளிப்படத் தோன்றாமல் குறிப்பாலும் இடத்தாலும் மட்டுமே வெளிப்படும்.

**காமத்திணை-அகத்திணை, மடன்-பேதைமை**

107. **காமம் சொல்லா நாட்டம் இன்மையின்**

**ஏமுற இரண்டும் உளவென மொழிப.**

காமத்தை வெளிப்படுத்தாத கண்கள் இவ்வுலகத்தில் இல்லை நாணமும் பேதைமையும் பாதுகாவலாக இருக்கக் கண்கள் காமத்தை வெளிப்படுத்தும் என்பர்.

108. **சொல்எதிர் மொழிதல் அருமைத்து ஆகலின்**

**அல்ல கூற்றுமொழி அவள் வயினான.**

புணர்ச்சிக்காகத் தலைவன் வேட்கையை வெளிப்படையாக உணர்த்துவதைப் போன்று தலைவி கூறுவது அரிதாகும். அவன் எதிர்மறை மொழியும் செயலுமே உடன்படுதலை உணர்த்தும்.

**தலைவியின் கூற்று**

109. **மறைந்து அவன் காண்டல் தன்காட்டுறுதல்**
**நிறைந்த காதலில் சொல்லெதிர் மழுங்கல்**
**வழிபாடு மறுத்தல் மறுத்துஎதிர் கோடல்**
**பழிதீர் முறுவல் சிறிதே தோற்றல்**
**கைப்பட்டுக் கலங்கினும் நாணுமிக வரினும்**

இட்டுப்பிரிவு இரங்கினும் அருமை செய்து அயர்ப்பினும்
வந்தவழி எள்ளினும் விட்டுஉயிர்த்து அழுங்கினும்
நொந்துதெளிவு ஒழிப்பினும் அச்சம் நீடினும்
பிரிந்தவழிக் கலங்கினும் பெற்றவழி மலியினும்
வருந்தொழிற்கு அருமை வாயில் கூறினும்

கூறிய வாயில் கொள்ளாக் காலையும்
மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழித் தோழிக்கு
நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்தலும்
உயிராக் காலத்து உயிர்த்தலும் உயிர்செல
வேற்று வரைவு வரின்அது மாற்றுதற் கண்ணும்

நெறிபடு நாட்டத்து நிகழ்ந்தவை மறைப்பினும்
பொறியின் யாத்த புணர்ச்சி நோக்கி
ஒருமைக் கேண்மையின் உறுகுறை தெளிந்தோள்
அருமை சான்ற நாலிரண்டு வகையின்
பெருமை சான்ற இயல்பின் கண்ணும்

பொய்தலை அடுத்த மடலின்
கண்ணும் கையறு தோழி கண்ணீர் துடைப்பினும்
வெறியாட்டு இடத்து வெருவின் கண்ணும்
குறியின் ஒப்புமை மருடற் கண்ணும்
வரைவு தலைவரினும் களவு அறிவுறினும்

தமர் தன்காத்த காரண மருங்கினும்

**தன்குறி தள்ளிய தெருளாக் காலை**
**வந்தவன் பெயர்ந்த வறுங்களம் நோக்கித்**
**தன்பிழைப் பாகத் தழீஇத் தேறலும்**
**வழுவின்று நிலைஇய இயற்படு பொருளினும்**

**பொழுதும் ஆறும் புரைவ தன்மையின்**
**அழிவு தலைவந்த சிந்தைக் கண்ணும்**
**காமம் சிறப்பினும் அவனளி சிறப்பினும்**
**ஏமம் சான்ற உவகைக் கண்ணும்**
**தன்வயின் உரிமையும் அவன்வயின் பரத்தையும்**
**அன்னவும் உளவே ஓரிடத்து ஆன.**

இவ்வாறு தலைவியின் கூற்றாக மேலும் முப்பத்தாறு வகைகள் காணப்படுகின்றன.

1. மறைந்து அவன்காண்டல்
2. தன்காட்டுறுதல்
3. சொல்லெதிர் மழுங்கல்
4. வழிபாடு மறுத்தல்
5. மறுத்து எதிர்கோடல்
6. முறுவல் சிறிதே தோற்றல்
7. கைபட்டுக் கலங்கல்
8. நாணுமிக வருதல்

9. இட்டுப்பிரிவு இரங்கல்

10. அருமை செய்து அயர்ப்பு

11. வந்தவழி உள்ளுதல்

12 விட்டு உயிர்த்து அழுங்குதல்

13. நொந்து தெளிவு ஒழித்தல்

14. அச்சம் நீடுதல்

15. பிரிந்தவழிக் கலங்கல்

16. பெற்றவழி மலிதல்

17. வாயில் கூறுதல்

18. கூறிய வாயில் கொள்ளாமை

19. மனைப்பட்டுக் கலங்குதல்

20. உயிர்செல உயிர்த்தல்

21. வேற்று வரைவு... மாற்றுதல்

22. நிகழ்ந்தவை மறைத்தல்

23. ஒருமைக் கேண்மையின் உறுகுறை

24. பொய்தலை அடுத்த மடல்

25. கண்ணீர் துடைத்தல்

26. வெறியாட்டு இடம்

27. குறியின் ஒப்புமை மருளுதல்

28. வரைவு தலை வருதல்

29. களவு அறிவுறுத்தல்

30. காரண மருங்கு

31. தழீஇத் தேறல்

32. இயற்படு பொருள்

33. அழிவு தலைவந்த சிந்தை

34. காமம் சிறத்தல்

35. அவன் அளி சிறத்தல்

36. ஏமம் சான்ற உவகை

1. **மறைந்து அவன் காண்டல்:** புணர்ச்சியில் ஈடுபட்டுப் பிரிந்து செல்லும் தலைவனை மறைந்திருந்து அவன் காணாதவாறு பார்த்தல்.

2. **தன் காட்டுறுதல்:** தலைவனை அவன் காணாதவாறு மறைந்திருந்து பார்த்தாலும் தான் பொலிவு இழந்து இருப்பதை அவன் காண நிற்றல்.

3. **சொல்லெதிர் மழுங்கல்:** தலைவியின்பால் மயங்கித் தலைவன். பல்வேறு காதல் மொழிகளைக் கூறும்போது அவள் எதுவும் பேசாதிருத்தல். (இம்மூன்று வகைகளிலும் தலைவியின் கூற்று நிகழ்வதில்லை

**4. வழிபாடு மறுத்தல்:** தலைவியின் வேட்கைக் குறிப்பினை அறிந்த தலைவன் அவளை நெருங்கிச் செல்லும்போது உடன்படாது மறுத்து விலகிச் செல்லுதல்.

**5. மறுத்து எதிர்கோடல்:** முதற்கண் தலைவி தலைவனின் எண்ணத்திற்கு மறுப்பாக நடந்து கொண்டாலும் பின்னர் ஏற்றுக் கொண்டு நெருங்குதல்.

6. **முறுவல் சிறிதே தோற்றல்:** காம வேட்கையைத் தலைவி முழுவதுமாக வெளிப்படுத்தாமல் புன்முறுவல் வாயிலாக வெளிக்காட்டுதல்.

7. **கைபட்டுக் கலங்குதல்:** எதிர்ப்பட்ட தலைவனின் கைப்பட்டபின் தலைவி அதனை விரும்பினாலும் மனதிற்குள் கலக்கத்தோடு நிற்றல்.

**8. நாணுமிக வருதல்:** தலைவனின் கைக்குள் அகப்பட்டதும் ஏற்கனவே உள்ள நாணத்திற்கு மேலாக அதிகம் நாணம் அடைதல்.

**9. இட்டுப் பிரிவு இரங்கல்:** தலைவனின் கையகப்பட்ட பின் அதனை அதிகம் விரும்பிய தலைவி அவன் பிரிந்து விடுவானோ என எண்ணி வருந்துதல்.

**10. அருமை செய்து அயர்ப்பு:** தலைவனுடனான களவுக் காதலுக்குத் தடையாகக் காவல் அதிகமானதை எண்ணித் தலைவி சோர்ந்து போதல்.

**11. வந்தவழி உள்ளுதல்:** களவொழுக்கத்திற்குத் தலைவன் வருவதால் ஊரில் பழிச் சொல்லாகிய அலர் வரும் எனத் தலைவி நினைத்தல்.

**12. விட்டு உயிர்த்து அழுங்குதல்:** ஊரில் அலர் தோன்றினால் தனக்கு ஏற்படும் பழிச் சொல்லை நினைத்துத் தலைவி வருந்துதல்.

**13. நொந்து தெளிவு ஒழித்தல்:** மணம் செய்யும் காலத்தைத் தள்ளிப் போடுவதால் தனக்கு ஏற்படும் இன்னலைக் கூற தலைவன் உறுதி மொழி கூறுதல்.

**14. அச்சம் நீடுதல்:** விரைவில் மணந்து கொள்ளாமல் தலைவன் தொடர்ந்து களவொழுக்கத்திற்கு வருவதால் தலைவி அச்சம் அடைதல்.

**15. பிரிந்தவழிக் கலங்கல்:** தலைவன் களவொழுக்கத்திற்குப் பின் பிரிந்து போகும்போது தலைவி மிகவும் மனம் கலங்கிப் போதல்.

**16. பெற்றவழி மலிதல்:** தலைவன் மீண்டும் களவொழுக்கத்திற்கு வரும்போது தலைவி அவனைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைதல்.

17. **வாயில் களவொழுக்கம் கூறுதல்:** அலராகி வெளிப்பட்டிருப்பதால் காவல் மிகுந்திருப்பதையும் தலைவனின் வருகை அரிதென்றும் தோழி தலைவியிடம் கூறுதல்,

18. **கூறிய வாயில் கொள்ளாமை:** காவல் மிகுதியால் தலைவனின் வருகைக்குச் சாத்தியமில்லை எனத் தோழி கூறியபோது தலைவி அதை ஏற்றுக் கொள்ளாமை.

19. **மனைப்பட்டுக் கலங்குதல்:** காப்பின் மிகுதியால் மனையில் அடைபட்டுக் கிடக்கும் போது கலங்கிய தலைவி தான் தலைவனை மறைவிடத்தில் முன்பு சந்தித்ததைத் தோழியிடம் கூறுதல்.

20. **உயிர் செல உயிர்த்தல்:** தலைவனிடம் தலைவி கொண்டுள்ள உறவை யாரும் அறியாதபோது தன் ஆற்றாமையைத் தானே தலைவி கூறுதல்.

21. **வேற்று வரைவு- மாற்றுதல்:** களவொழுக்கத்தில் ஈடுபட்டுள்ள தலைவியை மாற்றார் மணமுடிக்க வரும்போது அதனை மாற்ற முற்படுதல்.

22. **நிகழ்ந்தவை மறைத்தல்:** தலைவனுடன் கொண்டிருந்த களவொழுக்கத்தால் உடம்பில் நிகழ்ந்துள்ள மாற்றங்களைத் தோழியும் தலைவியும் பிறர் அறியாதவாறு மறைத்தல்.

23. **ஒருமைக் கேண்மையின் உறுகுறை:** தலைவனும் தலைவியும் களவொழுக்கத்தில் ஈடுபட்டு ஒன்றுபட்ட பிறகு தலைவன் மணம் பற்றிக் கூறியபோது எட்டுவகை மெய்ப்பாடும் தன்னிடம் இருப்பதாகத் தலைவி நினைத்தல். இவற்றோடு இடையில்

தலைவியின் மெய்ப்பாட்டு நிலைகளையும் இளம்பூரணர் (தொல்.பொருள். 267) குறிப்பிடுகின்றார்.

1. களவொழுக்கம் நிகழும்போது நிலவு வெளிப்பாடு, காவலர், துஞ்சாமை, தாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, தலைவன் குறியிடம் வர இடையீடு.
2. உள்ள உணர்வுகளைப் பிறர் அறியா வண்ணம் மெய்யில் நிறுத்துதல்.
3. பிறர் அறிவர் என்னும் அச்சத்தால் தலைவி குறியிடம் செல்லாமை.
4. தலைவனின் கூடலுக்கு உடன்படாமை.
5. தலைவனின் தூதை ஏற்றல்.
6. உறக்கம் கொள்ளாதிருத்தல்.
7. அன்பு எல்லை மீறுதல்.
8. உள்ளக் கருத்தை வெளிப்படுத்தாமை.

**24. பொய்தலை அடுத்த மடல்:** தலைவன் மடல் ஏறுவதாகக் கூறியதால் அது பொய்யான செய்தி எனத் தலைவி நினைத்தல்.

25. **கண்ணீர் துடைத்தல்:** செய்வது அறியாது தவித்த தோழி தலைவியின் கண்ணீரைத் துடைத்து ஆறுதல் கூறுபவளுக்குத் தலைவி மொழிதல்.

26. **வெறியாட்டு இடம்:** தலைவியிடம் காணப்படும் மாறுபாட்டைக் கண்டு மனையில் உள்ளோர் வேலன் வெறியாட்டுக்கு ஏற்பாடு செய்தபோது தலைவி அஞ்சுதல்.

27. **குறியின் ஒப்புமை மருளுதல்:** இரவுக் குறியாகத் தலைவன் செய்ததாக எண்ணி அங்குச் சென்றபோது அவ்வாறு இல்லாதது கண்டு மருட்சி அடைதல்.

28. **வரைவு தலை வருதல்:** தலைவன் விரைவில் மணம் முடிக்க வருவதை அறிந்த தலைவி மகிழ்ச்சி அடைதல்.

29. **களவு அறிவுறுத்தல்:** தலைவன் தலைவியின் களவொழுக்கத்தைப் பிறர் அறிந்து கொண்ட பிறகு தலைவன் குறியிடத்திற்குத் தலைவி செல்லாமை.

30. **காரண மருங்கு:** தலைவியின் களவொழுக்கத்தை மனையில் உள்ளோர் அறிந்த பிறகு தலைவியின் கூற்று நிகழ்தல்.

31. **தழீஇத் தேறல்:** மனையின் இற்செறிப்பால் குறியிடத்திற்குச் செல்ல முடியாத நிலையில் தலைவி, தலைவன் குறியிடத்திற்கு வந்ததைத் தோழிவழி அறிந்து நிலம் நோக்கிக் கூறுதல்

32. **இயற்படு பொருள்:** தலைவனின் பெருமை சார்ந்த இயல்புகளைத் தலைவி புகழும் போதும் கூற்று நிகழ்தல்.

33. **அழிவு தலைவந்த சிந்தை:** தலைவன் குறி இடத்திற்கு வரும்போது காலநிலை, வழிநிலை போன்றவற்றை எண்ணி வருத்தக் கூறுதல்.

34. **காமம் சிறத்தல்:** தலைவியிடம் காம உணர்வுகள் மிகும்போதும் தலைவன்பால் அன்பு மிகும்போதும் கூற்று நிகழ்தல்.

35. **அவன் அளி சிறத்தல்:** இன்ப உணர்வுகள் பெருகும்போது இல்லறத்தில் தனக்குள்ள உரிமையை எண்ணிக்

36. **ஏமம் சான்ற உவகை**: களவொழுக்கத்தில் புணர்ச்சி நிகழும் காலத்தில் இடையீடு இல்லாமல் பாதுகாப்பாக இருந்ததை எண்ணி மகிழ்தல்.

இவ்வாறு களவொழுக்கம் நிகழும் காலத்தில் பல்வேறு சூழல்களில் தலைவியின் கூற்று நிகழ்வது மேல் உள்ள நூற்பாவில் விளக்கப்பட்டுள்ளது.

**மேலும் தலைவி கூற்று நிகழும் இடம்**

**110.** **வரைவு இடைவைத்த காலத்து வருந்தினும்**

**வரையா நாளிடை வந்தோன் முட்டினும்**

**உரைஎனத் தோழிக்கு உரைத்தற் கண்ணும்**

**தானே கூறும் காலமும் உளவே.**

இந்நூற்பாவில் மூன்று வகையான நிலையில் தலைவியின் கூற்று நிகழ்வது விளக்கப்பட்டுள்ளது.

1. **வரைவிடை வைத்த காலம்:** திருமணத்தைத் தள்ளி வைத்துப் பொருள் தேடுவதற்காகத் தலைவன் பிரிவதை அறிந்து நேரத்தில் தலைவி வருந்தும்போது தலைவியின் கூற்று நிகழ்தல்.

2. **வரையா நாளிடை வந்தோன்:** மணம் முடிக்காமல் காலம் நீட்டிக்கும் தலைவன் திடீரெனத் தோழி அல்லது செவிலி போன்றோரைச் சந்திக்கும்போது தலைவி பேசுதல்.

3. **தோழிக்கு உரைத்தல்:** விரைந்து மணம் முடிக்க வேண்டும் என்னும் கருத்தைத் தலைவனுக்கும் இல்லத்தவர்க்கும் கூறவேண்டிய இடத்தில் தலைவி தோழியுடன் பேசுதல்.

**உயிரினும் சிறந்தது கற்பு**

**111.** **உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்**

**செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று எனத்**

**தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு**

**காமக் கிழவன் உள்வழிப் படினும்**

**தாவில் நன்மொழி கிழவி கிளப்பினும்**

**ஆங்கவை பிறவும் தோன்றுமன் பொருளே.**

எல்லாவற்றிலும் சிறந்த உயிரை விட மகளிர்க்கு நாணம் உயர்ந்ததாகும். அக்காரணத்தை விடக் கற்பு மிக உயர்ந்தது என முன்னுள்ளோர் குறிப்பர். இந்த நிலையில் பிரிந்து சென்ற தலைவன் இருக்கும் இடம் தேடித் தலைவி செல்லுதலும் மனமின்றி அவனைத் தேடிச் செல்வதாக அவள் கூறுதலும் என இந்நிகழ்வும் அகப்பொருள் சார்ந்தே அமையும்.

**தோழி கூற்று**

தோழி என்பவள் தலைவனுக்கு அடுத்த நிலையில் தலைவிக்கு மிகவும் நெருக்கமானவள். தலைவிக்குத் தோழியர் பலர் இருந்தாலும் செவிலியின் மகளே நெருங்கிய தோழியாக இருப்பாள்.

தோழி தலைவிக்குப் பல்வேறு நிலையில் உதவியாக இருப்பாள். களவொழுக்கத்தில் தலைவனையும் தலைவியையும் இணைத்து வைப்பாள். சிக்கல் வரும்போது தீர்த்து வைப்பாள். களவொழுக்கம் வெளிப்பட்டு அலராகும்போது நிலைமையைச் செவிலிக்கும் நற்றாய்க்கும் எடுத்துரைப்பாள். களவு முடிந்ததும் கற்பு வாழ்க்கையாகிய இல்லற வாழ்க்கை தொடங்கிய பிறகும் தலைவிக்குத் தோழியாக இருந்து உதவுவாள்.

தோழியின்றிச் காதலர்களின் களவொழுக்கம் நீளாது என்பதும் ஐந்திணை இலக்கியப் படைப்புக்குத் தோழி என்னும் ஆள் (பாத்திரம்) இன்றியமையாதவள் என்பதும் தோழியிற் புணர்ச்சிக்குரிய துறைகளே புலவர்களின் நெஞ்சைக் கவர்ந்தன என்பதும் பெறலாம்.

**112.** **நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்**

செய்வினை மறைப்பினும் செலவினும் பயில்வினும்
புணர்ச்சி எதிர்ப்பாடு உள்ளுறுத்து வருஉம்
உணர்ச்சி ஏழினும் உணர்ந்த பின்றை
மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது

பல்வேறு கவர்பொருள் நாட்டத் தானும்
குறையுறற்கு எதிரிய கிழவனை மறையுறப்
பெருமையின் பெயர்ப்பினும் உலகுரைத்து ஒழிப்பினும்
அருமையின் அகற்சியும் அவள்அறி வுறுத்துப்
பின்வா என்றலும் பேதைமை ஊட்டலும்

முன்னுறு புணர்ச்சி முறைநிறுத்து உரைத்தலும்
அஞ்சி அச்சுறுத்தலும் உரைத்துழிக் கூட்டமொடு
எஞ்சாது கிளந்த இரு நான்கு கிளவியும்
வந்த கிழவனை மாயம் செப்பிப்
பொறுத்த காரணம் குறித்த காலையும்

புணர்ந்தபின் அவன்வயின் வணங்கற் கண்ணும்
குறைந்துஅவள் படரினும் மறைந்தவள் அருகத்
தன்னொடும் அவளொடும் முன்னம் முன் தளைஇப்
பின்னிலை நிகழும் பல்வேறு மருங்கினும்
நன்னயம் பெற்றுழி நயம்புரி இடத்தினும்

எண்ணரும் பல்நகை கண்ணிய வகையினும்
புணர்ச்சி வேண்டினும் வேண்டாப் பிரிவினும்
வேளாண் பெருநெறி வேண்டிய இடத்தினும்

புணர்ந்துழி உணர்ந்த அறிமடச் சிறப்பினும்
ஓம்படைக் கிளவிப் பாங்கின் கண்ணும்

செங்கடு மொழியால் சிதைவுடைத்து ஆயினும்
என்புநெகப் பிரிந்தோள் வழிச்சென்று கடைஇ
அன்புதலை அடுத்த வன்புறைக் கண்ணும்
ஆற்றது தீமை அறிவுறு கலக்கமும்
காப்பின் கடுமை கையுற வரினும்
களனும் பொழுதும் வரைநிலை விலக்கிக்
காதல் மிகுதி உளப்படப் பிறவும்
நாடும் ஊரும் இல்லும் குடியும்
பிறப்பும் சிறப்பும் இறப்ப நோக்கி
அவன்வயின் தோன்றிய கிளவியொடு தொகைஇ

அனைநிலை வகையான் வரைதல் வேண்டினும்
ஐயச் செய்கை தாய்க்கு எதிர் மறுத்துப்
பொய்என மாற்றி மெய்வழிக் கொடுப்பினும்
அவள் விலங்குறினும் களம்பெறக் காட்டினும்
பிறன் வரைவு ஆயினும் அவன் வரைவு மறுப்பினும்

முன்னிலை அறன் எனப் படுதல்என்று இருவகைப்
புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்
வரைவுடன் பட்டோர்க் கடாவல் வேண்டினும்
ஆங்கதன் தன்மையின் வன்புறை உளப்படப்
பாங்குற வந்த நாலெட்டு வகையும்
தாங்கரும் சிறப்பின் தோழி மேன.

தோழி கூற்றுகளை விளக்கும் இந்நூற்பாவில் வரும் முப்பத்து இரண்டு வகைச் செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பின்வருமாறு பகுத்துக் கொள்ளலாம்.

1. தோழி தலைவியின் களவொழுக்கத்தை உணர்தல்
2. தோழி தலைவியின் களவைக் கற்பாக்க முயலுதல்
3. களவொழுக்கம் தொடரும் நிலையில் தோழி
4. தோழி திருமணத்தை விரைந்து நடத்த வேண்டுதல்

**1. தோழி தலைவியின் களவொழுக்கத்தை உணர்தல் (7)**

1. நாற்றம்
2. தோற்றம்
3. ஒழுக்கம்
4. உண்டி
5. செய்வினை மறைத்தல்
6. செலவு
7. பயில்வு

1. **நாற்றம்:** கூந்தல் நெற்றி முதலியவற்றில் பேதைப் பெண்ணுக்குரிய மணமின்றித் தலைவன் கூட்டத்தால் சந்தனம், பூ போன்றவற்றின் மணம் வீசுதல்.

2. **தோற்றம்:** பிள்ளைப் பருவத்துத் தோற்றம் மறைந்து தோள், மார்பகம் முதலியவை செழித்திருத்தல்.

3. **ஒழுக்கம்:** தோழியரோடு மணல் கொழித்துச் சோறாக்கிய நிலைமாறிப் பெண் தன்மைக்கு ஏற்பச் செயல்களைச் செய்தல்.

4. **உண்டி:** ஊட்ட உண்ட தலைவி இப்போது நாணங் கொண்டு தானே சிறிதளவு உணவை உண்ணுதல்,

5. **செய்வினை மறைத்தல்:** முன்போலத் தோழியரோடு கூடாது தலைவனை எதிர்பார்த்து மறைவிடத்தில் நிற்றல்.

6. **செலவு:** முன்புபோல வேகமாக ஓடி ஆடாமல் மெதுவாக நடந்து ஓரிடத்தை அடைதல்.

7. **பயில்வு**: முன் போலச் செவிலியிடத்து உறங்காது தனித்து உறங்குதல், தனியிடத்தில் சுற்றி வருதல்.

**2. தோழி தலைவியின் களவைக் கற்பாக்க முயலுதல் (8)**

1. பெருமையின் பெயர்ப்பு
2. உலகு உரைத்து ஒழிப்பு
3. அருமையின் அகற்சி
4. பின்வா என்றல்
5. பேதைமை ஊட்டல்
6. முன் புணர்ச்சி உரைத்தல்
7. அஞ்சி அச்சுறுத்தல்
8. உரைத்துழிக் கூட்டம்

1. **பெருமையின் பெயர்ப்பு:** தன் பெருமைக்குத் தகாதவாறு தோழியிடம் மெய்யும் பொய்யும் கலந்தும் இருபொருள் படவும் தலைவி பேசுவதைக் கூறுதல்.

2. **உலகு உரைத்து ஒழிப்பு:** களவொழுக்கத்தை விரும்பித் தொடர்ந்து வந்து கொண்டிருந்த தலைவனை அவன் பெருமைகளைக் கூறிப் போகச் செய்தல்.

3. **அருமையின் அகற்சி:** மீண்டும் வந்த தலைவனிடம் தோழி சற்று நெகிழ்வாகப் பேசித் தலைவியின் அருமை பெருமைகளை எடுத்துக் கூறுதல்.

4. **பின் வா என்றல்:** இந்த முறை வந்த தலைவனைக் காலம் கடத்துவதற்காக இப்போது போய்விட்டுப் பின்னும் ஒரு முறை வா என்றல்.

5. **பேதைமை ஊட்டல்:** தலைவியின் அறிவு முதிராத் தன்மையைத் தோழி தலைவனிடம் எடுத்துக்

6. **முன்புணர்ச்சி உரைத்தல்:** தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே முன்பு தடந்த புணர்ச்சி நிலையைத் தோழி எடுத்துக் கூறுதல்.

7. **அஞ்சி அச்சுறுத்தல்:** மனையிடத்துத் தாய், செவிலி. தன்னையர், காப்பு, அலர் எனப் பல நிலையில் தலைவி அஞ்சுவதை எடுத்துக் கூறுதல்,

8. **உரைத்துழிக் கூட்டம்:** தலைவியோடு கூடத் தலைவன் குறித்த வழிகளைத் தோழி ஏற்றுக் கொண்டு அவ்வழியில் நடத்தல்.

**3. களவொழுக்கம் தொடரும் நிலையில் தோழி (10)**

1. காரணம் குறித்தகாலை
2. வணங்கற்கண்
3. குறைந்து அவள் படர்தல்
4. புணர்ச்சி மொழிதல்
5. நயம்புரி இடம்

6. வேண்டாப் பிரிவு

7. பெருநெறி வேண்டுதல்

8. அறிமடச் சிறப்பு

9. ஓம்படைக் கிளவி

10. சிதைவுடைத்து ஆதல்

1. **காரணம் குறித்த காலை:** தன் முன்பு வந்து நிற்கும் தலைவனை எதிர்ப்பட்டு முன்னர்ப் பல பொய்க் காரணங்களைக் கூறியதற்கான சூழலைக் கூறுதல்.

2. **வணங்கற் கண்:** புணர்ச்சி நிகழ்ந்தபின் தன் பக்கம் வந்து நிற்கும் தலைவனிடம் பணிந்து நின்று தோழி பேசுதல்.

3. **குறைந்து அவள்படர்தல்:** தலைவன் தலைவியிடம் புணர்ச்சி கொள்ளக் கருதித் தன்னிலையில் தாழ்ந்து தோழியிடம் பேசும் போது கூற்று நிகழ்தல்.

4. **புணர்ச்சி மொழிதல்:** தலைவனோடு புணரும் நிலையில் தலைவியின் வேட்கை குறையும்போது அது பற்றித் தோழி பேசுதல்.

5. **நயம்புரி இடம்:** தலைவன் தலைவியின் களவுப் புணர்ச்சி அடிக்கடி நிகழுமாயின் பிறர் அறிந்து நகைப்பிற்கு இடமாகி அலராகும் நிலையைத் தோழி கூறுதல்.

6. **வேண்டாப் பிரிவு:** தலைவன் தலைவியின் புணர்ச்சியை விரும்பாது பிரிய விரும்பிய இடத்தில் கூற்று நிகழ்தல்.

7. **பெருநெறி வேண்டுதல்:** தலைவனுக்குத் தான் சில கொடுக்க விரும்பியதைத் தலைவி கூறும்போதும் தோழியின் கூற்று நிகழ்தல்.

8. **அறி மடச் சிறப்பு:** இயற்கைப் புணர்ச்சி நிகழும்போது ஏற்படும் தீங்குகளை அறியாத தலைவனிடம் அவை பற்றிக் கூறிக் காதலின் சிறப்பை உணர்த்துதல்.

9. **ஓம்படைக் கிளவி:** இயற்கைப் புணர்ச்சிவழித் தன்னைத் தலைவனிடம் அளித்துள்ள அவளைப் பாதுகாக்க வேண்டும் எனக் கூறும்போது கூற்று நிகழ்தல்.

10. **சிதைவுடைத்து ஆதல்:** செம்மையாகக் கடுஞ் சொற்களைத் தலைவியின் நெஞ்சம் சிதையுமாறு கூறும்போதும் தோழியின் கூற்று நிகழ்தல்.

**4. தோழி திருமணத்தை விரைந்து நடத்த வேண்டுதல் (7)**

1. ஆற்றது தீமை
2. நாடும் ஊரும்
3. வரைவுக்குத் தூண்டுதல்
4. மெய்வழிக் கொடுத்தல்
5. பிறன் வரைவு மறுத்தல்
6. அறன் எனப்படுதல்
7. வரைவு வேண்டுதல்

1. **ஆற்றது தீமை:** தலைவன் வருகின்ற வழியின் தீமைகளை அறிந்ததனால் மனதில் கலக்கம் உண்டாகும்போது தலைவி பேசுதல்.

2. **காப்பின் கடுமை:** களவொழுக்கம் அலராகிய போது மனைக்கண் தலைவிக்கு இற்செறிப்பும் காப்பும் அதிகமாகியபோது தோழியின் கூற்று நிகழ்தல்.

3. **நாடும் ஊரும்:** தலைவன் பிறந்த நாடு, குடி போன்றவற்றை நினைவு படுத்தி வரைவு கொள்ளத் தோழி கூறுதல்.

4. **மெய்வழிக் கொடுத்தல்:** தாய் கொண்ட ஐயத்திற்கும் செவிலி அறிந்து சொன்ன மாறுபாட்டிற்கும் உள்ள உண்மை நிலைமையைத் தோழி கூறுதல்.

5. **பிறன் வரைவு மறுத்தல்:** தலைவியை மணந்து கொள்ள பிறர் மணம் பேசிவந்தபோது அதனை மறுத்துக் கூறுதல்

6. **அறன் எனப்படுதல்:** தலைவியின் தமர் வரைவுக்கு உடன்படத் தலைவனும் உடன்பட்டுக் காலத்தை நீட்டும்போது கடுஞ்சொற்களால் கூறுதல்.

7. **வரைவு வேண்டுதல்** : தலைவியின் வரைவைக் காலம் நீட்டிக்காமல் உடனே முடிக்கத் தோழி வற்புறுத்திக் கூறுதல்.

மேலே கூறியவற்றோடு இவ்வகையான முப்பத்து இரண்டும் நிலையிலும் தோழியின் கூற்று நிகழும் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

**செவிலியின் கூற்று**

**113.**

**களவு அலராயினும் காமம் மெய்ப் படுப்பினும்**
**அளவுமிகத் தோன்றினும் தலைப்பெய்து காணினும்**
**கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்**
**ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்**
**ஆடிய சென்றுழி அழிவுதலை வரினும்**

**காதல் கைம்மிகக் கனவின் அரற்றலும்**
**தோழியை வினாதலும் தெய்வம் வாழ்த்தலும்**
**போக்குடன் அறிந்தபின் தோழியொடு கெழீஇக்**
**கற்பின் ஆக்கத்து நிற்றற் கண்ணும்**
**பிரிவின் எச்சத்தும் மகள்நெஞ்சு வலிப்பினும்**

**இருபால் குடிப்பொருள் இயல்பின் கண்ணும்**

**இன்ன வகையின் பதின்மூன்று கிளவியொடு**

**அன்னவை பிறவும் செவிலி மேன.** 13

இந்நூற்பாவில் பதின்மூன்று வகையான செவிலிக் கூற்றுகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

1. களவு அலர் ஆதல்

2. காமம் மெய்ப்படுதல்

3. அளவுமிகத் தோன்றல்

4. தலைப்பெய்து காண்டல்

4. தலைப்பெய்து காண்டல்

5. ஒட்டிய திறத்தாற் சொய்தி

6. அழிவு தலை வருதல்

7. கனவின் அரற்றல்

8. தோழியை வினாதல்

9. தெய்வம் வாழ்த்தல்

10. கற்பின் ஆக்கத்து நிற்றல்

11. பிரிவின் எச்சம்

12. மகள் நெஞ்சு வலிப்பு

13. இருபால் குடி

1. **களவு அலர் ஆதல்:** தலைவியின் களவொழுக்கம் அலராகி ஊருக்குத் தெரியும்போது செவிலியின் கூற்று நிகழ்தல்.

2. **காமம் மெய்ப்படுதல்:** தலைவியின் களவொழுக்கம் நன்றாகவும் தீதாகவும் வெளிப்படும்போது செவிலியின் கூற்று நிகழ்தல்.

3. **அளவுமிகத் தோன்றல்:** களவுப் புணர்ச்சியால் தலைவியின் கண், தோள், கொங்கை போன்றவை வளர்ச்சி பெற்றிருக்கும்போது செவிலி பேசுதல்.

4. **தலைப் பெய்துக் காண்டல்:** தலைவன் தலைவியின் களவொழுக்கத்திற்குப் பிறகு தலைவன் வரும்போதும் தலைவி தன்னை விட்டுப் பிரியும் போதும் செவிலி பேசுதல்.

5. **ஒட்டிய திறத்தாற் செய்தி:** கட்டுவிச்சி, வேலன் போன்றோர் தலைவியின் நோய் தீர்க்கத் தெய்வத்திற்குச் சிறப்புச் செய்யச் சொல்லும்போது செவிலி பேசுதல்.

6. **அழிவு தலை வருதல்:** வெறியாட்டு போன்றவை நிகழ்ந்த பின்னும் தலைவியின் நோய் தீராத போது செவிலியின் கூற்று நிகழ்தல்.

7. **கனவின் அரற்றல்:** களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவி கனவு கண்டு பிதற்றும்போது செவிலி கூற்று நிகழ்தல்.

8. **தோழியை வினாதல்:** தலைவி உடல் மெலிந்தும் கனவு கண்டும் தோற்றம் மாறி இருப்பது பற்றித் தோழியிடம் செவிலி வினவுதல்.

9. **தெய்வம் வாழ்த்தல்:** தலைவி படும் இன்னல்களிலிருந்து விடுபடச் செவிலி தெய்வத்தை வணங்கும்போது கூற்று நிகழ்தல்.

10. **கற்பின் ஆக்கத்து நிற்றல்:** தலைவனுடன் களவொழுக்கத்தில் உடன்போக்குச் சென்ற தலைவியைக் கற்பு வாழ்க்கைக்காக அழைத்து வரும்போது செவிலி பேசுதல்.

11. **பிரிவின் எச்சம்:** தலைவனுடன் உடன்போக்குச் சென்றபோது தொடர்ந்து செல்லாமல் இருக்கும் போது செவிலிக்கூற்று நிகழ்தல்.

12. **மகள் நெஞ்சு வலிப்பு:** தலைவி தலைவனோடு உடன் போகத் துணிந்ததை நினைக்கும்போது செவிலி பேசுதல்.

13. **இருபால் குடி:** தலைவன், தலைவி ஆகிய இருவரின் குடிப் பெருமையை எண்ணிப் பேசும்போது செவிலி பேசுதல்.

மேற்குறிப்பிட்டவாறு களவொழுக்கத்தின்கண் செவிலியின் கூற்றுப் பதின்மூன்று இடங்களில் நிகழும்.

**நற்றாயின் கூற்று**

**114. தாய்க்கும் வரையார் உணர்வு உடம்படினே.**

தலைவியின் களவொழுக்கத்தைச் செவிலியைப் போலப் பெற்ற தாயாகிய நற்றாயும் அறிந்திருந்தால் மேலே குறிக்கப்பட்டுள்ள பதின் மூன்று கூற்றுகளும் அவளுக்கும் உரியவை ஆகும்.

**நற்றாய், செவிலியின் இயல்பு**

**115. கிழவோன் அறியா அறிவினள் இவள்என**

**மையறு சிறப்பின் உயர்ந்தோர் பாங்கின்**

**ஐயக் கிளவி அறிதலும் உரித்தே.**

இளமைப் பருவம் மிக்க தலைவியால் தலைவனின் குணநலன்களை நன்கு அறிய முடியாது என நற்றாயும் செவிலியும் உற்ற சான்றோரிடம் அவனைப் பற்றிக் கேட்டு அறியவும் செய்வர்.

**தலைவி தன் வேட்கையை உணர்த்தும் முறை**

**116. தன்னுறு வேட்கை கிழவன் முன் கிளத்தல்**

**எண்ணும் காலை கிழத்திக்கு இல்லை**

**பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்**

**பெய்ந்நீர் போலும் உணர்விற்று என்ப.**

மற்ற மக்களைப் போன்று அல்லாமல் தலைவி மிகவும் நாணம் மிக்கவள் எனவே, அவளால் காம வேட்கையை வெளிப்படையாகக் கூற முடியாது புது மண்பாண்டத்தில் உள்ள நீர் கசிவது போலவே அவள் உணர்வு வெளிப்படும்.

**தலைவன் தலைவிக்குத் தூது**

**117 காமக் கூட்டம் தனிமையின் பொலிதலின்**

**தாமே தூதுவர் ஆகலும் உரித்தே.**

தலைவன் தலைவியின் களவொழுக்கம் அவர்களாக அமைத்துக் கொள்ளும் தனிமையிலேயே சிறப்பாக அமையும். எனவே தோழி, பாங்கன் போன்றோர் இல்லாமல் தாங்களே தூதுவராகச் செயலபட்டும் மகிழ்வர்.

**தலைவிக்கு உரிமை**

**118. அவன் வரம்பு இறத்தல் அறம் தனக்கு இன்மையின்**

**களம் சுட்டுக் கிளவி கிழவியது ஆகும்**

**தான் செலற்கு உரிய வழி ஆகலான.**

தலைவனின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடப்பதே தலைவியின் அறமாகக் கருதப்பட்டாலும் களவொழுக்கத்தில் சந்திக்கும் குறியிடம் கூறும் உரிமை அவளுக்கு

உண்டு. தலைவி செல்லக் கூடிய எளிய வழியே இருவருக்கும் பொருந்துவதாக இருக்கும்.

**தோழி குறியிடம் கூறுதல்**

**119. தோழியின் முடியும் இடனுமார் உண்டே.**

தலைவன் தலைவியே அன்றித் தோழியும் களவொழுக்கத்தில் அவர்கள் சந்திக்கும் குறியிடத்தைக் குறிக்கும் இயல்பு உண்டு.

**துணை இன்றிச் சந்திப்பு**

**120. முந்நாள் அல்லது துணையின்று கழியாது**

**அந்நாள் அகத்தும் அதுவரைவு இன்றே .**

களவொழுக்கத்தில் தலைவன் தலைவியின் சந்திப்புப் பூப்பு எய்திய அந்த மூன்று நாட்களில் மட்டுமே துணை இல்லாமல் நிகழும் களவொழுக்கம் துணைபெற்று அமையும்.

**தலைவியின் துணை தோழி**

**121. பன்னூறு வகையினும் தன்வயின் வரூஉம்**

**நன்னய மருங்கின் நாட்டம் வேண்டலின்**

**துணைச் சுட்டுக் கிளவி கிழவியது ஆகும்**

**துணையோர் கருமம் ஆகலான.**

பலவேறு நிலையிலும் தலைவியின் நன்மை, தீமைகளை ஆராயந்து அறியும் தன்மை அவளுக்குத் துணையாக வருவோரைச் சார்ந்தது ஆகும். எனவே, தனக்கு

உயிர்த் துணையாக வரக்கூடிய தோழியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை தலைவிக்கு மட்டுமே உரியதாகும்.

**தலைவியின் செவிலியின் உறவு**

**122. ஆய்பெரும் சிறப்பின் அருமறை கிளத்தலின்**

**தாய்எனப் படுவோள் செவிலி ஆகும்.**

பெருமை மிக்க களவொழுக்கத்தின் மறைபொருளைத் தெரிவிக்க வேண்டி வரின் நற்றாயை விடச் செவிலித் தாயே உரியவள் ஆவார்.

**செவிலியின் மகள் தலைவியின் தோழி**

**123. தோழி தானே செவிலியது மகளே.**

தலைவிக்குத் தோழியர் பலர் இருப்பினும் களவொழுக்கத்தை மனந்திறந்து பேசத்தக்க உரிமை உள்ளவள் செவிலியின் மகளே ஆவாள்.

தலைவியும் தோழியும் குழந்தைப் பருவம் முதல் செவிலியிடம் ஒன்றாகப் பால் குடித்து வளர்த்தவர்கள். எனவே செவிலியின் மகளே தலைவிக்கு உற்ற தோழி ஆவாள்.

**தோழியின் இயல்பு**

**124. சூழ்தலும் உசாத்துணை நிலைமையிற் பொலிமே.**

செவிலியின் மகள் நன்மை, தீமைகளை அறிந்து சூழலுக்கு ஏற்பத் தலைவிக்கு உதவிசெய்வாள் மேலும் தலைவிக்குப் பேச்சுத் துணையாகவும் ஒன்றித்தோன்றும் வகையில் தோழி இருப்பாள்.

**களவொழுக்கம் அறியும்தோழி**

**125. குறையுற உணர்தல் முன்னுற உணர்தல்**

**இருவரும் உள்வழி அவன் வரவு உணர்தல்என**

**மதியுடம் படுதல் ஒரு மூவகைத்தே.**

தலைவன் தோழியிடம் வந்து 1. தனக்கு உதவி கேட்பதைக் கொண்டு உணர்தல், 2. தலைவியின்பால் காணப்படும் குறிப்புகளைக் கொண்டு உணர்தல், 3. தலைவியும் தோழியும் இருக்கும்போது தலைவன் வருவதை அறிதல் என்னும் மூன்று நிலைகளில் தலைவியின் களவொழுக்கத்தைத் தோழி அறிவாள்.

**தோழி தலைவனுக்கு உதவுதல்**

**126. அன்ன வகையான் உணர்ந்தபின் அல்லது**

**பின்னிலை முயற்சி பெறாள்என மொழிப.**

தலைவன், தலைவி இருவருக்கும் இடையே ஒரு புரிதல் இருப்பதைக் குறிப்பாக அறிந்த பின்னரே அவர்களின் களவொழுக்கத்திற்குத் தோழி உதவ முற்படுவாள்.

**தோழி களவொழுக்கத்திற்கு உதவுதல்**

**127. முயற்சிக் காலத்து அதர்ப்பட நாடிப்**

**புணர்த்தல் ஆற்றலும் அவள் வயினான.**

களவொழுக்கத்திற்காகத் தலைவன் தோழியின் துணையை நாடும் போது நன்மை தீமைகளை நன்றாகத் தெரிந்து இருவரையும் கூட்டுவிக்கத் துணை புரிவாள்.

**இருவகைக் குறியிடம்**

**128. குறிஎனப் படுவது இரவினும் பகலினும்**

**அறியக் கிளந்த ஆற்றது என்ப.**

களவொழுக்கத்தில் தலைவனும் தலைவியும் ஈடுபட இரவு, பகல் என்னும் இரு நேரங்களிலும் குறிக்கப்படும் இடமே குறியிடம் எனப்படும்.

**இரவுக் குறியிடம்**

**129.** **இரவுக் குறியே இல்லகத்து உள்ளும்**

**மனையோர் கிளவி கேட்கும்வழி அதுவே**

**மனையகம் புகாஅக் காலை யான.**

இரவில் களவொழுக்கம் இல்லத்தின் உட்புறத்தே நிக நிகழும் போது அந்த இடம் யாரும் அறியாததாகவும் அதே நேரத்தில் இல்லத்தில் உள்ளோர் பேசினால் காதில் விழும் தூரத்திலும் இருக்கும்.

**பகற் குறியிடம்**

**130.** **பகற்புணர் களனே புறன்என மொழிப**

**அவள் அறிவுணர வருவழி யான.**

பகலில் களவொழுக்கம் நிகழும் இடம் இல்லத்திற்குப் புறமான இடமாகவும் தலைவி அறிந்த இடமாகவும் இருக்கும்.

**அல்ல குறி**

**131.** **அல்ல குறிப்படுதலும் அவள்வயின் உரித்தே**

**அவன்குறி மயங்கிய அமைவொடு வரினே .**

களவொழுக்கத்திற்கு வந்த தலைவன் தான் வந்ததை அறிவிக்க ஏதாவது ஒரு வகையில் குறி செய்வான் அதனை அறியாத தலைவி, தற்செயலாக நிகழ்ந்த

ஒன்றைக் குறியாக நினைத்துச் சென்று ஏமாறுவாள் தலைவனும் வேறு இடத்தில் காத்திருந்து திரும்பிப் போவான்.

**குறி சுட்டாதும் கூடுதல்**

**132. ஆங்காங்கு ஒழுகும் ஒழுக்கமும் உண்டே**

**ஓங்கிய சிறப்பின் ஒரு சிறையான.**

களவொழுக்கத்திற்குக் குறியிடம் குறிக்காது திடீரென எதிர்ப்பட்டுத் தக்க ஒரு சிறந்த மறைவிடத்தில் கூட்டம் நிகழ்வதும் உண்டு.

**விழாக் காலச் சந்திப்பு**

**133. மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்**

**துறந்த ஒழுக்கம் கிழவோற்கு இல்லை.**

களவொழுக்கம் நிகழும் காலத்தில் தலைவன் விழாக் காண வரும் தலைவியைக் காணும் வாய்ப்பைத் தவற விடுவதில்லை.

**தலைவனின் உறுதி**

**134. ஆற்றினது அருமையும் அழிவும் அச்சமும்**

**ஊறும் உளப்பட அதனோ ரன்ன.**

களவொழுக்கத்திற்காகக் குறியிடத்திற்கு வரும் தலைவன் வழியின் இடர்ப்பாடுகளுக்கோ, அழிவு வரும் என்பதற்கோ, அச்சம் கொண்டோ, வேறு இடையூறுகளை எண்ணியோ என எவற்றுக்கும் அஞ்சாது வந்து சேர்வான்.

**மனையிடத்து ஆடவர்**

**135. தந்தையும் தன்னையும் முன்னத்தின் உணர்ப.**

தலைவியின் களவொழுக்கத்தை அவளின் தந்தையும் தமையனும் குறிப்பாக மட்டுமே அறிந்திருப்பர்.

**நற்றாய் களவை அறிதல்**

**136. தாய் அறிவுறுதல் செவிலியோடு ஒக்கும்.**

தலைவியின் களவொழுக்கத்தைச் செவிலித் தாய் எந்த அளவு அறிந்திருக்கின்றாளோ அதே அளவுதான் நற்றாயும் அறிந்திருப்பாள்.

**களவொழுக்கம் ஊர் அறிதல்**

**137. அம்பலும் அலரும் களவு வெளிப்படுத்தலின்**

**அங்குஅதன் முதல்வன் கிழவன் ஆகும்.**

ஊரார் முகக் குறிப்பால் காட்டும் அம்பலும் பழிச் சொல்லால் வெளிப்படுத்தும் அலரும் நிகழ்வதற்குத் தலைவனே காரணமாக இருக்கின்றான்.

**அம்பல்**

ஊர் மக்கள் சிலர் மற்றவரைப் பற்றித் தவறான செய்திகளைத் தம்முள் உரையாடுதல் உண்டு. அவ்வாறு உரையாடும்போது மற்றவர்க்குப் புலப்படா வகை மென் குரலில் முணுமுணுத்தவாறு இரகசியமாகப் பேசிக் கொள்வது அம்பல் எனப்படும். தாம் குறிப்பிடும் செய்தியை உறுதியொடு பேசப் போதிய சான்று கிட்டாத நிலையில் நிகழ்த்தும் இரகசியப் பேச்சே அம்பல் ஆவது. (தமிழ் இலக்கணப் பேரகராதி, அகம் -1, ப.23)

**அலர்**

ஊர் மக்கள் சிலர் மற்றவர் செய்தியாகத் தாம் தக்க சான்றுகளுடன் உறுதி செய்து கொண்ட பிறகு இன்னானோடு இன்னாளிடை இது போன்ற செய்தி நிகழ்ந்தது என்று பிறரும் கேட்குமாறு உரத்த குரலில் தம்முள் பேசிக் கொள்வது. களவுக் காலத்து அலரைப் பற்றிக் கூறுதல் பகற்குறி, இரவுக்குறி இவற்றை விலக்குதற்காகவும் கற்புக் காலத்து அலரைப் பற்றிக் கூறுதல் தலைவனது புறத்து ஒழுக்கத்தை நீக்குதற்காகவும் எனக் கொள்ளப்படும். (தமிழ் இலக்கணப் பேரகராதி, அகம் -1, ப.32)

**திருமண நிகழ்வுகள்**

**138.** **வெளிப்பட வரைதல் படாமை வரைதல்என்று**

**ஆயிரண்டு என்ப வரைதல் ஆறே.**

தலைவன் தலைவியின் திருமணம் இரு நிலையில் நிகழ்வது உண்டு. களவொழுக்கம் வெளிப்பட்ட பின்னரும் களவொழுக்கம் வெளிப்படுவதற்கு முன்னரும் என நிகழும்.

**வரைவு இன்றிப் பிரிவு இல்லை**

**139.** **வெளிப்படை தானே கற்பினொடு ஒப்பினும்**

**ஞாங்கர்க் கிளந்த மூன்று பொருளாக**

**வரையாது பிரிதல் கிழவோற்கு இல்லை.**

களவொழுக்கத்தின் வெளிப்பாடு, இல்லற வாழ்க்கை ஆகிய கற்பிற்கு வழி வகுக்கும். எனவே திருமணத்திற்கு முன்னர்த் தலைவனுக்கு ஓதற்பிரிவு, பகைப்பிரிவு, தூதுப்பிரிவு என்னும் மூன்று பிரிவுகள் நிகழ்வதில்லை. திருமணத்திற்கு முன் பொருள் தேடுவதற்காகச் சிறிது காலம் தலைவியைப் பிரிவான்.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | களவொழுக்கம் பற்றி விளக்குக. | K2 | CO5 | PO4 |
| 2 | மறையோர் தேயத்து மன்றல் யாவை? | K3 | CO1 | PO2 |
| 3 | இயற்கைப் புணர்ச்சி பற்றி எழுதுக. | K5 | CO4 | PO1 |
| 4 | ஐயம், ஐயம் தெளிதல் பற்றி எழுதுக. | K6 | CO5 | PO2 |
| 5 | தலைமக்களின் பண்புகள் குறித்து எழுதுக. | K5 | CO2 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | களவொழுக்கத்தில் தோழியின் கூற்று நிகழும் இடங்கள் யாவை? | K1 | CO1 | PO4 |
| 2 | களவொழுக்கத்தில் செவிலியின் கூற்று நிகழும் இடங்கள் யாவை? | K3 | CO4 | PO5 |
| 3 | நற்றாய், செவிலி குறித்து எழுதுக. | k5 | CO4 | PO2 |
| 4 | களவொழுக்கத்தில் தலைவியின் உரிமை குறித்து எழுதுக. | K4 | CO2 | PO1 |
| 5 | குறியிடம் என்றால் என்ன? விளக்குக. | K3 | CO3 | PO3 |

## அலகு - 4

## கற்பியல்

### உள்ளடக்கம்

- கற்பு எனப்படுவது
- மக்களும் திருமணமும்
- கற்பு வாழ்க்கையில் தலைவன் கூற்று
- கற்பு வாழ்க்கையில் தலைவி கூற்று
- கற்பு வாழ்க்கையில் தோழி கூற்று
- கற்பு வாழ்க்கையில் காமக்கிழத்தியர் கூற்று
- செவிலி கூற்று
- அறிவர் கூற்று
- ஊடல்:தலைவன், தலைவி
- அலர்
- வாயிலோர்

- ❖ கூத்தர் ஊடல் தணித்தல்
- ❖ ஏவல் இளையோர்
- ❖ கற்பொழுக்கத்தில் தலைவி
- ❖ பாசறையில் மகளிர்
- ❖ பிரிவு நிலையில் பார்ப்பார் கூற்று
- ❖ கற்பொழுக்கத்தில் தலைவன்
- ❖ பரத்தையரின் பிரிவு .
- ❖ பிரிவு வகைகள்
- ❖ தலைவன் தலைவியின் தவம்
- ❖ வாயில் ஆவோர்
- ❖ வழியில் காலம் தாழ்த்தாமை

கற்பியல் என்பது தலைவனும் தலைவியும் களவொழுக்கத்திற்குப் பிறகு மணமுடித்து வாழ்வது கற்பு வாழ்க்கை எனப்படும். இல்லற வாழ்க்கை வாழ்வதாகும். கற்பியல் வாழ்க்கைக்கு என உள்ள சில அடிப்படைக் கோட்பாடுகளைத் தமிழண்ணல் பின்வருமாறு விளக்குகின்றார்.

கற்பு கற்பிக்கப்படுவது, மனத் திறமை, சொன்ன சொல் திறம்பாமை, மனம் ஒரே நிலையில் நிற்றல்.

காதலர் வாழ்வில் ஒருவனுக்கு ஒருத்தி,ஒருத்திக்கு ஒருவன் என்பதில் உள்ள ஒருமைக் கேண்மை கற்பு எனப் பரவலாக வழங்கப் பெற்றது. இங்கு அகத்திணையுள்

களவுக் காதல் ஒழுக்கில் ஈடுபட நேர்ந்தவர், நாடறிய மணம் செய்து கொண்டு வாழ்வது கற்பு எனும் சடங்காகி, உலகறியும் ஒன்றாயிற்று.

திருமணச் சடங்கு, மணமான பிறகு தலைவன், தலைவி, தோழி, காமக்கிழத்தியர் (தூதுவர்கள்), செவிலி, அறிவர் கூற்றுக்கள் நிரலே இடம்பெறுகின்றன.

ஊடல்கள், ஊடலில் தோன்றும் அலரும் கூற்றுக்களும் பரத்தைமைத் தொடர்புடையன. பிற பிரிவுகள் பிரிவில் இடையிலுள்ளோர் கூற்றுக்கள் பிரிவின் கால எல்லைகள், வாழ்வின் பயன் முதலியவை கற்பியலில் இடம் பெறும் செய்திகளாகும்.

(தொல்காப்பியம்-பொருளதிகாரம்-1, ப.170)

தலைவன் தலைவியின் இல்லற வாழ்க்கையில் பரத்தையர்ப் பிரிவு என்பது ஒரு முக்கியக் கூறாகத் திகழ்கிறது. தலைவன், தலைவிக்குத் தோழி துணையாக இருப்பது, ஆன்றோர் வழங்கும் அறிவுரை எனப் பல அடிப்படையான கோட்பாடுகள் இவ்வியலில் விளக்கப்பட்டுள்ளன.

**கற்பு எனப்படுவது**

**140.** **கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்**

**கொளற்குஉரி மரபின் கிழவன் கிழத்தியைக்**

**கொடைக்குஉரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே.**

கற்பு என்று சொல்லப்படுவது களவு வாழ்க்கையிலிருந்து இல்லற வாழ்வு அமையத் திருமணச் சடங்குகள் நடத்தப்படுவதாகும். தலைவியைப் பெறக் கூடிய தலைவன் அவளைக் கொடுத்தற்கு உரியோர் கொடுக்கத் திருமணம் செய்து கொள்வதாகும்.

**உடன்போக்கிலும் திருமணம்**

141. **கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே**

**புணர்ந்து உடன்போகிய காலை யான**

தலைமக்கள் உடன்போக்கு சென்றபோது கொடைக்குரிய தலைவியின் பெற்றோர் இல்லாமலும் கரணம் நிகழ்தல் உண்டு.

**கீழ்நிலை மக்கள் திருமணம்**

142. **மேலோர் மூவர்க்கும் புணர்ந்த கரணம்**

**கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே.**

அந்தணர், அரசர், வணிகர் என்னும் மூன்று மேல் நிலையிலுள்ள மக்களுக்குத் திருமணச் சடங்குகள் நடைபெற்றதைப் போன்று உழைக்கும் வேளாண் மக்களுக்கும் திருமணச்சடங்கு உண்டு.

**திருமணச் சடங்கின் தோற்றம்**

143. **பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**

**ஐயர் யாத்தனர் கரணம் என்ப.**

களவொழுக்கத்தில் ஈடுபட்டிருந்த தலைவன் தலைவியிடம் பொய் கூறுவதும் குற்றம் செய்வதும் அதிகரித்தபோது சான்றோர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது எனக் குறிப்பர்.

**கற்பு வாழ்க்கையில் தலைவன் கூற்று**

144. **கரணத்தின் அமைந்து முடிந்த காலை**

**நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சிக் கண்ணும்**

எஞ்சா மகிழ்ச்சி இறந்துவரு பருவத்தும்
அஞ்ச வந்த உரிமைக் கண்ணும்
நன்நெறிப் படரும் தொன்னலப் பொருளினும்

பெற்ற தேஎத்துப் பெருமையின் நிலைஇக்
குற்றம் சான்ற பொருள்எடுத்து உரைப்பினும்
நாமக் காலத்து உண்டுஎனத் தோழி
ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்
அல்லல் தீர ஆர்வமொடு அளைஇச்

சொல்லுறு பொருளின் கண்ணும் சொல்என
ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது
வானோர் அமிழ்தம் புரையுமால் எமக்குஎன
அடிசிலும் பூவும் தொடுதற் கண்ணும்
அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்

அந்தமில் சிறப்பின் பிறர்பிறர் திறத்தினும்
ஒழுக்கம் காட்டிய குறிப்பினும் ஒழுக்கத்துக்
களவினுள் நிகழ்ந்த அருமையைப் புலம்பி
அலமரல் உள்ளமொடு அளவிய இடத்தும்
அந்தரத்து எழுதிய எழுத்தின் மான

வந்த குற்றம் வழிகெட ஒழுகலும்
அழியல் அஞ்சல் என்று ஆயிரு பொருளினும்
தான்அவள் பிழைத்த பருவத் தானும்
நோன்மையும் பெருமையும் மெய்கொள அருளிப்

பன்னல் சான்ற வாயிலொடு பொருந்தித்

தன்னின் ஆகிய தகுதிக் கண்ணும்
புதல்வன் பயந்த புனிறு தீர்பொழுதின்
நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி
ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும்
செய்பெரும் சிறப்பொடு சேர்தற் கண்ணும்

பயங்கெழு துணையணைப் புல்லிப் புல்லாது
உயங்குவள் கிடந்த கிழத்தியைக் குறுகி
அல்கல் முன்னிய நிறையழி பொழுதின்
மெல்லென் சீறடி புல்லிய இரவினும்
உறலருங் குரைமையின் ஊடல் மிகுத்தோளைப்

பிறபிற பெண்டிரின் பெயர்த்தற் கண்ணும்
பிரிவின் எச்சத்துப் புலம்பிய இருவரைப்
பரிவின் நீக்கிய பகுதிக் கண்ணும்
நின்றுநனி பிரிவின் அஞ்சிய பையுளும்
சென்றுகை இகந்து பெயர்த்து உள்ளிய வழியும்

காமத்தின் வலியும் கைவிடின் அச்சமும்
தான்அவள் பிழைத்த நிலையின் கண்ணும்
உடன் சேறல் செய்கையொடு அன்னவை பிறவும்
மடம்பட வந்த தோழிக் கண்ணும்
வேற்றுநாட்டு அகல்வையின் விழுமத் தானும
மீட்டுவரவு ஆய்ந்த வகையின் கண்ணும்

**அவ்வழிப் பெருகிய சிறப்பின் கண்ணும்**
**பேரிசை ஊர்திப் பாகர் பாங்கினும்**
**காமக் கிழத்தி மனையோள் என்றிவர்**
**ஏமுறு கிளவி சொல்லிய எதிரும்**

**சென்ற தேஎத்து உழப்புநனி விளக்கி**
**இன்றிச் சென்ற தன்னிலை கிளப்பினும்**
**அருந்தொழில் முடிந்த செம்மல் காலை**
**விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணும்**
**மாலை ஏந்திய பெண்டிரும் மக்களும்**

**கேளிர் ஒழுக்கத்துப் புகற்சிக் கண்ணும்**
**ஏனைய வாயிலோர் எதிரொடு தொகைஇப்**
**பண்ணமை பகுதி முப்பதினொரு மூன்றும்**
**எண்ணரும் சிறப்பின் கிழவோன் மேன.**

கற்பு வாழ்க்கையில் முப்பத்து மூன்று வகையில் தலைவன் கூற்று நிகழும் எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

1. கரணத்தின்... முடிந்த காலை
2. புணர்ச்சிக் கண்
3. எஞ்சா மகிழ்ச்சி
4. அஞ்ச வந்த உரிமை
5. நன்னெறி படர்தல்

6.குற்றம் சான்ற பொருள்

7. கடவுள் ஏத்திய மருங்கு

8. அல்லல் தீர்தல்

9. கைதொட்டது... அமிழ்தம்

10. பூக் கட்டுதல்

11. ஒழுக்கம் காட்டிய குறிப்பு

13. அழியல்-அஞ்சல்

12. அந்தரத்து எழுதிய எழுத்து

14. நோன்மையும் பெருமையும்

15. புதல்வற் பயந்த... பொழுது

16. சீறடி புல்லிய இரவு

17. ஊடல்... பெயர்தல்

18. புலம்பிய இருவர்

19. பிரிவின் அஞ்சிய பையுள்

20. பெயர்த்து உள்ளிய வழி

21. காமத்தின் வலி

22. கைவிடின் அச்சம்

23. தானவள் பிழைத்த நிலை

24. உடன் சேறல்

25. மடம்பட வந்த தோழி

26. வேற்று நாடு அகறல்

27. மீண்டு வரல்

28. பெருகிய சிறப்பு

29. பேரிசை ஊர்திப் பாகர்

30. ஏமறுகிளவி

31. தன்னிலை கிளத்தல்

32. நல்லவை வேண்டல்

33. மாலை ஏந்தியோர்.

1. **கரணத்தின்... முடிந்தகாலை:** சான்றோர் முன்னிலையில் திருமணச் சடங்குகள் எல்லாம் முடிந்தபிறகு தலைவன் பேசுதல்.

2. **புணர்ச்சிக்கண்:** களவொழுக்கம் முடிந்து முதன் முதலாகத் தலைவியுடன் கற்புக்கால வாழ்க்கை தொடங்கிக் கூடல் நிகழும்போது தலைவன் பேசுதல்.

3. **எஞ்சா மகிழ்ச்சி:** கற்புக் காலத்தில் குறைவில்லாத மகிழ்ச்சியில் திளைத்து வாழும்போது தலைவியுடன் கூற்று நிகழ்தல்.

4. **அஞ்ச வந்த உரிமை:** தலைவனும் மற்றவர்களும் அஞ்சும்படியாகத் தம் உரிமைகளுக்காகப் பேசும்போது தலைவன் கூற்று நிகழ்தல்.

5. **நன்னெறி படர்தல்:** இல்லறத்திற்கு ஓதிய நல்ல நெறிகளைக் கல்லாமலேயே தலைவி அறிந்து கொண்டதைத் தலைவன் பெருமையாகப் பேசுதல்.

6. **குற்றம் சான்ற பொருள்:** களவொழுக்கத்தின்கண் மிகவும் பெருமைப் படத்தக்க வகையில் நடந்து கொண்டதைக் கற்புக் காலத்தில் பேசுதல்.

7. **கடவுள் ஏத்திய மருங்கு:** களவுக் காலத்தில் அச்சங்கள் ஏற்பட்ட போது கடவுள் காக்கும் எனத் தோழி கூறியதை நினைத்துப் பேசுதல்.

8. **அல்லல் தீர்தல்:** களவொழுக்கக் கவலைகள் தீர்ந்து தலைவி பெற்ற மகிழ்வை நினைக்கும் போது கூற்று நிகழ்தல்.

9. **கைதொட்டது... அமிழ்தம்:** இல்லற வாழ்க்கையில் முதன்முதலாகத் தலைவி சமைத்த உணவை வானவர் அமிழ்தம் எனப் பாராட்டும்போது கூற்று நிகழ்தல்.

10. **பூக்கட்டுதல்:** இல்லற வாழ்க்கை அமைந்த பின்னர்த் தலைவி பூத்தொடுக்கும் எழிலை நினைக்கும் போது கூற்று நிகழ்தல்.

11. **ஒழுக்கம் காட்டிய குறிப்பு:** கற்பு வாழ்க்கை தொடங்கியவுடன் கடவுளை வணங்குதல், பெரியோரைப் பேணுதல் போன்ற தலைவியின் நற்குணங்களைப் பேசுதல்.

12. **அந்தரத்து எழுதிய எழுத்து:** அறியாப் பருவமுடைய தலைவியின் களவொழுக்கக் காலக் குறைபாடுகள் கற்பு வாழ்க்கையில் அந்தரத்தில் எழுதிய எழுத்துக்கள் போலக் கலைந்துவிட்டதாகக் கூறுதல்.

13. **அழியல் - அஞ்சல்:** களவுக் காலத்தில் வந்த இன்னல்களை எண்ணி வருந்த வேண்டாம் என்றும் அஞ்ச வேண்டாம் என்றும் கூறியதை எண்ணிப் பேசுதல்,

14. **நோன்மையும் பெருமையும்:** பொறுமையும் பெருமையும் உண்மையானவை எனக்கூறி வழிப்படுத்திய தோழியை எண்ணிப் பேசுதல்.

15. **புதல்வற் பயந்த... பொழுது:** புதல்வனைப் பயந்த சிறிது காலத்திற்குப் பிறகு சான்றோரைப் புதல்வனுடன் வணங்கும் முறையை எண்ணிப் பேசுதல்.

16. **சிறடி புல்லிய இரவு:** கற்புக் காலத்தில் தலைவியைப் பிரிந்த தலைவன் மீண்டும் வந்து தலைவியின் ஊடலைத் தீர்க்க அவளது அடிகளைப் பற்றியபோது கூற்று நிகழ்தல்,

17. **ஊடல்.. பெயர்த்தல்:** பரத்தையிற் பிரிந்து சென்று மீண்ட தலைவனுடன் ஊடல் கொண்ட தலைவியின் ஊடலைத் தவிர்க்கப் பிற பெண்டிருடன் பேசுதல்.

18. **புலம்பிய இருவர்:** பரத்தையின் பிரிந்து மீண்ட தலைவனும் ஊடல் கொண்ட தலைவியும் தனிமைப்பட்டு வருந்தும்போதும் தலைவன் கூற்று நிகழ்தல்.

19. **பிரிவின் அஞ்சிய பையுள்:** பரத்தையின்பால் பிரிந்த தலைவன் தான் பிரிந்து போனதை எண்ணி வருந்தும்போது கூற்று நிகழ்தல்.

20. **பெயர்த்து உள்ளிய வழி:** முன்பு தலைவியைப் பிரிந்து சென்று திரும்பிய தலைவன் மீண்டும் பிரிந்து செல்ல நினைக்கும்போது கூற்று நிகழ்தல்.

21. **காமத்தின் வலி:** பிரிந்து சென்று தேடும் பொருளை விடத் தலைவியின்பால் கொண்டுள்ள காமம் வலியது என எண்ணும்போது தலைவன் கூற்று நிகழ்தல்.

22. **கைவிடின் அச்சம்:** தலைவனைக் கைவிட்டுச் சென்றால் அவளது உயிர் பிரிந்து விடும் என எண்ணும்போது தலைவன் கூற்று நிகழ்தல்.

23. **தானவள் பிழைத்த நிலை:** நின்னைப் பிரியேன் என்று முன்பு கூறி இப்போது பிரிய நினைப்பதை எண்ணும்போது தலைவன் கூற்று நிகழ்தல்.

24. **உடன்சேறல்:** தலைவனுடன் தானும் உடன் செல்லத் தலைவி பிடிவாதம் பிடித்ததை எண்ணும்போது அவன் கூற்று நிகழ்தல்,

25. **மடம்பட வந்த தோழி:** பொருள் ஈட்டத் தலைவியையும் அழைத்துச் செல்லுமாறு தோழி அறியாமையில் கூறியதை எண்ணும்போது தாலைவன் பேசுதல்,

26. **வேற்றுநாடு அகறல்:** வேற்று நாட்டுக்குத் தான் தலைவியைப் பிரிந்து செல்ல நினைத்தபோது தலைவன் கூற்று நிகழ்தல்.

27. **மீண்டு வரல்:** வேற்று நாட்டுக்குச் சென்று திரும்பி வரும்போது தலைவியை எண்ணிப் பார்த்துத் தலைவன் கூற்று நிகழ்தல்.

28. **பெருகிய சிறப்பு:** தலைவியைப் பிரிந்து மன்னனுக்காகப் பகை வென்ற வெற்றியைக் கூறும்போது தலைவன் பேசுதல்.

29. **பேரிசை ஊர்திப் பாகர்:** தனக்கு ஊர்தி செலுத்தி உடன் வந்த பாங்கனிடம் தலைவன் பேசும்போது கூற்று நிகழ்தல்.

30. **ஏமறு கிளவி:** காமக்கிழத்தி, தலைவி போன்றோர் ஏதாவது கேட்கும்போது தலைவன் கூற்று நிகழ்தல்.

31. **தன்னிலை கிளத்தல்:** தலைவியைப் பிரிந்தபோதும் வேற்று நாட்டில் அடைந்த இன்னல் பற்றிப் பேசும் போதும் தலைவன் கூற்று நிகழ்தல்.

32. **நல்லவை வேண்டல்:** அரிய செயல்களைச் செய்ததை விருந்தினரோடு சேர்ந்து அளவளாவும்போது தலைவன் கூற்று நிகழ்தல்.

33. **மாலை ஏந்தியோர்:** பெருமையைப் பாராட்ட மகளிரும் மக்களும் மாலை ஏந்தி வந்தபோது தலைவன் கூற்று நிகழ்தல்.

மேற்குறிப்பிட்டவாறு கற்பு வாழ்க்கையில் களவுக் கால வாழ்க்கையையும் இப்போதுள்ள வாழ்க்கையையும் ஊடல், கூடல், பிரிவு போன்றவற்றையும் எண்ணிப் பார்க்கும்போது தலைவி, தோழி போன்றோருடன் தலைவன் கூற்று நிகழும்.

**கற்பு வாழ்க்கையில் தலைவி கூற்று**

**145. அவன் அறிவாற்ற அறியும் ஆகலின்**

ஏற்றற் கண்ணும் நிறுத்தற் கண்ணும்
உரிமை கொடுத்த கிழவோன் பாங்கின்
பெருமையின் திரியா அன்பின் கண்ணும்
கிழவனை மகடூஉப் புலம்பு பெரிதாகலின்

அலமரல் பெருகிய காமத்து மிகுதியும்
இன்பமும் இடும்பையும் ஆகிய இடத்தும்
கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி
நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறீஇ
நளியின் நீக்கிய விளிவரு நிலையும்

புகன்ற உள்ளமொடு புதுவோர் சாயற்கு
அகன்ற கிழவனைப் புலம்பு நனிகாட்டி
இயன்ற நெஞ்சம் தலைப்பெயர்த் தருக்கி
எதிர்பெய்து மறுத்து ஈரத்து மருங்கினும்
தங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி

எங்கையர்க்கு உரைஎன இரத்தற் கண்ணும்
செல்லாக் காலைச் செல்கஎன விடுத்தலும்
காமக் கிழத்தி தன்மகத் தழீஇ
ஏமுறு விளையாட்டு இறுதிக் கண்ணும்
சிறந்த செய்கை அவ்வழித் தோன்றி

அறம்புரி நெஞ்சமொடு தன்வரவு அறியாமைப்
புறம்செய்து பெயர்த்தல் வேண்டிடத் தானும்
தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனால்

அந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கலும்
கொடியோர் கொடுமை சுடும்என ஒடியாது

நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇப்
பகுதியின் நீங்கிய தகுதிக் கண்ணும்
கொடுமை ஒழுக்கம் கோடல் வேண்டி
அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக்
காதல் எங்கையர் காணின் நன்றென

மாதர் சான்ற வகையின் கண்ணும்
தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை
மாயப் பரத்தை உள்ளிய வழியும்
தன்வயின் சிறப்பினும் அவன்வயின் பிரிப்பினும்
இன்னாத் தொல்சூள் எடுத்தற் கண்ணும்

காமக் கிழத்தியர் நலம்பா ராட்டிய
தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும்
கொடுமை ஒழுக்கத்துத் தோழிக்கு உரியவை
வடுவறு சிறப்பின் கற்பில் திரியாமைக்
காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும்

ஆவயின் வரூஉம் பல்வேறு நிலையினும்
வாயிலின் வரூஉம் வகையொடு தொகைஇக்
கிழவோள் செப்பல் கிழவது என்ப.

1. அவள் அறிவு

2. புலம்பு பெரிதாதல்

3. உரிமை கொடுத்த கிழவன்

4. இன்பமும் இடும்பையும்

5. நெய்யணி நயந்த கிழவன்.

6. இளவருநிலை

7. புதுவோர் சாயல்

8. எங்கையர்க்கு உரை

9. செல்லாக் காலம்

10. காமக்கிழத்தி

11. புறம செய்து பெயர்த்தல்

12. தந்தையர் ஒப்பர் மக்கள்

13 கொடியோர் கொடுமை

14 அடிமேல் விழுந்த கிழவன்

15. காதல் எங்கையர்

16. சிறைப்பும் பிரிப்பும

17. தொல்குள் எடுத்தல்

18. கிழத்தியர் நலம் பாராட்டுதல்

19. கொடுமை ஒழுக்கம்

20. கற்பின் திரியாமை

கற்பு வாழ்க்கையில் தலைவியின் கூற்று நிகழும் இடங்களாக இருபதைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

1. **அவன் அறிவு:** களவொழுக்கத்தின்வழித் தலைவனை நன்கு அறிந்த தலைவி அவன் பெருமைகளைக் கூறும்போது பேசுதல்,

2. **புலம்பு பெரிதாதல்:** அறமும் பொருளும் செய்வதனால் தலைவனைப் பிரிந்த நிலையில் தலைவியின் கூற்று நிகழ்தல்.

3. **உரிமை கொடுத்த கிழவன்:** தனக்கு உரிமைகள் கொடுத்து அன்பு செலுத்தும் தலைவனை நினைக்கும்போது கூற்று நிகழ்தல்.

4. **இன்பமும் இடும்பையும்:** பொருள்வயினும் பரத்தையினும் பிரியும் தலைவனைத் தலைவி காணும்போது மகிழ்ச்சி அடைதல், தனிமையாக இருக்கும்போது துன்பம் அடைதல் என இச்சூழலில் தலைவியின் கூற்று நிகழ்தல்.

5. **நெய்யணி நயந்த கிழவன்:** புதல்வன் பிறந்தபின் நெய்யணி என்னும் நீராடல் முடிந்து வரும்போது தலைவனைக் கண்டு தலைவி பேசுதல்.

6. **இளவருநிலை:** பரத்தையர்பால் நாடிச் சென்ற தலைவனை எண்ணிக் கலங்கிய நிலையில் இருக்கும்போது தலைவி பேசுதல்.

7. **புதுவோர் சாயல்:** புதிய பெண்களை நாடிச் சென்று வந்த தலைவனிடம் தன் துன்பத்தை வெளிக்காட்டும் போது கூற்று நிகழ்தல்.

8. **எங்கையர்க்கு உரை:** பரத்தையரிடம் சென்று திரும்பிய தலைவன் பேசும் பணிவான மொழிகளைக் கேட்டு, இதை என் தங்கையராகிய பரத்தையரிடம் கூறுக என்னும் போது தலைவியின் கூற்று நிகழ்தல்.

9. **செல்லாக் காலம்:** தலைவன் பரத்தையர் இல்லங்களுக்குச் செல்லாத காலத்தும் "அங்குச் செல்க" என்று கூறும்போது கூற்று நிகழ்தல்.

10. **காமக்கிழத்தி:** தலைவனின் காமக்கிழத்தி தெருவில் விளையாடும் தன் மகனைத் தழுவி மகிழ்வதைக் காணும்போது தலைவியின் கூற்று நிகழ்தல்.

11. **புறம் செய்து பெயர்த்தல்:** காமக் கிழத்தி விளையாடியது போலத் தலைவியும் தன் மகனுடன் விளையாட, அப்போது பின்னால் வந்த தலைவன் அவளது ஊடல் தவிர்க்க முற்படும்போது பேசுதல்.

12. **தந்தையர் ஒப்பர் மக்கள்:** தந்தையைப் போலவே மக்களும் இருப்பர் எனத் தலைவன் பிரிதல், ஊடல் போன்றவற்றை நினைத்துத் தலைவி தன் மகனைக் கடிந்து கூறும்போது கூற்று நிகழ்தல்.

13. **கொடியோர் கொடுமை:** கொடியோரின் செயல் தீங்கையே விளைவிக்கும் என எண்ணிச் சான்றோரின் பெருமை கூறும்போது தலைவியின் கூற்று நிகழும்.

14. **அடிமேல் விழுந்த கிழவன்:** பரத்தையரை நாடிச் சென்ற தலைவன் திரும்பி வந்து தன் அடிகளைப் பற்றி ஊடல் தணிக்க முற்பட்டபோது என் தங்கையர் (பரத்தையர்) நகுவர் எனக் கூறும்போது தலைவியின் கூற்று நிகழ்தல்.

15. **காதல் எங்கையர்:** நல்ல அணிகலன்களை அணிந்து தெருவில் விளையாடிய தன் புதல்வனைப் பரத்தையர் பார்த்து மகிழ்ந்ததை அறிந்தபோது தலைவியின் கூற்று நிகழ்தல்.

16. **சிறைப்பும் பிரிப்பும்:** தலைவனின் பெண்டிர் தன் மகனை விரும்புவதால் அவனைத் தன்னோடு பிரியாமல் வைத்திருக்கும்போதும் தலைவனிடம் இருந்து பிரிக்கும் போதும் தலைவியின் கூற்று நிகழ்தல்.

17. **தொல்சூள் எடுத்தல்:** தலைவன் களவு, கற்புக் காலங்களில் சொல்லிய உறுதி மொழிகளை நினைவூட்டும்போது தலைவி பேசுதல்.

18. **கிழத்தியர் நலம் பாராட்டுதல்:** தலைவன் தன்னுடைய காமக் கிழத்தியின் நலம் பாராட்டுவதை அறிந்த போது தலைவியின் கூற்று நிகழ்தல்.

19. **கொடுமை ஒழுக்கம்:** பொதுவாகத் தலைவனின் கொடுமையான ஒழுக்கங்களைச் சொல்லும் தோழியிடம் தலைவியின் கூற்று நிகழ்தல்.

20. **கற்பின் திரியாமை:** கற்புத்திறம் மிக்க தலைவி தலைவனிடம் காணப்படும் குணங்களுக்கு ஏற்ப வெறுத்தல்,மகிழ்தல், பிரிதல், ஊடுதல், பேணுதல் என்னும் செயல்கள் நிகழும்போது தலைவியின் கூற்று நிகழ்தல்,

இவ்வாறு களவுக் காலத்தில் தலைவனின் பல வகையான பண்புகளை நினைந்து தலைவியின் கூற்று நிகழும்.

**இறைச்சிப் பொருள்**

இறைச்சிப் பொருள் என்பது அந்தந்த நிலத்திலுள்ள உயிருள்ள கருப்பொருளைக் கொண்டு தலைவன், தலைவியின் வாழ்க்கையைக் குறிப்பாக விளக்குவதாகும்.

**146.** **புணர்ந்துடன் போகிய கிழவோன் மனையிருந்து**

**இடைச்சுரத்து இறைச்சியும் வினையும் சுட்டி**

**அன்புறு தக்க கிளத்தல் தானே**

**கிழவோன் செய்வினைக்கு அச்சம் ஆகும்.**

களவொழுக்கத்தில் தலைவனோடு உடன்போக்குப் போன தலைவி பின்னர் இல்லத்தில் இருந்து மனைவாழ்க்கை நடத்தும்போது முன்பு சுரத்திடைத் தான் கண்ட கருப்பொருளையும் அவற்றின் செயற்பாடுகளையும் கண்டு தலைவனுக்குக் கூறியதை நினைந்து, பொருள் தேடச் சென்றவன் தன் கடமை மறந்து திரும்பி வந்துவிடுவானோ என அச்சப்படுவாள்.

**147.** **தோழியுள் உறுத்த வாயில் புகுப்பினும்**

**ஆவயின் நிகழும் என்மனார் புலவர்.**

தலைவன் பொருள் தேடச் செல்ல நினைத்தபோது அதனை அறிந்து தோழியைத் தலைவி வாயிலாகத் தலைவன் பால் அனுப்பும் போது அவன் செயலுக்கு அச்சம் ஏற்படும் வகையில் தலைவியின் கூற்று அமையும்.

**கற்பு வாழ்க்கையில் தோழி கூற்று**

**148.** **பெறற்கு அரும் பெரும்பொருள் முடிந்தபின் வந்த**
**தெறற்கு அரும் மரபின் சிறப்பின் கண்ணும்**
**அற்றம் அழிவு உரைப்பினும் அற்றம் இல்லாக்**
**கிழவோன் சுட்டிய தெய்வக் கடத்தினும்**
**சீருடைப் பெரும்பொருள் வைத்தவழி மறப்பினும்**

**அடங்கா ஒழுக்கத்து அவன்வயின் அழிந்தோளை**
**அடங்கக் காட்டுதற் பொருளின் கண்ணும்**
**பிழைத்து வந்திருந்த கிழவனை நெருங்கி**
**இழைத்தாங்கு ஆக்கிக் கொடுத்தற் கண்ணும்**
**வணங்கியல் மொழியான் வணங்கற் கண்ணும்**

புறம்படு விளையாட்டுப் புல்லிய புகர்ச்சியும்
சிறந்த புதல்வனைத் தேராது புலம்பினும்
மாண் நலம்தாஎன வகுத்தற் கண்ணும்
பேணா ஒழுக்கம் நாணிய பொருளினும்
சூள்நயத் திறத்தால் சோர்வு கண்டு அழியினும்

பெரியோர் ஒழுக்கம் பெரிதெனக் கிளந்து
பெறுதகை இல்லாப் பிழைப்பினும் அவ்வயின்
உறுதகை இல்லாப் புலவியின் மூழ்கிய
கிழவோள் பால்நின்று கெடுத்தற் கண்ணும்
உணர்ப்புவயின் வாரா ஊடல் உற்றோள்வயின்

உணர்த்தல் வேண்டிய கிழவோன் பால்நின்று
தான்வெகுண்டு ஆக்கிய தகுதிக் கண்ணும்
அருமைக் காலத்துப் பெருமை காட்டிய
எண்மைக் காலத்து இரக்கத் தானும்
பாணர் கூத்தர் விறலியர் என்றிவர்

பேணிச் சொல்லிய குறைவினை எதிரும்
நீத்த கிழவனை நிகழுமாறு படீஇயர்
காத்த தன்மையின் கண்ணின்று பெயர்ப்பினும்
பிரியும் காலத்து எதிர்நின்று சாற்றிய
மரபுடை எதிரும் உளப்படப் பிறவும்

வகைபட வந்த கிளவி எல்லாம்

**தோழிக்கு உரிய என்மனார் புலவர். 32**

மேலே குறிக்கப்பட்டுள்ள நூற்பாவில் கற்பு வாழ்க்கையில் தோழியின் கூற்றாகப் பத்தொன்பது வகைகள் காணப்படுகின்றன.

1. பெரும்பொருள் முடித்தல்

2 கிழவோன் சுட்டிய தெய்வம்

3. சீருடைப் பெரும் பொருள்

4. அடங்கா ஒழுக்கம்

5. பிழைத்து வந்த கிழவன்

6. வணங்கியல் மொழி

7. புறம்படு விளையாட்டு

8. புதல்வனைத் தேராது புலம்புதல்

9. மாண் நலம்தா

10. பேணா ஒழுக்கம்

11 .சூள் நயத்திறம்

12 பெரியோர் ஒழுக்கம்

13. புலவியின் மூழ்கிய கிழவோன்

14. வெகுண்டு பேசுதல்

15. அருமை, எளிமைக்காலம்

16. பாணர், கூத்தர், விறலியர்

17. நீத்த கிழவன்

18. எதிர்நின்று சாற்றுதல்

19. எதிரும் உளப்பட பிறவும்

1. **பெரும்பொருள் முடித்தல்:** பெறுதற்கு அரிய பெரும் பொருளைத் தலைவன் ஈட்டி வந்த நிலையில் அவன் பெருமைகளைக் கூறும்போது தலைவி கூற்று நிகழ்தல்.

2. **கிழவோன் சுட்டிய தெய்வம்:** களவுக் காலத்திலும் பிறகும் தலைவனுக்கு வந்த இன்னல்களிலிருந்து காத்த தெய்வத்தை வணங்கும்போது கூற்று நிகழ்தல்.

3. **சீருடைப் பெரும்பொருள்:** சிறப்புடைய பெரும் பொருளாகிய இல்லற வாழ்க்கையைத் திட்டமிட்டவாறு நடத்தாதபோது தோழி பேசுதல்.

4. **அடங்கா ஒழுக்கம்:** புற ஒழுக்கத்தில் ஈடுபட்ட தலைவனை வெறுத்த தலைவியிடம் அவன் அவள்பால் கொண்டுள்ள அன்பைக் கூறும்போது கூற்று நிகழ்தல்.

5. **பிழைத்து வந்த கிழவன்:** பரத்தையின்பால் சென்று திரும்பிய தலைவனைக் கடிந்து அவனைத் தலைவியின்பால் சேர்த்து வைக்கும்போது தோழி பேசுதல்.

6. **வணங்கியல் மொழி**: தலைவனின் பெருமையைக் கூறி அவனை வணங்கும்போது தோழியின் கூற்று நிகழ்தல்.

7. **புறம்படு விளையாட்டு:** தலைவியைப் பிரிந்த தலைவன் சேரிக்குச் சென்று பரத்தையருடன் விளையாடி வாழ்வதை அறியும்போது தோழியின் கூற்று நிகழ்தல்.

8. **புதல்வனைத் தேராது புலம்புதல்:** தலைவன் தான் பெற்ற புதல்வனை நினைத்துப் பார்க்காமல் பரத்தையருடன் இருந்து பிறகு வந்து பார்க்க முடியாது புலம்பும் போது தோழி கூற்று நிகழ்தல்.

9. **மாண் நலம் தா:** “எம் தோழியின் நலத்தை நீ திரும்பித் தா எனக் கூறும் போது தோழியின் கூற்று நிகழ்தல்

10. **பேணா ஒழுக்கம்** தலைவன் தன்னைப் பேணாத நிலை கண்டு தலைவி நாணி வருந்தியபோது தோழியின் கூற்று நிகழ்தல்.

11. **சூள் நயத் திறம்:** தலைவன் களவு, கற்புக் காலங்களில் உரைத்த உறுதிமொழிகளைக் காக்காததை நினைத்துத் தோழி கூற்று நிகழ்தல்.

12. **பெரியோர் ஒழுக்கம்:** பெரியோர் கூறும் ஒழுக்கங்களைப் பெரிதாக எண்ணாமல் தலைவன் தலைவிக்குக் குற்றங்களைச் செய்யும்போது தோழி பேசுதல்.

13. **புலவியின் மூழ்கிய கிழவோன் :** ஊடல் கொண்ட தலைவிக்காகப் பேசுவது போலத் தலைவனுக்காகப் பேசும்போது தோழியின் கூற்று நிகழ்தல்.

14. **வெகுண்டு பேசுதல்:** தலைவன் கேட்டும் தலைவி ஊடல் தவிர்க்காதபோது தலைவனை வெகுண்டு பேசுவது போலப் பேசும்போதும் தோழி கூற்று நிகழ்தல்.

15. **அருமை எளிமைக்காலம்:** தலைவி, களவுக் காலத்தில் அருமையாக இருந்தாள் கற்புக் காலத்தில் எளிமையாக இருக்கிறாள். இந்நிலையை எண்ணும்போது தோழி பேசுதல்,

16. **பாணர், கூத்தர், விறலியர்:** பாணர், கூத்தர், விறலியர் போன்றோர் கூறும் குறையுடைய செயலுக்கு மறுப்புக் கூறும்போது தோழி கூற்று நிகழ்தல்.

17. **நீத்த கிழவன்:** தலைவியைப் பிரிந்த தலைவனைக் கண்டு மீண்டும் தலைவியோடு சேர்ந்து வாழுமாறு கூறும்போது தோழி கூற்று நிகழ்தல்.

18. **எதிர்நின்று சுற்றுதல்:** நெடுந்தூரம் பிரிந்து செல்லத் தலைவன் கருதியபோது அவனுக்கு நேர் நின்று தோழி பேசுதல்.

19. **எதிரும் உளப்பட பிறவும்:** இவை போலத் தலைவன் வரவு கூறுதல், பருவம் கூறுதல் எனப் பலவகையில் வேண்டும்போது தோழி கூற்று நிகழ்தல்.

மேற்குறிப்பிட்டவாறு கற்புக் காலத்தில் தோழியின் கூற்று நிகழ்வதைத் தொல்காப்பியர் தொகுத்துக் கூறியுள்ளார்.

**காமக்கிழத்தியர் கூற்று**

காமக் கிழத்தியர் மூன்று வகைப்படுவர். ஒத்த கிழத்தி என்பவள் தலைவிக்குப்பின் தலைவன் குலத்திலிருந்து வரைந்து கொள்ளப்பட்டவள். இழிந்த கிழத்தி என்பவள் தலைவன் குலத்திற்குக்கீழ் நிலையுள்ள குலத்திலிருந்து வரைந்து கொள்ளப்பட்டவள்.

**149.** **புல்லுதல் மயக்கும் புலவிக் கண்ணும்**
**இல்லோர் செய்வினை இகழ்ச்சிக் கண்ணும்**
**பல்வேறு புதல்வர்க் கண்டுநனி உவப்பினும்**
**மறையின் வந்த மனையோள் செய்வினை**
**பொறையின்று பெருகிய பருவரல் கண்ணும்**

**காதல் சோர்வில் கடப்பாட்டு ஆண்மையின்**
**தாய்போல் கழறித் தழீஇய மனைவியைக்**
**காய்வின்று அவன்வயின் பொருத்தற் கண்ணும்**
**இன்னகைப் புதல்வனைத் தழீஇ இழை அணிந்து**
**பின்னர் வந்த வாயிற் கண்ணும்**
**மனையோள் ஒத்தலின் தன்னோர் அன்னோர்**

**மிகைப்படக் குறித்த கொள்கைக் கண்ணும்**

**எண்ணிய பண்ணை என்று இவற்றொடு பிறவும்**

**கண்ணிய காமக் கிழத்தியர் மேன.14**

மேலே உள்ள நூற்பாவில் காமக்கிழத்தியர்களின் கூற்றுகளாக எட்டு வகைகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன

1. புலவிக்கண்
2. இகழ்ச்சிக்கண்
3. புதல்வர்க் காண்டல்
4. மறையோள் செய்வினை
5. அவன்வயின் பொருத்தல்
6. புதல்வனைத் தழுவுதல்
7. மனையோள் ஒத்தல்
8. எண்ணிய பண்ணை

1. **புலவிக்கண்:** தலைவன் தலைவியைப் பிரிந்து வந்து தன்னைத் தழுவிக் கொள்ளாத நிலையில் காமக் கிழத்தியின் கூற்று நிகழ்தல்.

2. **இகழ்ச்சிக்கண்:** மனையிடத்துத் தலைவனும் தலைவியும் ஊடல் கொண்டிருப்பது அறிந்து மகிழ்ந்திருக்கும்போது காமக்கிழத்தியின் கூற்று நிகழ்தல்.

3. **புதல்வர்க் காண்டல்:** தலைவனுக்குப் பிறந்த வேறுவேறு புதல்வரைக் காணும் மகிழ்ச்சியின்போது காமக்கிழத்தி பேசுதல்.

4. **மறையோள் செய்வினை:** களவொழுக்கத்தின் வழிக் கற்பு வாழ்க்கையில் தலைவியாக வந்தவள் அவனிடம் குற்றங் கண்டு பேசுவது அறிந்து காமக்கிழத்தி பேசுதல்.

5. **அவன்வயின் பொருத்தல்:** தலைவி ஊடல் கொள்ளும்போது தலைவனை இடித்துரைத்துத் தாய்போல அறிவுரை கூறித் தலைவியுடன் சேர்த்து வைக்கும்போது காமக் கிழத்தியின் கூற்று நிகழ்தல்.

6. **புதல்வனைத் தழுவுதல்:** தலைவனுக்கும் தலைவிக்கும் பிறந்த மகனுக்கு அணிகலன்கள் அணிவித்து மகிழும்போது காமக் கிழத்தியின் கூற்று நிகழ்தல்.

7. **மனையோள் ஒத்தல்:** தான் தலைவனுக்கு மனைவி போல் இருந்தால் வேறுபல பெண்டிர் அவனுக்கு இருத்தல் தகுதி அன்று என எண்ணும்போது பேசுதல்.

8. **எண்ணிய பண்ணை:** தலைவன் காமக் கிழத்தியோடு ஆறு, குளம், பூங்கா போன்ற இடங்களுக்குச் சென்று விளையாடும்போது காமக் கிழத்தியின் கூற்று நிகழ்தல்.

மேற்குறிப்பிட்டவாறு காமக் கிழத்தியின் கூற்று தலைவன், தலைவியின் இல்லற வாழ்வோடு முரண்பட்டும் சார்ந்தும் அமையும்.

**வாயில்கள்**

தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே வாயிலாக- வழியாக அமையக் கூடியவர்கள். இருவரையும் அன்பு பாராட்டக் கருத்து வேறுபாடுகளைக் களைந்து நல் வழிப்படுத்த உதவுவார்கள். தோழி, செவிலி, பாங்கன் எனப் பலர் வாயிலாக இருப்பர்.

**150. கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்**

**மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்**

**விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**

**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்**

**முகம்புகல் முறைமையின் கிழவோற்கு உரைத்தல்**

**அகம்புகல் மரபின் வாயில்கட்கு உரிய. (6)**

தலைவியின் கற்பின் மேம்பாடு, அன்பின் மிகுதி, இல்லற ஒழுக்கம், மென்மைத் தன்மை, பொறுமை, மனக்கட்டுப்பாடு, நிறை, விருந்தினரையும் சுற்றத்தாரையும் பேணும்முறை போன்ற நற்குணங்களைத் தலைவன் விரும்பும் வகையில் உரைக்கும் பண்பு வாயில் நேர்பவர்களுக்கு உரித்தாகும்.

**செவிலி கூற்று**

**151. கழிவினும் நிகழ்வினும் எதிர்வினும் வழிகொள**

**நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்**

**செவிலிக்கு உரிய ஆகும் என்ப.**

இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்று காலத்திற்கும் பொதுவான கற்பு முதலிய நல்லறங்களைக் கற்பிப்பதும் அல்ல குணங்களை நீக்கச் சொல்வதும் செவிலித்தாய்க்கு உரிய கூற்று என்பர்.

செவிலி பரம்பரையாகத் தலைவியொடு பிரிவின்றி இயைந்த தொடர்பு உடையவள். செவிலி தலைவிக்கு வளர்ப்புத் தாயாக இருக்கும்போது செவிலியின் மகள் தலைவிக்கு உயிர்த்தோழியாய் இருப்பாள். இத்தோழி பின்னர்த் தலைவியின் மகளுக்குச் செவிலி ஆகுமிடத்துழி அவள் மகள் தலைவியினுடைய மகளுக்குத் தோழி ஆவாள்.(ப.73)

**அறிவர் கூற்று (12,13)**

**152. சொல்லிய கிளவி அறிவர்க்கும் உரிய.**

நல்லவற்றைக் கற்பித்தல், அல்லவற்றைப் போக்குதல் என்னும் செவிலிக்கு உரிய இரு கூற்றுப் பண்புகளும் முக்காலமும் உணர்ந்த சான்றோர் எனப்படும் அறிவர்க்கும் உரியவை ஆகும்.

**அறிவர் கூற்று**

**153. இடித்துவரை நிறுத்தலும் அவரது ஆகும்**

**கிழவனும் கிழத்தியும் அவர்வரை நிற்றலின்**

கற்பு வாழ்க்கை நடத்தும் தலைவன், தலைவி அறநெறி தவறும்போது அவர்களை இடித்துரைத்தும் கடிந்துரைத்தும் நல்வழிப்படுத்துதல் சான்றோராகிய அறிவர் கடமையாகும்.

**தலைவனுக்கும் ஊடல் உண்டு**

**154. உணர்ப்புவரை இறப்பினும் செய்குறி பிழைப்பினும்**

**புலத்தலும் ஊடலும் கிழவோற்கு உரிய.**

களவொழுக்கக் காலத்தில் தலைவி குறியிடம் தவறிய போதும் கற்புக் காலத்தில் அவளுடைய ஊடல் எல்லை மிகும் போதும் தலைவனுக்கு வெறுப்பும் ஊடலும் ஏற்படுதல் உண்டு.

**தலைவன் ஊடலில் தோழி**

**155. புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்தும்**

**சொலத்தகு கிளவி தோழிக்கு உரிய.**

தலைவி இடத்து வெறுப்பும் ஊடலும் தலைவன் கொண்டபோது அவனிடம் பணிவான மொழிகளைக் கூறி முறைப்படுத்துவது தோழிக்கு உரியதாகும்.

**தலைவனை இடித்துரைக்கும் தோழி**

**156. பரத்தை மறுத்தல் வேண்டியும் கிழத்தி**

**மடத்தகு கிழமை உடைமை யானும்**

**அன்பிலை கொடியை என்றலும் உரியள்.**

தலைவன் பரத்தையிடம் செல்வத்தைத் தவிர்ப்பதற்காகவும் தலைவியினுடைய இளமைப் பருவத்தின் மேன்மையை உணர்த்தும் பொருட்டாகவும் தலைவனை "அன்பிலை, கொடியை" எனக் கூறும் தகுதி தோழிக்கு உரியது.

**தலைவியின் ஊடல்**

**157. அவன் குறிப்பு அறிதல் வேண்டியும் கிழவி**

**அகம்மலி ஊடல் அகற்சிக் கண்ணும்**

**வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறுமே.**

தலைவன் கொண்டிருக்கும் குறிப்பை அறிவதற்காகவும் உள்ளத்தில் உள்ள ஊடலை நீக்குவதற்காகவும் தலைவனைத் தலைவி வேறுபடுத்திப் பேசி ஊடலை வெளிப்படுத்துவாள்.

**பணிவும் வணக்கமும்**

**158. காமக் கடப்பினுள் பணிந்த கிளவி**

**காணுங்காலைக் கிழவோற்கு உரித்தே**

**வழிபடு கிழமை அவட்கு இயலான.**

ஊடல் கொண்ட தலைவியிடம் காம வேட்கை மிகுந்த தலைவன் பணிவான மொழிகளைக் கூறித் தலைவியிடம் இரந்து நிற்பதும் உண்டாம் தலைவனை வணங்கி நிற்கும் இயல்பான பண்பு தலைவிக்கு உரியது.

**தலைவியின் அன்பு**

**159. அருள்முந்து உறுத்த அன்புபொதி கிளவி**

**பொருள்பட மொழிதல் கிழவோட்கும் உரித்தே.**

உள்ளத்தில் சுரக்கும் அருளின் மேன்மையால் தோன்றும் அன்பின் வழியான சொற்களை உண்மையுடன் பேசுந் தன்மை தலைவிக்கு உரியதாகும்.

**அலர் மொழி**

**160. களவும் கற்பும் அலர் வரைவு இன்றே.**

ஊரார் பேசும் அலர் மொழியாகிய பழிச்சொல் களவொழுக்கத்தில் இருவரின் உறவு பற்றியும் கற்புக் காலத்தில் பிரிவு பற்றியும் அமைந்திருக்கும்.

**அலரின் பயன்**

**161. அலரின் தோன்றும் காமத்தின் மிகுதி.**

ஊர்மக்களின் பழிப்பேச்சால், தலைவன், தலைவியின் காம வேட்கை மிகுதி ஆகும்.

அலர் எனப்படும் பிறரின் புறம் பேசுதல் தலைவன். தலைவியின் களவு, கற்பு வாழ்க்கைக்கு உரம் சேர்ப்பதாகக் குறிப்பர்.

களவொழுக்கத்தின் போது அலர் எழுந்தால் சந்திக்கும் பகல். இரவுக் குறிகள் தவிர்க்கப்படும். உடனே மணந்து கொள்ள முற்படுவர்.

கற்புக் காலமாகிய மண வாழ்க்கையின் போது ஏற்படும் அலர் தலைவனின் பரத்தையின் பிரிவு, தலைவியின் ஊடல் பற்றியதாக இருக்கும். இதனால் தலைவன் பரத்தையைப் பிரிந்து வருவான். தலைவியின் ஊடல் தீரும் எனத் தமிழண்ணல் குறிப்பிடுகின்றார்.

**தலைவனின் காம ஆட்டம்**

**162. கிழவோன் விளையாட்டு ஆங்கும் அற்றே.**

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் தன் காமக்கிழத்தி, பரத்தையுடன் ஆறு, குளம், சோலைகளில் மகிழ்ந்து ஆடும்போதும் அலர் தோன்றும்.

**வாயிலோரின் எல்லை**

**163. மனைவி தலைத்தாள் கிழவோன் கொடுமை**

**தம்முள ஆதல் வாயில்கட்கு இல்லை.**

தலைவன் பிரிவால் வாடிக் கொடுமைப்படும் தலைவியின் நிலையை வாயில்களாக இருப்போர் தமக்கு ஏற்பட்டவை போல அவனிடம் கூறுவதில்லை.

**தலைவிக்கு நம்பிக்கை**

**164. மனைவி முன்னர்க் கையறு கிளவி**

**மனைவிக்கு உறுதி உள்வழி உண்டே.**

தலைவனிடம் கூற முடியாவிட்டாலும் பிரிவால் வாடும் தலைவியிடம் அவளுடைய ஆற்றாமைக்கு வருந்தித் தம் ஆற்றாமையைக் கூறித் தேற்றுதல் தோழி போன்ற வாயில்களுக்கு உண்டு.

**வாயிலோரின் புறமொழி**

**165. முன்னிலைப் புறமொழி எல்லா வாயிற்கும்**

**பின்னிலைத் தோன்றும் என்மனார் புலவர்.**

தலைவியைப் பிரிந்திருக்கும் தலைவனும் வருந்தி வாடும் தலைவியும் தங்களின் நிலையை வாயிலோருக்குக் கூறினால் அவர்கள் மற்றவர்களுக்காகக் கூறுவது போலக்கூறி உதவ முயல்வர் எனக் குறிப்பர்.

**கூத்தர் ஊடல் தணித்தல்**

**166. தொல்லவை உரைத்தலும் நுகர்ச்சி ஏத்தலும்**

**பல்லாற் றானும் ஊடலின் தணித்தலும்**

**உறுதி காட்டலும் அறிவுமெய்ந் நிறுத்தலும்**

**ஏதுவின் உரைத்தலும் துணிவு காட்டலும்**

**அணிநிலை உரைத்தலும் கூத்தர் மேன.**

கூத்தர் எட்டு வகையான வழிமுறைகளைத் தலைவிக்குக் கூறி உதவ முற்படுவார்கள்.

1. தொல்லவை உரைத்தல்
2. நுகர்ச்சி ஏத்தல்
3. ஊடலில் தகைத்தல்
4. உறுதி காட்டல்
5. அறிவு மெய்ந் நிறுத்தல்

6. ஏதுவின் உரைத்தல்

7. துணியக் காட்டல்

8. அணிநிலை உரைத்தல்

1. **தொல்லவை உரைத்தல்:** தலைவன், தலைவியின் முந்தைய களவு வாழ்க்கை நிகழ்வுகளை எடுத்துக் கூறுதல்.

2. **நுகர்ச்சி ஏத்தல்:** இன்பம் நுகர்வதால் வரும் சிறப்பைக் கூத்தர் எடுத்துக் கூறுதல்.

3. **ஊடலில் தகைத்தல்:** தலைவன், தலைவி இருவருக்கும் இடையே ஊடலை நீக்கிக் கூத்தர் அன்புடன் வாழக் கூறுதல்.

4. **உறுதி காட்டல்:** இருவரும் ஊடலை நீக்கிக் கொண்டு வாழ்ந்தால் இன்னன்ன நன்மை நிகழும் எனக் கூத்தர் கூறுதல்.

5. **அறிவு மெய்ந் நிறுத்தல்:** தலைவியின்பால் உண்டாகிய அறிவு மயக்கத்தைப் போக்க அறிவுரை கூறுதல்.

6. **ஏதுவின் உரைத்தல்:** தலைவன், தலைவியிடம் ஊடல் மிகுந்தால் உண்டாகும் இடர்களை விளக்கிக் கூறுதல்

7. **துணியக் காட்டல்:** தலைவி மன இறுக்கத்திலிருந்து விடுபட்டுத் துணிந்து செயல்பட வேண்டும்

8. **அணிநிலை உரைத்தல்:** தலைவி தன்னை அணிகலன்களால் ஒப்பனை செய்து கொள்ள வேண்டும் எனக் கூத்தர் கூறுதல்.

மேற்குறிப்பிட்ட வழிமுறைகளைக் கூறிக் கூத்தர்கள் தலைவியின் ஊடலைத் தீர்க்க உதவுவர்.

**கூத்தரும் பாணரும் உதவுதல்**

**167.** **நிலம்பெயர்ந்து உரைத்தல் வரைநிலை உரைத்தல்**

**கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை உரிய.**

தலைவன், தலைவியைப் பிரிந்து வேற்று நிலத்தில் இருக்கும் போது கூத்தரும் பாணரும் சென்று தலைவியின் நிலையை எடுத்துக் கூறுவர். தலைவன் திரும்பி வருவதாகக் கூறிச் சென்ற பருவநிலை பற்றியும் கூறி ஏற்றவழியில் உதவுவர்.

**ஏவல் இளையோர் (29,30)**

**168.** **ஆற்றது பண்பும் கருமத்து வினையும்**

**ஏவல் முடிவும் வினாவும் செப்பும்**

**ஆற்றிடைக் கண்ட பொருளும் இறைச்சியும்**

**தோற்றம் சான்ற அன்னவை பிறவும்**

**இளையோர்க்கு உரிய கிளவி என்ப.**

தலைவனுக்குத் தோன்றாத் துணையாக இருக்கும் ஏவல் செய்யும் இளைஞர்கள் அவனுக்குப் பல்வேறு நிலையில் உதவுவார்கள்.

1. ஆற்றது பண்பு
2. கருமத்து வினை
3. ஏவல் முடிவு
4. வினா
5. செப்பு

6. ஆற்றிடைக் கண்ட பொருள்

7. இறைச்சி

8. தோற்றம் சான்ற அன்னவை

1. **ஆற்றது பண்பு:** தலைவன் பிரிந்து செல்லும் போது வழியினுடைய கரடு முரடான தன்மை வெம்மை போன்றவற்றை ஏவல் இளைஞர் கூறுதல்.

2. **கருமத்து வினை:** பொருள் தேடுதல் போன்ற காரியங்களுக்கான வழிமுறைகளைக் கண்டறிந்து கூறுதல்.

3. **ஏவல் முடிவு:** தலைவன் செய்யச் சொல்லிய பணியை முடித்து விட்டு வந்து அது பற்றிக் கூறுதல்.

4. **வினா:** தலைவன் கூறியதில் ஏதாவது ஐயம் இருந்தால் அது பற்றிப் பேசித் தெளிதல்.

5. **செப்பு:** தலைவன் ஏதாவது ஒன்றைப்பற்றிக் கேள்வி கேட்டால் பதில் தெரிந்தால் அவனிடம் கூறுதல்.

6. **ஆற்றிடைக் கண்ட பொருள்:** வினை முடிக்கச் செல்லும்போது காணும் காட்சிகள், நிமித்தம் போன்றவற்றைத் தலைவனிடம் கூறுதல்.

7. **இறைச்சி:** செல்லும் வழியில் கருப்பொருள்களாகிய விலங்கு, பறவை போன்றவற்றின் செயல்களைப் பற்றி இளைஞர் தலைவனிடம் கூறுதல்.

8. **தோற்றம் சான்ற அன்னவை:** தலைவன், தலைவிக்கும் சான்றோருக்கும் செய்யவேண்டிய பணிகளைச் செம்மையாகச் செய்தது பற்றிக் கூறுதல்

மேற்குறிப்பிட்டவாறு தலைவனுக்கு ஏவல் செய்யும் இளைஞர்கள் ஏவல்வழியும் செயல்வழியும் துணை நிற்பர்.

**169.** **உழைக்குறும் தொழிலும் காப்பும் உயர்ந்தோர்க்கு**

**நடக்கை எல்லாம் அவர்கண் படுமே.**

மேலும் தலைவன், தலைவிக்காக உடல் உழைப்பைச் செய்வதும் மெய்க் காப்பாளர்களாகச் செயல்படுவதும் உயர்ந்தோர்க்கு உரிய நடவடிக்கைகளைக் கொண்டிருப்பதும் ஏவல் இளைஞரின் செயற்பாடாகும்.

**தலைமகன் கலங்கும் இடங்கள்**

**170.** **பின்முறை ஆக்கிய பெரும்பொருள் வதுவைத்**

**தொன்முறை மனைவி எதிர்ப்பாடு ஆயினும்**

**மின்னிழைப் புதல்வனை வாயில் கொண்டு புகினும்**

**கிழவோன் இறந்தது நினைஇ ஆங்கண்**

**கலங்கலும் உரியன் என்மனார் புலவர்.**

காமக் கிழத்தியாக ஒருத்தியைப் பெரும் புகழுடன் மணக்கும் போதும் முதல் மனைவியாகிய தலைவி எதிர்ப்பட்ட போதும் பரத்தையின் இல்லத்திலிருந்து மனைக்கு வரும்போதும் அணிகலன் அணிந்த புதல்வனை வாயிலாக் கொண்டு வரும்போதும் தலைவியுடன் வாழ்ந்த கடந்த காலக் களவொழுக்கத்தை நினைத்துப் பார்க்கும்போதும் எனத் தலைவன் பல இடங்களில் கலங்குவதைப் புலவர் குறிப்பர்.

**தலைவி தலைவனைத் தழுவுதல்**

**171.** **தாய்போல் கழறித் தழீஇக் கோடல்**

**ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்துஎன மொழிப**

**கவவொடு மயங்கிய காலை யான.**

தலைவன் கவலைப்பட்டுக் கலங்கி இருக்கும்போது அவனைத் தாயைப் போலத் தழுவிக் கொண்டு தக்க அறிவுரை வழங்கி ஆதரவு தருவது தலைவியின் கடமை ஆகும்.

**தவறு பொறுக்கும் தலைவி**

**172. அவன்சோர்வு காத்தல் கடன்எனப் படுதலின்**

**மகன்தாய் உயர்பும் தன்னுயர்பு ஆகும்**

**செல்வன் பணிமொழி இயல்பாகல் ஆன.**

தலைவனின் குறைபாடுகளை வெளியில் தெரியாமல் காப்பது தலைவிக்கு உரிய பண்புகளுள் ஒன்றாகும். மகனைப் பெற்ற தாயாகிய தலைவி, தலைவனின் காமக் கிழத்தியையும் தனக்கு ஒப்பாக எண்ணுவது அவளுக்குப் பெருமை தரும்.

**பாசறைக்கு மகளிர்**

**173. எண்ணரும் பாசறைப் பெண்ணொடும் புணரார்.**

எண்ணுதற்கு அரியவான போர்ப்படை வீட்டிற்குத் தலைவன் தலைவியை அழைத்துச் செல்வதில்லை.

**போர் தொடர்பு மகளிர்**

**174. புறத்தோர் ஆங்கண் புரைவது என்ப.**

போர் தொடர்பான வேறு வகைப் பெண்டிர் பாசறையில் தங்கத்தடையில்லை எனக் குறிப்பர்.

**பிரிவு நிலையில் பார்ப்பார் கூற்று**

**175. காமநிலை உரைத்தலும் தேர்நிலை உரைத்தலும்**

**கிழவோன் குறிப்பினை எடுத்துக் கூறலும்**

**ஆவொடு பட்ட நிமித்தம் கூறலும்**

**செலவுறு கிளவியும் செலவழுங்கு கிளவியும்**

**அன்னவை பிறவும் பார்ப்பார்க்கு உரிய.**

இந்நூற்பாவில் பார்ப்பனரின் கூற்றாகப் பின்வரும் ஆறும் பார்ப்பார்க்கு உரிய கூற்றாகும்.

1. காமநிலை உரைத்தல்
2. தேர்நிலை உரைத்தல்
3. கிழவோன் குறிப்பினைக் கூறுதல்
4. நிமித்தம் கூறல்
5. செலவறு கிளவி
6. செலவழுங்கு கிளவி

1. **காமநிலை உரைத்தல்:** தலைவன் பிரிந்து சென்றால் அவனுக்கும் தலைவிக்கும் உண்டாகும் காம வேட்கையைப் பார்ப்பார் எடுத்துக் கூறுதல்.

2. **தேர்நிலை உரைத்தல்:** தலைவன் பிரிந்து சென்று செய்யக் கூடிய செயலின் விளைவுகளை ஆராய்ந்து கூறுதல்,

3. கிழவோன் குறிப்பினைக் கூறுதல்: தலைவனின் உள்ளத்தில் பொதிந்து கிடக்கும் எண்ணங்களை ஆராய்ந்து தலைவியிடம் கூறுதல்.

4. **நிமித்தம் கூறல்:** தலைவன் வினை கருதிக் கிளம்பும் நேரத்தில் பசுவோடு கூடிய நிமித்தங்களை எடுத்துக் கூறுதல்.

5. **செலவறு கிளவி:** தலைவன் உறுதியாகப் பிரிந்து போகப் போவதைத் தலைவியிடம் தெளிவாகக் கூறுதல்.

6. **செலவழுங்கு கிளவி:** தலைவன் பிரிந்து செல்லப் போவதைத் தள்ளிப் போடும் செலவழுங்கல் பற்றிக் கூறுதல்,

**வாயிலோர் மகிழ்தல்**

**176.** **எல்லா வாயிலும் இருவர் தேஎத்தும்**

புல்லிய மகிழ்ச்சிப் பொருள என்ப. வாயிலாகச் செயல்படுவோர் அனைவரும் தலைவன், தலைவி ஆகிய இருவரின் மகிழ்ச்சி சார்ந்த நிலையிலேயே செயல்படுவர்.

**சிறைப்புறப் பேச்சு**

**177.** **அன்புதலைப் பிரிந்த கிளவி தோன்றின்**

**சிறைப்புறம் குறித்தன்று என்மனார் புலவர்.**

வாயிலாக இருக்கும் தோழி, பாங்கன் போன்றோர் தலைவன், தலைவி தொடர்பாகக் கடுஞ் சொல்லைச் சொல்ல நேரிட்டால் நேராக நின்று சொல்ல மாட்டார்கள். மனைக்கு ஓரமாக உள்ள வேலிப் புறத்திலேயே பேசுவர்.

**தன்னைப் புகழும் தலைவி**

**178.** **தற்புகழ் கிளவி கிழவன்முற் கிளத்தல்**

**எத்திறத் தானும் கிழத்திக்கு இல்லை**

**முற்பட வகுத்த இரண்டு அலங்கடையே.**

பரத்தையின் பிரிந்து வந்தபோது தாயைப்போலத் தழுவிக் கொள்ளும் போதும் (கற்.171) மகன் தாய் உயர்பு தன்னுயர்பு (கற்.172) என்னும் போதும் என இரண்டு இடங்கள் அல்லாமல் பிற இடங்களில் தலைவி தன்னைப்புகழ்ந்து பேசும் தன்மை இல்லை. (39)

**தன்னைப் புகழும் தலைவன்**

**179. கிழவி முன்னர்த் தற்புகழ் கிளவி**

**கிழவோன் வினைவயின் உரிய என்ப.**

கற்பு வாழ்க்கையில் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லும் போது தன்னைப் புகழ்ந்து பேசும் வாய்ப்பு உண்டென்று கூறுவர். (40)

**பாங்கனின் எதிர்மொழி**

**180. மொழி எதிர்மொழிதல் பாங்கற்கு உரித்தே.**

தலைவன் தவறு செய்யும் இடத்தில் அவனுக்கு எதிராகப் பேசும் உரிமை பாங்கனுக்கு உரியதாகும்.

**181. குறித்து எதிர்மொழிதல் அஃகித் தோன்றும்.**

அவ்வாறு தலைவனை எதிர்த்துப் பாங்கன் பேசுவதும் மிக அருகிய நிலையிலேயே காணப்படும்.

கற்பினில் கூற்றுக்கு உரியோராகப் பேராசிரியர் பன்னிருவரைக் குறிப்பிடுகின்றார்.

பாணண், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர், பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, கிழவன், கிழத்தி என்ற பன்னிருவரும் கற்பின்கண் கூற்றுக்குரியார்.

**வற்புறுத்திப் பிரிதல்**

**182.** **துன்புறு பொழுதினும் எல்லாம் கிழவன்**

**வன்புறுத்து அல்லது சேறல் இல்லை**

எப்போது தலைவனைப் பிரிய மனம் இல்லாதவள் தலைவி. அவளை வற்புறுத்தி இசைய வைத்தபிறகே பொருள் தேடப் பிரிவான். அவள் இசைவு பெறாமல் பிரியமாட்டான்.

**பிரிவைத் தள்ளிப் போடுதல்**

**183.** **செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே**

**வன்புறை குறித்தல் தவிர்ச்சி ஆகும்.**

பிரிந்து செல்லாமல் இருத்தல் என்னும் செலவழுங்கல் பிரிவைத் தவிர்ப்பது அன்று. தலைவியை வழிக்குக் கொண்டுவந்து அவளுடைய இசைவைப் பெறுவதற்கே ஆகும்.

**செலவழுங்கல்**

இல்லற இன்பத்தில் திளைக்கும் தலைவனுக்குப் பொருளின் தேவை நினைவுக்கு வருகின்றது. தலைவனின் பிரிவைத் தலைவி தாங்கிக் கொள்ள மாட்டாள். அவனாலும் தாங்கிக் கொள்ள முடியாது. எனவே பொருள் தேடச் செல்லும் முடிவைச் சற்றுத் தன்ளிப் போடுதலே செலவழுங்கல் என்னும் துறையாகும்.

**பாசறையில் தலைவியின் நினைவு**

**184.** **கிழவி நிலையே வினையிடத்து உரையார்**

**வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்.**

போர்க்களப் பாசறையில் இருக்கும் தலைவனுக்குத் தலைவியைப் பற்றிய நினைவு போரில் வெற்றி பெற்றபிறகே தோன்றும்.

**பரத்தையின் பிரிவு**

**185.** **பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்**

**நீத்து அகன்று உறையார் என்மனார் புலவர்**

**பரத்தையின் பிரிந்த காலை யான.**

தலைவி பூப்படைந்து நின்ற நாளிலிருந்து கருவுறும் காலமாகிய பன்னிரண்டு நாட்களும் பரத்தையிடம் செல்லும் காலமாக இருந்தாலும் தலைவியைப் பிரியாமல் தலைவன் அவளுடன் இருப்பான்.

**ஓதற் பிரிவு**

**186.** **வேண்டிய கல்வி யாண்டு மூன்று. இறவாது.**

ஒருவனுக்கு முக்கியமானதாகக் கருதப்படும் கல்வி காரணமாகப் பிரிந்து செல்லும் பிரிவு மூன்று ஆண்டுகளுக்குள் அமையும்.

**காவற் பிரிவு**

**187.** **வேந்துறு தொழிலே யாண்டினது அகமே.**

மன்னன் பொருட்டாகத் தூது, நாடு காவல் போன்றவற்றிற்காக ஏற்படும் பிரிவு ஓர் ஆண்டளவிலேயே இருக்கும் (48)

**பொருள்தேடும் பிரிவு**

**188.** **ஏனைப் பிரிவும் அவ்வியல் நிலையும்.**

ஏனைய பிரிவாகிய பொருள் தேடச் செல்லும் பிரிவு ஓராண்டு அளவிலேயே அமையும்.

தலைவன் களவுக் காலத்து இட்டுப் பிரிந்தும் அருமை செய்து அயர்த்தும் ஓரிரு நாள் ஒருவழித் தணந்து பிரிதலும் வரைவிடை வைத்துப் பொருள்வயின் பிரிந்து பலநாள் தலைவியைப் பிரிதலும் நிகழும்.

கற்புக் காலத்தில் ஓதல், நாடுகாவல், தூது, பொருள், பகை என்பவை காரணமாகத் தலைவன் தலைவியைப் பிரிந்து நாடிடையிட்டும் காடிடையிட்டும் போய்ப் பல திங்கள் தங்கிவருதலும் உண்டு.

பரத்தையிற் பிரிந்து சில நாள் கழித்துத் தலைவன் தலைவியை மீண்டு வந்து கூடுதலும் உண்டு.

**தலைவன் விளையாடும் இடம்**

**189.** **யாறும் குளனும் காவும் ஆடிப்**

**பதிஇகந்து நுகர்தலும் உரிய என்ப.**

தலைவன் தலைவி, காமக் கிழத்தியர், பரத்தையர் போன்றவர்களோடு குறிப்பிட்ட காலத்தில் தனித்தனியாக யாற்றிலும் குளத்திலும் நீர் விளையாட்டில் ஈடுபடுவதும் பூங்காவில் விளையாடுவதும் உண்டு என்பர்.

**தலைவன், தலைவியின் தவம்**

**190.** **காமம் சான்ற கடைக்கோட் காலை**

**ஏமம் சான்ற மக்களொடு துவன்றி**

**அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**

**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.**

களவிலும் கற்பு வாழ்க்கையிலும் இன்பம் நுகர்ந்து பெருவாழ்வு வாழ்ந்த தலைவனும் தலைவியும் முதுமையில் தமக்குப் பாதுகாப்பான தம் மக்களோடும் சுற்றத்தோடும் அறவாழ்வு வாழ்ந்து பேரின்ப வாழ்வை அடைதலே பிறவிப் பயனாகும்.

**வாயில் ஆவோர்**

**191.** **தோழி தாயே பார்ப்பான் பாங்கன்**
**பாணன் பாடினி இளையர் விருந்தினர்**
**கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்**
**யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப.**

தலைவன் தலைவியின் களவு, கற்பு வாழ்க்கையில் இருவருக்கும் தோன்றாத் துணையாக வாயில்களாக இருப்பவர்கள் தோழி, செவிலித்தாய், பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, ஏவலர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர் எனப் பன்னிருவர் ஆவர்.

களவு வாழ்வில் தொடங்கிக் கற்பு வாழ்வில் ஈடுபட்டிருக்கும் தலைவன், தலைவிக்குப் பல நிலையில் பல்வேறுபட்ட மக்கள் துணை நிற்கின்றார்கள் வாழ வழி காட்டுவார்கள்.

| | | |
|---|---|---|
| | பார்ப்பான் | |
| தோழி | பாங்கன் | |
| செவிலித்தாய் | பாணன் | அறிவர் |
| பாடினி | ஏவலர் | கண்டோர் |
| விறலியர் | விருந்தினர் | |

கூத்தர்

**வழியில் காலம் தாழ்த்தாமை**

**192.** **வினைவயின் பிரிந்தோன் மீண்டுவரு காலை**

**இடைச்சுர மருங்கில் தவிர்தல் இல்லை**

**உள்ளம் போல உற்றுழி உதவும்**

**புள்ளியற் கலிமா உடைமை யான.**

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் வினைமுடிந்து திரும்பும் போது பாலை நிலத்தின் நெடுமையையும் கடுமையையும் கண்டு நெஞ்சம் தளராமல் இடையில் தங்காமல் வருவான். தன் உள்ளம் நினைத்தவாறு செயல்படும் புள்ளிகளை உடைய குதிரைகள் பூட்டிய தேரில் விரைந்து வருவான்.

இவ்வாறு களவொழுக்கத்திற்குப் பிறகு கற்பு வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள தலைவன், தலைவி வாழ்க்கையில் இன்பமும் இடர்களும் நிறைந்து காணப்படும். இருவரும் தங்கள் வாழ்க்கையில் நடந்தவற்றை நினைத்துப் பார்ப்பர். தலைவன் பரத்தையரிடம் பிரிந்து செல்வது தலைவிக்குத் துன்பத்தைத் தருவதாகும். வாயில்களாக வருபவர்கள் இவர்களுக்கு உதவியாக இருப்பார். கற்பு வாழ்க்கை தொடங்கி முதுமை அடைந்து அறம் செய்வது

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | கற்பு என்பதற்கான விளக்கத்தை எழுதுக | K3 | CO5 | PO4 |
| 2 | கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே விளக்குக. | K4 | CO1 | PO2 |
| 3 | ஐயர் யாத்தனர் கரணம் என்ப விளக்குக. | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | K6 | CO4 | PO1 |
| 4 | கற்பு வாழ்க்கையில் தலைவன் கூற்றை விரிவாக எழுதுக. | K2 | CO5 | PO2 |
| 5 | கற்பு வாழ்க்கையில் தலைவி கூற்றுக் குறித்து விவரிக்க. | K2 | CO2 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | தலைவனின் ஊடல் குறித்து எழுதுக. | K4 | CO1 | PO4 |
| 2 | வாயிலோர் குறித்து எழுதுக. | K3 | CO4 | PO5 |
| 3 | தலைவன் கலங்கும் இடம் குறித்து எழுதுக. | k1 | CO4 | PO2 |
| 4 | பிரிவு நிலையில் பார்ப்பார் கூற்றுக் குறித்து எழுதுக. | K5 | CO5 | PO1 |
| 5 | புகழ்ச்சி குறித்த செய்தியைத் தொகுத்து எழுதுக. | K3 | CO3 | PO3 |

## அலகு - 5

## பொருளியல்

### உள்ளடக்கம்

- செய்யுளில் சொற்பொருள்
- தனக்குத் தானே கூறிக் கொள்ளுதல்
- கனவு காண்பது
- மகளிர் நால்வர்
- தலைவிக்கு உரிய பண்புகள்
- தலைவி நெஞ்சொடு பேசுதல்
- அறத்தொடு நிற்றல்-நில்லாமை
- மகளிரின் பண்புகள்
- வரைவு கடாதல்
- தலைவன் ஏறி வருபவை
- பொருளின் தேவை
- பாட்டுக்கு அடிப்படை
- எல்லா என்னும் பொதுச்சொல்
- ஒருவரின் உரிமைப் பொருள்
- ஒருபால் எல்லாப் பாலுக்கும்
- எவ்வுயிர்க்கும் இன்பம்
- உடன்போக்கும் திருமணக் குறிப்பும்
- இறைச்சி - உரிப்பொருள்-உள்ளுறை

- பாராட்டுதல்-வருத்தம்
- மொழிஇயல்பு
- உள்ளுறை உணர்த்துபவை
- அன்னை, என்னை

பொருளியல் என்பது பொருளதிகாரத்தில் வரும் எல்லா இயல்களுக்கும் பொதுவான பொருளைப் பற்றி விளக்குவதால் இளம்பூரணர் இதனை ஓர் ஒழிபியலாகக் குறிப்பிடுகின்றார்.

இவ்வியலில் முன்னுள்ள அகப்பொருள் தொடர்பான இயல்களில் கூறப்படாத தலைவி, தோழி, தலைவன் போன்றோர்களின் இயல்புகள் கூறப்பட்டுள்ளன. இறைச்சி, உள்ளுறை போன்றவை விரிவாக விளக்கப்படுகின்றன.

**பொருள் உணர்த்தும் தன்மை**

**செய்யுளில் சொற்பொருள்**

**193.** **இசைதிரிந்து இசைப்பினும் இயையுமன் பொருளே**

**அசைதிரிந்து இசையா என்மனார் புலவர்.**

சொல்லோடு சொல் தொடர்ந்து இயல்பான மொழியில் பொருள் உணர்த்துவதைப் போன்று செய்யுள் மொழியில் இசைக்காக அசைகளாகச் சொற்கள் பிரிக்கப்பட்ட போதிலும் பொருள் வேறுபடுவதில்லை எனச் சான்றோர் குறிப்பர்.

**தனக்குத்தானே கூறிக்கொள்ளுதல்**

இன்பமோ துன்பமோ மிக்க தலைவனோ தலைவியோ தனக்குத் தானே பேசிக் கொள்வதே ஒருபாற் கூற்று எனப்படும். தங்கள் மன உணர்வுகளை வெளிப்படுத்த

உயிரினங்கள், நிலவு, கடல் போன்றவற்றுடன் பேசுதல், தூது போகச் சொல்லுதல் போன்ற வகையில் செயல்படுவதாகும்.

**194.** **நோயும் இன்பமும் இருவகை நிலையில்**
**காமம் கண்ணிய மரபிடை தெரிய**
**எட்டன் பகுதியும் விளங்க ஒட்டிய**
**உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்**
**மறுத்துரைப் பதுபோல் நெஞ்சொடு புணர்த்தும்**

**சொல்லா மரபின் அவற்றொடு கெழிஇச்**
**செய்யா மரபின் தொழிற்படுத்து அடக்கியும்**
**அவரவர் உறுபிணி தமபோல் சேர்த்தியும்**
**அறிவும் புலனும் வேறுபட நிறீஇ**
**இருபெயர் மூன்றும் உரிய ஆக**

**உவம வாயில் படுத்தலும் உவமம்**
**ஒன்றிடத்து இருவர்க்கும் உரியபாற் கிளவி.**

காமம் என்பது இன்பமும் துன்பமும் கலந்த ஒன்றாகும். இந்த இருவகை நிலையும் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் எட்டுவகை மெய்ப்பாடுகளோடு தொடர்புடையவை ஆகும். இவ்வியல்புகளோடு தம் நெஞ்சையும் உணர்வுகளையும் தம்மோடு மறுப்பது போலவும் உடன்படுவது போலவும் பேசுவர்.

மேலும் உயர்திணை அல்லாத அஃறிணை உயிரினங்களாகிய கிளி, அன்னம் போன்றவற்றையும் நிலவு, காற்று, கடல், மரம் போன்றவற்றையும் பேசும் பொருளாகவும் கேட்கும் பொருளாகவும் ஆக்கி அவற்றுடன் பேசுவர் தூது போகச் சொல்வர்.

மன அறிவையும் ஐம்பொறிகளாகிய உறுப்புகளையும் வேறு வேறாக நிறுத்தி உவமைப் பொருளையும் உவமிக்கப்படும் பொருளையும் அவற்றின் செயற்பாட்டாலும் பண்பாலும் இணைத்துப் பேசுவர்.

இவ்வாறு களவு வாழ்விலும் கற்பு வாழ்விலும் தலைவனும் தலைவியும் தங்களுக்கு ஏற்படும் இன்ப துன்பங்களுக்கு ஏற்ப உணர்வு, நெஞ்சு போன்றவற்றைத் தங்களிடமிருந்து வேறாக்கி அஃறிணைகளுடன் பேசுவதே ஒருபாற் கூற்று எனப்படும்.

**காமத்தில் கனவு**

**195. கனவும் உரித்தால் அவ்விடத் தான.**

காம உணர்வுகளோடு இன்ப, துன்பங்களில் வாழும் தலைவனும் தலைவியும் கனவு கண்டு அறிதலும் உண்டாம்.

**நற்றாயின் கனவு**

**196. தாய்க்கும் உரித்தாற் போக்குடன் கிளப்பின்.**

தலைவனுடன் தலைவி உடன்போக்குச் சென்ற நிலையில் அவளைப் பெற்ற நற்றாயும் மகளைப் பற்றிக் கனவு காண்பதும் உரித்தாம்.

**மகளிர் நால்வர்**

**197. பால்கெழு கிளவி நால்வர்க்கும் உரித்தே**

**நட்பின் நடக்கை ஆங்கு அலங்கடையே.**

அன்பு கூடிய நட்பின் அடிப்படையில் இணையும் தலைவி. தோழி, நற்றாய், செவிலி என்னும் மகளிர் நால்வரும் இன்ப துன்பங்களில் அஃறிணை இடத்துப் பேசும் இயல்பு உள்ளவர்கள்.

**நால்வர் பண்புகள்**

**198 உயிரும் நாணும் மடனும் என்றிவை**

**செயிர்தீர் சிறப்பின் நால்வர்க்கும் உரிய.**

எல்லாவற்றுக்கும் மேலான உயிர், நாணம்,பேதைமை என்னும் மூன்று பண்புகளும் தலைவி, தோழி, நற்றாய், செவிலி என்னும் நான்கு மகளிர்க்கும் உரியவை ஆகும்.

**தலைவிக்கு உரிய பண்புகள்**

**199. வண்ணம் பசந்து புலம்புங் காலை**

**உணர்ந்தது போல உறுப்பினைக் கிழவி**

**புணர்ந்த வகையாற் புணர்க்கவும் பெறுமே.**

தலைவனைப் பிரிந்து புலம்பும் தலைவியின் உடம்பின் வனப்பு குறைந்திருப்பதைப் போல அவளுடைய உடல் உறுப்புகளும் உணர்ந்துள்ளன எனக் கூறுவதும் உண்டு

**தலைவியின் அழகு கெடல்**

**200. உடம்பும் உயிரும் வாடியக் கண்ணும்**

**என் உற்றனகொல் இவைஎனின் அல்லது**

**கிழவோன் சேர்தல் கிழத்திக்கு இல்லை.**

தலைவியின் உடலும் உயிரும் வாடி வதங்கிய போதும் இவை ஏன் வாடின என எண்ணுவாளே தவிரத் தலைவன் பிரிந்துள்ள இடத்திற்குத் தானாகச் செல்வது இல்லை

**தலைவி நெஞ்சொடு பேசுதல்**

**201. ஒருசிறை நெஞ்சமொடு உசாவும் காலை**

**உரியது ஆகலும் உண்டென மொழிப.**

தலைவனைப் பிரிந்த தலைவி, தன் நெஞ்சத்தோடு புலம்பி வருந்தும்போது "நாம் தலைவன் இருக்கும் இடத்திற்குச் செல்வோமா? என்று கூறும் முறை உண்டு என்பர்.

**தலைவி நாணம் விட்டுப் பேசுதல்**

**202. தன்வயின் கரத்தலும் அவன்வயின் வேட்டலும்**

**அன்ன இடங்கள் அல்வழி எல்லாம்**

**மடனொடு நிற்றல் கடன்என மொழிப.**

தலைவன் பிற பெண்டிருடன் இருந்து வந்ததை மறைக்கும் போதும் தலைவிக்குக் காம வேட்கை மிகும் போதும் மட்டுமே பேதைமை நீங்கிப் பேசுவாள். பிறகு எல்லாச் சூழலிலும் பேதையாகவே இருப்பாள்.

**அறத்தொடு நிற்கும் நிலை**

**203. அறத்தொடு நிற்கும் காலத்து அன்றி**

**அறத்தியல் மரபிலள் தோழி என்ப.**

தலைவிக்காகத் தோழி அறத்தொடு நிற்பாளே அல்லாமல் தானாகவே அறத்தொடு நிற்கும் மரபு அவளுக்கு இல்லை.

**அறத்தொடு நிற்றல்**

களவு வாழ்க்கையைத் தொடர்ந்து கற்பு வாழ்க்கை வரும்போது தலைவி தலைவனை விரும்புவதைத் தோழி செவிலிக்கு, செவிலி நற்றாய்க்கு, நற்றாய் இல்ல ஆடவர்க்கு என ஒருவர் ஒருவரிடம் முறையாகச் செய்தியை உணர்த்துவதே அறத்தொடு நிற்றலாகும்.

**204.** **எளித்தல் ஏத்தல் வேட்கை உரைத்தல்**

**கூறுதல் உசாஅதல் ஏதீடு தலைப்பாடு**

**உண்மை செப்பும் கிளவியொடு தொகைஇ**

**அவ்வெழு வகைய என்மனார் புலவர்.**

மேலுள்ள நூற்பாவில் தோழி கூறியவாறு ஏழு நிலையில் தலைவியின் கற்பு மணத்திற்காகத் தாயோடு அறத்தொடு நிற்பாள்.

1. எளித்தல'

2. ஏத்தல்

3. வேட்கை உரைத்தல்

4. கூறுதல்

5. உசாஅதல்

6. ஏதீடு தலைப்பாடு

7. உண்மை செப்புதல்

1. **எளித்தல்:** களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவனின் எளிமையான தன்மையைத் தோழி எடுத்துக் கூறுதல்.

2. **ஏத்தல்:** களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவனைத் தாயர் ஐயத்தோடு நோக்கும்போது அவன் பெருமையைத் தோழி உயர்த்திக் கூறுதல்.

3. **வேட்கை உரைத்தல்:** தலைவியின் மேல் தலைவன் கொண்டுள்ள அளவில்லா வேட்கையைத் தோழி எடுத்துக் கூறுதல்.

4. **கூறுதல்:** தலைவனின் பெருமையைக் கூறி அவனுக்கே தலைவியை மணம் முடித்துக் கொடுக்க வேண்டும் எனத் தாயரிடம் தோழி கூறுதல்.

5. **உசாஅதல்:** தலைவிக்காக வெறியாட்டு விழா, குறிக்கேட்டல் போன்றவை நடக்கும்போது இருவரின் மணம் நடக்குமா என விசாரித்தல்.

6. **ஏதீடு தலைப்பாடு:** தலைவனும் தலைவியும் வேறு யாருடைய துணையும் இல்லாமல் தாமே எதிர்ப்பட்டு விரும்பினர் எனத் தோழி கூறுதல்.

7. **உண்மை செப்புதல்:** இறுதியில் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையில் நிகழ்ந்த களவொழுக்கத்தின் உண்மையைத் தோழி தெளிவாகக் கூறுதல்.

மேற்குறிப்பிட்ட ஏழு நிலையில் தலைவன், தலைவியின் களவொழுக்கம் தொடர்பாகத் தோழி அறத்தொடு நிற்பாள்.ணணணண

**செவிலி நிகழ்ந்ததை உணர்தல்**

**205. உற்றுழி அல்லது சொல்லல் இன்மையின்**

**அப்பொருள் வேட்கைக் கிழவியின் உணர்ப.**

தலைவியின் களவொழுக்கத்தைத் தோழி தேவைப்படும்போது மட்டுமே வெளியில் சொல்வாள். எனவே, தலைவியின் காதல் வேட்கையைத் தாயர் அவளின் உடலைக் கொண்டே குறிப்பாக உணர்வர்.

**மகளிரின் பண்புகள்**

**206. செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்**
**அறிவும் அருமையும் பெண்பால் ஆன.**

அடக்கத்தோடு இருத்தல், மனவலிமையைக் காட்டுதல், நடுவுநிலையோடு இருத்தல், இனியவை பேசுதல், நன்மை தீமை அறிதல், தம்மை எளிதில் பிறர் புரியாதவாறு நடத்தல் என்பவை மகளிர்க்கு உரிய உயர்ந்த பண்புகள் ஆகும்.

**வரைவு கடாதல்**

களவொழுக்கத்தில் ஈடுபட்டிருக்கும் தலைவனை விரைவில் தலைவியை மணந்து கொள்ளுமாறு தோழி அவன் உள்ளத்தைத் தொடும் முறையில் கூறுவதே வரைவு கடாதல் எனப்படும்.

**207. பொழுதும் ஆறும் காப்பும்என்று இவற்றின்**
**வழுவின் ஆகிய குற்றம் காட்டலும்**
**தன்னை அழிதலும் அவன்ஊறு அஞ்சலும்**
**இரவினும் பகலினும் நீவா என்றலும்**
**கிழவோன் தன்னை வாரல் என்றலும்**

**நன்மையும் தீமையும் பிறிதினைக் கூறலும்**

**புரைபட வந்த அன்னவை பிறவும்**

**வரைதல் வேட்கைப் பொருள என்ப. 8**

களவொழுக்கத் தலைவன் விரைந்து தலைவியை மணம் முடிக்க எடுக்கும் தோழியின் முயற்சிகள் இந்நூற்பாவில் கூறப்பட்டுள்ளன.

1. பொழுது, ஆறு, காப்பு
2. தன்னை அழிதல்
3. அவன் ஊறு அஞ்சல்
4. இரவிலும் பகலிலும் நீவா என்றல்
5. கிழவோனை வாரல் என்றல்
6. நன்மையும் தீமையும் கூறுதல்
7. அன்னவை பிறவும்

1. **பொழுது, ஆறு, காப்பு:** தலைவன் வரும் நேரமும் வரும் வழியும் எங்கும் நிறைந்துள்ள காவலும் அவனுக்குத் துன்பம் தருவதால் விரைவில் மணம் முடிக்கத் தோழி அறிவுரை கூறுதல்.

2. **தன்னை அழிதல்:** தலைவன் இவ்வாறு இடர்நிறைந்த வழியில் வருவதை எண்ணித் தலைவி மிகவும் வருந்தி மெலிவதைத் தோழி தலைவனிடம் கூறுதல்.

3. **அவன் ஊறு அஞ்சல்:** வரும் வழியில் காட்டு விலங்குகளாலும் ஆறு போன்றவற்றாலும் வரும் கேடுகளை எண்ணித் தலைவி வருந்துவதைக் கூறுதல்.

4. **இரவிலும் பகலிலும் நீவா என்றல்:** களவொழுக்கத்திற்கு வரும் தலைவனைச் சூழலுக்கு ஏற்பப் பகலில் அல்லது இரவில் வருமாறு கூறுதல்.

5. **கிழவோனை வாரல் என்றல்:** உள்ள சூழ்நிலையை உணர்ந்த தோழி தலைவனை வாராதே எனக் கூறுதல்.

6. **நன்மையும் தீமையும் கூறுதல்:** களவொழுக்கத்தை நீட்டிப்பதால் ஏற்படும் தீமைகளையும் கற்பு வாழ்க்கையில் ஏற்படப் போகும் நன்மைகளையும் தோழி தலைவனுக்கு எடுத்துக் கூறுதல்.

7. **அன்னவை பிறவும்:** மேலே கூறப்பட்டவையும் மனையில் உள்ளவர்களுக்குத் தலைவியின் களவொழுக்கம் தெரிந்து அவர்கள் காவலை மிகுதியாக்கி விடுதல் போன்றவற்றைத் தோழி தலைவனிடம் எடுத்துக் கூறுதல்.

மேற் குறிப்பிட்டவாறு களவொழுக்கத்திற்குப் பல தடைகள் இருப்பதால் தலைவன் விரைவில் தலைவியை மணந்து கொள்ளத் தோழி எடுக்கும் முயற்சிகள் ஏழு வகையாக விளக்கப்பட்டுள்ளன.

**மணக்க நேரடியாகக் கூறுதல்**

**208. வேட்கை மறுத்துக் கிளந்தாங்கு உரைத்தல்**

**மரீஇ மருங்கின் உரித்துஎன மொழிப.**

களவு வாழ்க்கையை விரும்பும் தலைவனின் வேட்கைக்கு மறுப்புக்கூறி, அவன் எதிர்ப்பட்டபோது உடனே திருமணத்தை முடிக்கக் கூறுவதும் தோழிக்கு உரிய இயல்பாகும்.

**தலைவன் ஏறி வருபவை**

**209. தேரும் யானையும் குதிரையும் பிறவும்**

**ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப.**

தேர், யானை, குதிரை போன்றவற்றிலும் பிறவற்றிலும் தலைமகன்கள் சென்று வருவர் எனக் குறிப்பர்.

**உண்டது போலக் கூறுதல்**

**210. உண்டற்கு உரிய அல்லாப் பொருளை**

**உண்டன போலக் கூறலும் மரபே.**

உண்ண முடியாத ஒன்றை உண்டது போலக் கூறுதலும் ஒருவகையான மரபாகக் கொள்ள வேண்டும்.

**பொருளின் தேவை**

**211. பொருள்என மொழிதலும் வரைநிலை இன்றே**

**காப்புக் கைம்மிகுதல் உண்மை யான**

**அன்பே அறனே இன்பம் நாணொடு**

**துறந்த ஒழுக்கம் பழித்தன்று ஆகலின்**

**ஒன்றும் வேண்டா காப்பின் உள்ளே.**

களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவன் தலைவியை மணந்து கொள்ள பொருளும் வேண்டும் என்பது தவிர்க்கப் படாத ஒன்றாகும். இதனைத் தோழி தலைவனிடம் கூறுவது விலக்கத்தக்க ஒன்று அன்று.

இல்லத்தில் காப்பு மிகுதியாக இருந்தபோதிலும் அன்பு, இல்லறம், துகர்தற்குரிய இன்பம், நாணம் என்பன போன்றவற்றைத் தலைவனிடம் காட்டுவதில் அடங்கிப்

போகாமல் தலைவி நடப்பதில் பழி இல்லை என்பர். காவல் மிகும்போது தலைவி எல்லாவற்றையும் மீறித் தலைவனிடம் அன்பு பாராட்டுவாள்.

**பிரிந்து செல்லும் வழி**

**212. சுரம்என மொழிதலும் வரைநிலை இன்றே.**

தலைவன் பொருள் தேடச் செல்லும்வழி கரடுமுரடான கொடியது எனக் கூறுவதில் வரையறை இல்லை.

தலைவன் பொருள் தேடச் செல்லும் பாலை நிலம் என்னும் சுரத்தில் அழகிய செவிகளை உடைய யானைகள் நிறைந்துள்ளன. பிற கொடிய விலங்குகளும் சுற்றித் திரிகின்றன. பொருளுக்காகப் பிறரைக் கொல்லும் மறவரும் நிறைந்துள்ளார்கள். பழைய வழிகள் சிதைந்து போன சுரமாக உள்ளது.

**பாட்டுக்கு அடிப்படை**

**213. உயர்ந்தோர் கிளவி வழக்கொடு புணர்தலின்**

**வழக்குவழிப் படுதல் செய்யுட்குக் கடனே.**

உயர்ந்தோர் மொழியும் வழக்கொடு பொருந்தி வருவதால் செய்யுளில் வழக்குமொழியும் சேர்ந்து வருதல் அடிப்படையாகும்.

**அறம் சிறவாக் கருத்துகள்**

**214. அறக்கழிவு உடையன பொருட்பயன் வரினே**

**வழக்கென வழங்கலும் பழித்தது என்ப.**

அறம் சாராத நடைமுறைகள் உலக வழக்கில் இருந்தாலும் அவற்றை மரபு என்று கொண்டு இலக்கியம் யாப்பது பழியுடையது ஆகும்.

அறம் சாராத அகப் பொருள் பிறன்மனை நயத்தல் அறம் சாராத புறப்பொருள் கொலை, கொள்ளை போன்றன.

**அறம் சாராதவை நல்வழிக்கு**

**215.** **மிக்க பொருளினுள் பொருள்வகை புணர்க்க**

**நாணுத்தலைப் பிரியா நல்வழிப் படுத்தே.**

தலைவியின் நாணமே அகப்பொருளுக்கு மிகவும் நுட்பமாகக் கருதப்படுகின்றது. எனவே அதற்குப் பழி வராத வகையில் பெண்மை அமைதலே சிறப்பாகும்.

எல்லா என்னும் பொதுச்சொல்

**216.** **முறைப்பெயர் மருங்கின் கெழுதகைப் பொதுச்சொல்**

**நிலைக்குரி மரபின் இருஈற்றும் உரித்தே.**

முறைப் பெயர்கள் (தம்பி, தாய்,தந்தை)மொழியில் பயன்படும் போது ஆண்பால், பெண்பால் என்னும் இருதிணைக்கும் எல்லா என்னும் பொதுச்சொல் நட்புரிமை அடிப்படையில் வரும்.

**ஒருவரின் உரிமைப் பொருள்**

**217.** **தாயத்தின் அடையா ஈயச் செல்லா**

**வினைவயின் தங்கா வீற்றுக் கொளப்படா**

**எம்என வரூஉம் கிழமைத் தோற்றம்**

**அல்ல ஆயினும் புல்லுவ உளவே.**

குடும்பத்தின் உரிமையாகக் கிடைக்கும் பொருள், ஒருவர் கொடுக்க மற்றவர் பெற்றுக் கொள்ளும் பொருள், உழவு முதலிய தொழிலால் கிடைக்கும் பொருள், போரிட்டுக் கவர்ந்த பொருள் என இவை மட்டுமே எம் என்னும் உரிமை கொண்டாடப்படும் பொருளாகும். கொடுத்து வாங்க முடியும். இவற்றையே அவ்வாறு கொள்ள முடியாது ஆயினும் உடலோடு தொடர்புடையவற்றையும் வழக்காக உரிமை கொண்டாடுதல் உண்டாம்.

**ஒருபால் எல்லாப்பாலுக்கும்**

**218. ஒருபால் கிளவி ஏனைப்பாற் கண்ணும்**

**வருவகை தாமே வழக்கென மொழிப.**

ஒரு செயல் அல்லது ஒரு பண்பை ஒரு பாலுக்காகச் சுட்டிக் கூறினாலும் அவை மற்றைய பாலுக்கும் பொருந்திப் பொதுமையாக வரும்.

**புணர்ச்சி, பிரிவு, ஊடல்** என்பவை பொதுவாகத் தலைவிக்காகவும் காமக் கிழத்திக்காகவும் குறிக்கப்பட்டாலும் பரத்தைக்கும் உரியது போல அமையும் என இளம்பூரணர் குறிப்பிடுகின்றார்.

**மனையோள் மாட்டும் காமக்கிழத்தி மாட்டும் நிகழும் புணர்ச்சியும் பிரிவும் ஊடலும் பரத்தையர் மாட்டும் நிகழும்.**

இலக்கணங்களில் பொதுவான கூறுகளுக்குப் பெரும்பாலும் ஒரு பாலை உணர்த்தும் சொல்லையே உரையாசிரியர்கள் சான்றாகக் கொடுப்பர். மூன்று காலமும் உணர்த்துவது ஐம்பாலுக்கும் உரியது என்றாலும் வந்தான், வருவான், வருகிறான் என ஆண்பால் சான்றுகளையே கொடுப்பர்.

**நஞ்சுண்டவன்** சாவான் எனச் சான்று ஆண்பாலுக்குக் கொடுக்கப்பட்டாலும் பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின் பாலுக்கும் பொருந்தும் என்பதைச் சேனாவரைனயர் சொல்லதிகாரத்தில் பின்வருமாறு விளக்குகின்றார்.

நஞ்சுண்டான் சாம் என்பது ஒருபாற்குரிய சொல்லாயினும் நஞ்சுண்டான் சாம், நஞ்சுண்டார் சாவர், நஞ்சுண்டது சாம், நாஞ்சுண்டன சாம் என ஏனைப் பாற்கும் உரித்தாம்.

(தொல்காப்பியம்-சொல்லதிகாரம், 161, உரை)

**எவ்வுயிர்க்கும் இன்பம்**

**219. எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது**

**தான்அமர்ந்து வருஉம் மேவற்று ஆகும்.**

அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றில் இன்பம் என்பது எல்லா உயர்திணை, அ∴றிணை உயிரினங்களுக்கும் பொருந்தும். ஆயினும் ஆணும் பெண்ணும் என இருதிணைகளில் உள்ள உயிர்கள் இணைய வருவதே சிறப்பானது.

**பரத்தையர் பிரிவுக்கான வாயிலோர்**

**220. பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே**

**நிலத்திரிபு இன்றுஅ∴து என்மனார் புலவர்.**

பரத்தையர் பிரிவால் ஊடல் கொண்ட தலைவியிடம் வாயிலோரைத் தூது அனுப்புவது அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நால்வர்க்கும் உரித்தாகும். மருதத்திற்குச் சிறப்பு ஆயினும் பிற திணையிலும் இது நிகழும்.

**உடன்போக்கும் திருமணக்குறிப்பும்**

**221. ஒருதலை உரிமை வேண்டினும் மகடூஉப்**

**பிரிதல் அச்சம் உண்மை யானும்**

**அம்பலும் அலரும் களவுவெளிப் படுக்கும்என்று**

**அஞ்ச வந்த ஆங்குஇரு வகையினும்**

**நோக்கொடு வந்த இடையூறு பொருளினும்**

**போக்கும் வரைவும் மனைவிகண் தோன்றும். 6**

உடன்போக்குச் செல்வது என்பது திருமண முயற்சிக்கு வழி வகுக்கும் என்பது இந்த நூற்பாவில் விளக்கப்பட்டுள்ளது.

1. ஒருதலை உரிமை வேண்டுதல்
2. மகடுப் பிரிதல் அச்சம்
3. அம்பல் அலர் அச்சம்
4. நோக்கொடு வந்த இடையூறு
5. போக்கும் வரைவும் தோன்றுதல்

1. **ஒருதலை உரிமை வேண்டுதல்:** களவு வாழ்க்கையை விடக் கற்பு வாழ்க்கையைத் தலைவி முதல் உரிமையாகக் கொள்ளுதல்.

2. **மகடுப் பிரிதல் அச்சம்:** தலைவன் தன்னைப் பிரிந்து சென்று விடுவானோ எனத் தலைவி எப்போதும் அச்சப்படுதல்

3. **அம்பல் அலர் அச்சம்:** களவொழுக்கத்தில் ஈடுபடும்போது முதலில் முணு முணுத்துக் கொள்ளும் அம்பலும் பிறகு ஊர் அறியப் பேசும் அலரும் ஏற்படுமோ எனத் தலைவி அச்சப்படுதல்.

4. **நோக்கொடு வந்த இடையூறு:** செவிலி, தாயர் மற்றும் தந்தை, தமயன்மார் போன்றோர் ஐயத்தோடு பார்ப்பதால் உண்டாகும் இடையூறுகளை எடுத்துக் கூறுதல்.

5. **போக்கும் வரைவும் தோன்றுதல்:** தலைவன் வரைவை நீட்டிக்கும்போது உடன்போக்குச் செல்வது, மணமுடிக்கக் காலம் நீட்டிப்பது ஏன் எனப் பலவற்றை எண்ணுதல்.

**வருத்தம் மிகுதல்**

**222. வருத்தம் மிகுதி சுட்டுங் காலை**

**உரித்துஎன மொழிப வாழ்க்கையுள் இரக்கம்.**

அக வாழ்க்கையில் தலைவி தன்னுடைய வருத்தத்தை மிகுதியாக வெளிப்படுத்தும்போது அவள்மீது ஓர் இரக்க உணர்வு தோன்றும்.

**மனைவியிடம் பணிதல்**

**223. மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்**

**நினையும் காலைப் புலவியுள் உரிய.**

தலைமகள் உயர்வாகக் கருதப்படுவதும் தலைவன் பணிந்து போவதும் அவர்கள் கூடும் புணர்ச்சிக் காலத்தில் நிகழ்வதாகும்.

**இருவரும் புகழ்ந்து கொள்ளுதல்**

**224. நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதியில்**

**புகழ்தகை வரையார் கற்பி னுள்ளே.**

களவு வாழ்க்கை முடிந்து கற்பு வாழ்க்கையாகிய இல்வாழ்க்கை தொடங்கிய பிறகு தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் புகழ்ந்து பாராட்டிக் கொள்வதில் வரையறை இல்லை என்பர்.

**இறைச்சி - உரிப்பொருள்**

**225. இறைச்சி தானே உரிப்புறத் ததுவே.**

இறைச்சிப் பொருள் என்பது பொருளை வெளிப்படையாகக் கூறாமல் உரிப்பொருளைப் புறத்ததாக வைத்துக் கருப்பொருள்வழிக் குறிப்பாக உணர்த்துவதாகும்.

**226. இறைச்சியின் பிறக்கும் பொருளுமார் உளவே**

**திறத்தியல் மருங்கில் தெரியு மோர்க்கே.**

அகப்பாடல்களில் இறைச்சிப் பொருள் வழியாகப் பெறப்படும் பொருளில் இன்னொரு வகையான குறிப்புப் பொருளும் இருப்பதை அதன் திறன் அறிந்தோர் உணர்வர்.

தன் குட்டியையே முதலை தின்கிறது என்பது இறைச்சிப் பொருள். தலைவியைப் பிரிந்து தலைவன் கொடுமைப் படுத்துகிறான் என்பது இதன் பொருளாயினும் தாயைப் போல் நினைத்த தலைவனே இப்படிச் செய்தால் அவனுடன் வாழ்வது எப்படி முடியும் என்றொரு குறிப்புப் பொருள் உள்ளே தொக்கி நிற்கிறது.

**227. அன்புறு தகுந இறைச்சியுள் சுட்டலும்**

**வன்புறை ஆகும் வருந்திய பொழுதே.**

பிரிவால் வருந்தி இருக்கும் காலத்தில் உயிரினங்கள் இணையாகச் சேர்ந்து பழகும் அன்புமிகு காட்சிகளை இறைச்சியாகக் காட்டி ஆற்றுப்படுத்துவதும் உண்டு.

தலைவியின்பால் அன்பு மிக்க தலைவன் செல்லும் வறட்சி மிக்க பாதையில் பிடியானையின் பசியைப் போக்க ஆண்யானை யா மரத்தின் பட்டையை உரித்து நீரைப் பருகச் செய்யும் காட்சி குறுந்தொகையில் பதிவாகி உள்ளது.

**நசை பெரிது உடையர் நல்கலும் நல்குவர்:**

**பிடிபசி களைஇய பெருங்கை வேழம்**

**மென்சினை யாஅம் பொளிக்கும்**

**அன்பின தோழி அவர் சென்ற ஆறே**

**தலைவியைப் பாராட்டுதல்**

**228.** **செய்பொருள் அச்சமும் வினைவயின் பிரிவும்**

**மெய்பெற உணர்த்தும் கிழவி பாராட்டே.**

தான் பிரியப்போகும் நிலையில் இவள் இடையூறு செய்வாள் என்று நினைக்கும்போதும் பிரியப் போவதை உணர்த்துவதற்கும் தலைவனின் பாராட்டுத் தலைவியின்பால் அமையும்.

**தலைவி பரத்தையைப் பாராட்டுதல்**

**229.** **கற்புவழிப் பட்டவள் பரத்தையை ஏத்தினும்**

**உள்ளத்து ஊடல் உண்டென மொழிப.**

கற்பு வாழ்க்கையில் தலைவி, தலைவனின் பெண்டிராகிய பரத்தையைப் புகழ்ந்து பேசும்பேச்சு அவளின் ஊடலின் வெளிப்பாடே எனக் குறிப்பர்.

**தலைவன் விரும்பும் ஒருத்தி**

**230. கிழவோள் பிறள்குணம் இவைஎனக் கூறிக்**

**கிழவோன் குறிப்பினை உணர்தற்கும் உரியள்.**

தலைவன் விரும்பும் இன்னொருத்தியின் குணங்களைப் பற்றித் தலைவி பேசி, அவளிடம் இவன் எவ்வளவு ஈடுபாடு கொண்டிருக்கிறான் என்பதை உணரும் உரிமை உடையவள்.

**தலைவிக்குக் கடியும் வாய்ப்பு**

**231. தம்முறு விழுமம் பரத்தையர் கூறினும்**

**மெய்ம்மை ஆக அவர்வயின் உணர்ந்தும்**

**தலைத்தாள் கழறல்தம் எதிர்ப்பொழுது இன்றே**

**மலிதலும் ஊடலும் அவை அலங்கடையே.**

தலைவனால் பரத்தையர் அடைந்த துன்பத்தை அவர்கள் தலைவியிடம் கூறும்போதும் அவர்களின் துன்பத்தை அவள் உண்மை என உணர்ந்தபோதும் தலைவனை நேரடியாகக் காணும்போது கடிய மாட்டாள். தலைவனுடன் மகிழ்ச்சியும் ஊடலும் கொள்ளும்போதுதான் கடிந்து பேசுவாள்.

**தலைவியின் வருத்தம்**

**232. பொழுதுதலை வைத்த கையறு காலை**

**இறந்த போலக் கிளக்கும் கிளவி**

**மடனே வருத்தம் மருட்கை மிகுதியொடு**

**அவைநால் பொருட்கண் நிகழும் என்ப.**

தலைவன் பிரிந்து சென்றபோது குறித்துச் சென்ற பருவம் வரத் தொடங்கிய நிலையில் அது வந்து முடிந்து விட்டது போல எண்ணித் தலைவி வருந்துவாள். அவ்வாறு அவள் வருந்திப்பேசுவது அவளுடைய மடப்பம், வருத்தம், மிகுதி, வியப்பு போன்றவற்றால் ஏற்படுவது ஆகும்.

**தோழியின் மொழி இயல்பு**

233. **இரந்து குறைஉற்ற கிழவனைத் தோழி**

**நிரம்ப நீக்கி நிறுத்தல் அன்றியும்**

**வாய்மை கூறலும் பொய்தலைப் பெய்தலும்**

**நல்வகை உடைய நயத்தின் கூறியும்**

**பல்வகை யானும் படைக்கவும் பெறுமே.**

களவுக் காலத்தில் தலைவியைக் கூடுவதற்காகத் தலைவன் தோழியை இரந்து நயக்கும்போது அவனை அருகில் செல்லாது தடுப்பதும் அவனுக்கு உண்மை நிலையை எடுத்துக் கூறுவதும் நன்மை ஏற்படப் பொய்யைக் கலந்துபேசுவதும் நயமான கருத்துக்களைக் கூறி நெறிப்படுத்துவதும் சூழலுக்கு ஏற்பப் பேசுவதும் தோழியின் திறமை ஆகும்.

**ஆடவரின் மொழி இயல்பு**

234. **உயர்மொழிக் கிளவி உறழும் கிளவி**

**ஐயக் கிளவி ஆடூஉவிற்கு உரித்தே.**

உயர்வாகப் பேசுவதும் உயர்வாகவும் இழிவாகவும் என உறழ்ந்து பேசுவதும் ஐயப்பட்டுப் பேசுவதும் ஆடவர்க்கே உரிய செயலாகும்.

**தோழியின் அறிவுத்திறம்**

**235. உறுகண் ஓம்பல் தன்இயல்பு ஆகலின்**

**உரியது ஆகும் தோழிகண் உரனே.**

தலைவிக்குத் துணைவனான தலைவனுக்கு வரும் இடர்களை நீக்கி அவனுக்குப் பாதுகாப்பு அளிக்கும் தோழிக்கு அறிவுத் திறன் அடிப்படையானதாகும்.

தலைவியைப் பிரிய நினைக்கும் தலைவனிடம் நீ ஈட்ட நினைக்கும் பொருள் இன்னவர் என்று கருதாமல் அவரவர் பழவினைப்படி ஒருவரிடம் சென்று தங்கும் எனக் கூறும், தோழியின் அறிவுக் கூர்மை நினைக்கத் தக்கது.

**236. உயர்மொழிக் கிளவியும் உரியவால் அவட்கே.**

தலைவன், தலைவியின் பெருமையை உயர்த்திக் கூறும் உரிமையும் தோழிக்கு உரியதாகும்.

**வாயிலோர் பேச்சு**

**237. வாயிற் கிளவி வெளிப்படக் கிளத்தல்**

**தாவின்று உரிய தத்தம் கூற்றே.**

தூதாகத் தலைவன் தலைவியிடம் செல்லக் கூடிய தோழி, பாங்கன் போன்ற வாயிலோர் செய்தியை மறைக்காமல் பேசும் இயல்பினையும் உடையவர்கள்.

**238. உடனுறை உவமம் சுட்டு நகை சிறப்புஎனக்**

**கெடலரும் மரபின் உள்ளுறை ஐந்தே.**

உடனுறை,உவமம், சுட்டு, நகை, சிறப்பு என்னும் குற்றமற்ற பெருமையை உடைய ஐந்தும் உள்ளுறை எனப்படும்.

1. **உடனுறை உள்ளுறை:** உடன் உள்ள கருப்பொருள்வழிப் பிறிது பொருள் கூறல்.
2. **உவமம் உள்ளுறை:** உவமைவழி உவமிக்கப்படும் பொருளை விளக்குதல்
3. **சுட்டு உள்ளுறை:** ஒரு கருப்பொருளைச் சுட்டிப் பிறிதொரு பொருள் கூறுதல்.
4. **நகை உள்ளுறை:** சிரிப்பின்வழி இன்னொரு பொருளை உணர்த்துதல்.
5. **சிறப்பு உள்ளுறை :** ஒரு பொருளைக் கூறிப் பிறிது ஒன்றன் சிறப்பை வெளிப்படுத்தல்.

**1. உடனுறை உள்ளுறை**

தன்னுடன் இருக்கக் கூடிய ஒன்றை எடுத்துச் சொல்லி அதன் வழிக் குறிப்பாக இன்னொரு பொருளைக் கூறுவது..

**2. உவமம் உள்ளுறை, 3. சுட்டு உள்ளுறை**

உவமையைச் சொல்லி அதன்வழி உள்ளுறையாக உவமிக்கும் பொருளைக் கூறுவதாகும். அதன் வழி இன்னொரு பொருளைச் சுட்டுவதாகும்.

**4. நகை உள்ளுறை**

சிரிப்பதால் அதனுள் இன்னொரு பொருளும் உள்ளது என்பதைக் குறிப்பது நகை உள்ளுறையாகும்.

**அசையியற்கு உண்டு ஆண்டு ஏஎர்யான் நோக்கப்**

**பசையினள் பைய நகும்.**

**(திருக்.1098)**

தலைவி தலைவனைப் பார்த்து மெல்லச் சிரிப்பது என்பது அவன் பிரிய மீண்டும் பசலை படரும் என்பது உள்ளுறைப் பொருளாகும்.

**5. சிறப்பு உள்ளுறை**

ஒன்றைக் கூற அதன்வழி இன்னொரு சிறப்புப் பொருள் தோன்றுவது சிறப்பு உள்ளுறை ஆகும்.

**மலரினும் மெல்லிது காமம் சிலர் அதன்**

**செவ்வி தலைப்படு வார்**

மலரை விடக் காமம் மிகவும் மென்மையானது. இருப்பினும் அதனைச் சிறப்பாக நுகர்பவர் சிலரே எனச் சிறப்பாகக் கூறப்பட்டுள்ள உள்ளுறையாகும்.

**உள்ளுறையில் இன்ப உணர்வு**

**239.** **அந்தமில் சிறப்பின் ஆக்கிய இன்பம்**

**தன்வயின் வருதலும் வகுத்த பண்பே.**

குறைவுபடாத பெருமை மிக்க இன்பத்தை உணர்த்தும் இயல்பும் உள்ளுறைக்கு உள்ள பண்பாகும்.

**நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்என்னும்**

**தீயாண்டுப் பெற்றாள் இவள்.**

**(திருக்.1104)**

அவளை விட்டு விலகும்போது சுடுவதும் அருகில் வரும்போது குளிர்வதுமாகிய நெருப்பை எங்கிருந்து பெற்றாள் எனக் கூறும்போது முன்பு நுகர்ந்த இன்பம் உள்ளுறையாக வந்துள்ளது.

**உள்ளுறை உணர்த்துபவை**

**240.** **மங்கல மொழியும் அவையல் மொழியும்**

**மாறில் ஆண்மையில் சொல்லிய மொழியும்**

**கூறிய மருங்கில் கொள்ளும் என்ப.**

வாழ்த்தும் நிலையில் கூறும் மங்கல மொழியும் வசை மொழியும் ஆண்மை கூறும் மொழியும் என இவையும் உள்ளுறைப் பொருளை உணர்த்தும்.

1. **மங்கல மொழி:** வருத்தப் பொருள் தருவதை அவ்வாறு சொல்லாத நல்ல நிகழ்வு போலச் சொல்லுதல் மங்கல மொழியாகும். செத்தாரைத் துஞ்சினார் எனக் கூறுவது போல.

2. **அவையல் மொழி:** பொதுவாகப் பலர் உள்ள இடத்தில் சொல்லக் கூடாத மொழியை மாற்று மொழியில் கூறுவதாகும். காலைக் கடன் முடித்தலைக் கால் கழுவி வருதும் எனக்கூறுவது போல.

3. **ஆண்மை கூறும்மொழி:** ஆண்மை மிக்க ஒருவனைச் சிங்கம் வந்தது காளை வந்தது எனக் கூறுவது போல..

**மேலும் சில உள்ளுறை**

**241.** **சினனே பேதைமை நிம்பிரி நல்குரவு**

**அனைநால் வகையும் சிறப்பொடு வருமே.**

சினத்தை மிகுதியாகக் காட்டுவது, அறியாமையை வெளிப்படுத்துவது, பொறாமையைக் காட்டுவது, வறுமையை வெளிப்படுத்துவது என்னும் நிலையிலும் உள்ளுறை சிறப்பித்துக் கூற வரும்.

1. **சினம்** : எமக்கு நீ யாரை (கலித்.88:3) நீ எனக்கு என்ன உறவுடையவன்? எனத் தன்னைப் பிரிந்த தலைவனிடம் தலைவி சினத்தோடு கூறினாலும் இச்சினம் காதலின் சிறப்பை வெளிப்படுத்தும்.

2. **பேதைமை** : பொய்யாதல் யான் யாங்கு அறிகோ (கலித் 10:3) தலைவனை நம்பியதையும் அவன் பொய்யன் என்பதையும் அறிந்ததாகப் பேதைமையுடன் கூறியதால் பிரிவாற்றாமையைச் சிறப்பிக்கிறது எனலாம்.

3. **நிம்பிரி:** மகன் அல்லை மன்ற இனி (கலித். 19:6) பிரிய எண்ணுபவனை நீ ஆண்மகன் அல்லன் என வெறுப்போடு கூறுவதும் காதலைச் சிறப்பிக்கக் கூறுவதாகும்.

4. **நல்குரவு:** தலைவியைப் பிரிந்தால் தலைவன ஏழ்மைப் படுவான் என்பதை, ஓர் ஆன் வல்சிச் சீர்இல் வாழ்க்கை (குறுந். 295:4) என்னும் அடி உணர்த்தும் ஒரு பசுவை மட்டும் உடையவனாகிப் பகற் சோறு இல்லாதவனாகி விடுவான் எனத் தலைவனைச் சிறப்பிக்க வந்தது.

**உள்ளுறை, இறைச்சி வேறுபாடுகள்**

| **உள்ளுறை** | **இறைச்சி** |
|---|---|
| 1. இயங்குதிணை, நிலைத்திணைக் கருப்பொருளை இடமாகக் கொண்டு பிறக்கும். | 1. இயங்குதிணைக் கருப்பொருள் களை மட்டும் இடமாகக் கொண்டு பிறக்கும். |
| 2. குறிஞ்சி, மருதம், நெய்தல் | 2. முல்லை, பாலைப் பாடல்களில் |

| | |
|---|---|
| பாடல்களில் மிகுதியாகக் இடம் பெறும். | மிகுதியாக இடம் பெறும். |
| 3. பெரும்பாலும் தலைவன் நாட்டு வருணணையாகவும் வரும். | 3. பெரும்பாலும் செல்லும் வழியில் காணப்பெறும் இயங்குதிணைப் பொருளைக் குறித்து வரும். |
| 4. தலைவனைக் குற்றம் சாட்டுவ தாகவும் குறை கூறுவதாகவும் திருத்துவதாகவும் அமையும். | 4. இயங்குதிணைக் கருப்பொருள்- களின் காதலை வெளிப் படுத்துவதன்வழிக் காதலர் உணர்வை மிகுவிப்பதாகவும் அமையும். |
| 5. சொல்லொடு முடிவுகொள் இயற்கை புல்லிய கிளவிகள் அமைந்த தொடராகும். | 5. குறிப்போடு முடிவு கொள்ள இயற்கை புல்லிய கிளவிகள் அமைந்து தொடராகும். |

(சங்கத்தமிழ்க் குறிப்புப் பொருள், ப.162)

**அன்னை, என்னை**

**242.** **அன்னை என்னை என்றலும் உளவே**

**தால்நெறி முறைமை சொல்லினும் எழுத்தினும்**

**தோன்றா மரபின என்மனார் பலவர்.**

தலைவியும் தோழியும் ஒருவரை ஒருவர் தாய் என்னும் பொருளில் அன்னை என் என்று அழைத்துக் கொள்வதும் தலைவியும் தோழியும் தலைவனை என் தலைவன்

என்னும் பொருளில் என்னை என்று அழைத்துக் கொள்வதும் இலக்கணம் ஆகாத உலக வழக்குகளாகும்.

**243. ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா**
**கற்பும் ஏரும் எழிலும் என்றா**
**சாயலும் நாணும் மடனும் என்றா**
**நோயும் வேட்கையும் நுகர்வும் என்றாங்கு**
**ஆவயின் வரூஉம் கிளவி எல்லாம்**
**நாட்டிய மரபின நெஞ்சுகொளின் அல்லது**
**காட்டல் ஆகாப் பொருள என்ப.**

இந்நூற்பாவில் கண்ணால் காண முடியாத அருவப் பொருள்களாகத் குறிப்பிடுகின்றார். தொல்காப்பியர் பன்னிரண்டைக்

| | | | |
|---|---|---|---|
| 1. ஒப்ப | 2. உரு | 3. வெறுப்பு | 4. கற்பு |
| 5. ஏர் | 6. எழில் | 7. சாயல் | 8. நாண் |
| 9. மடன் | 10. நோய் | 11. வேட்கை | 12. நுகர்வு |

1. **ஒப்பு:** தந்தையை ஒத்திருப்பான் மகன் என்பதாகும். இவ்வாறு ஒப்புமை எனக் காட்ட முடியாவிட்டாலும் மற்றவரை விடத் தந்தையும் மகனும் பலவற்றில் ஒத்திருத்தல்.
2. **உரு:** கண்ணால் காணமுடியாத ஒன்றை மனதிற் கண்டு ஏற்படும் நிகழ்வுத் தன்மையாகும். உட்கு எனப்படும் நாணம், மகிழ்ச்சி, மதிப்பு முதலியன தோன்றுதல்.
3. **வெறுப்பு:** பிறர் அறியாதவாறு மனதிற்குள் தோன்றுவதை அடக்கி வைத்துக்

கொள்ளக் கூடிய ஒரு வகையான இயல்ப்பு செறிவு எனப்படும்.

4. **கற்பு:** தன்னை மனைவியாக யாக அடைந்தவனை மேம்பட்டவனகாவும் சிறந்தவனாகவும் எண்ணி அவனை விட உயர்ந்த தெய்வம் இல்லை என மனதால் உணர்தல்.

5. **ஏர்:** தளிர்களில் காணப்படும் ஒரு பொலிவைப் போல உடலிலுள்ள எல்லா உறுப்புகளிலும் அழகு மிளிர்ந்து பார்ப்பவர்க்கு இன்பம் தரவல்ல தோற்றத்தை வெளிப்படுத்தல்.

6. **எழில்:** உடலில் உள்ள உறுப்புகள் தேவையான இடத்தில் கூடியும் குறைந்தும் நிமிர்ந்தும் தாழ்ந்தும் காண்போருக்கு அழகை உண்டாக்குதல்.

7. **சாயல்:** சாயல் என்பது எழிலான தோற்றமாகும். நாயும் பன்றியும் போல் அல்லாமல் மயிலும் குயிலும் போல அமைந்திருக்கும் ஓர் அழகாகும்.

8. **நாண்:** பேச வேண்டிய இடத்தும் செய்ய வேண்டிய இடத்தும் எண்ண வேண்டிய இடத்தும் அவ்வாறு செய்யாமல் இருக்கும் வெளிக்காட்ட முடியாத ஓர் இயல்பு.

9. **மடன்:** மடனும் பிறருக்குக் காட்டலாகா மன உணர்வாகும். குறிப்பாகப் பெண்டிர்க்கு உரிய உணர்வு கேட்பவற்றால் வரக்கூடிய ஒரு நிலையாகும்.

10. **நோய்:** நோய் என்பது மனதளவில் ஏற்பட்டுள்ள துன்பத்தினை இ∴து இத்தன்மையது எனக் காட்ட இயலாத அளவில் உள்ள ஒன்றாகும்.

11. **வேட்கை:** வேட்கை என்பது ஒன்றைப் பெறவேண்டும் என மனதிற்குள் தோன்றும் ஒரு கிளர்ச்சியாகும். விளக்கும் வகையில் உள்ள எதனையும் காட்ட இயலாது.

12. **நுகர்ச்சி:** நுகர்ச்சி என்பது கிடைத்த ஒன்றை ஐம்பொறிகளாலும் மனத்தாலும் நுகர்வதாகும்.

மேலே குறிக்கப்பட்டவை முழுமையாகக் கண்ணால் காட்ட முடியாத வகையில் மனதால் உணரத் தக்கவை ஆகும்.

**அருவப் பொருள்**

**244. இமையோர் தேஎத்தும் எறிகடல் வரைப்பினும்**

**அவையில் காலம் இன்மை யான.**

மேலே குறிக்கப்பட்டுள்ள உணர்வுடன் தொடர்புடைய அருவப் பொருட்கள் கண்ணுக்குப் புலப்படா விட்டாலும் தேவர் உலகிலும் கடல் சூழ்ந்த இவ்வுலகத்திலும் உள்ள பொருளாகவே கொள்ள வேண்டும்.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | வரைவுகடாதல் என்பதை விளக்குக. | K3 | CO5 | PO4 |
| 2 | பொருளின் தேவை குறித்து எழுதுக. | K4 | CO1 | PO2 |
| 3 | பாட்டுக்கு அடிப்படையானவை யாவை? | K6 | CO4 | PO1 |
| 4 | ஒருவரின் உரிமைப் பொருள்கள் யாவை? | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | K2 | CO5 | PO2 |
| 5 | ஒரு பால் எல்லாப் பாலுக்கும் வருவது குறித்து எழுதுக. | K2 | CO2 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | பரத்தையர் பிரிவுக்கான வாயிலோர் யாவர்? | K4 | CO1 | PO4 |
| 2 | உடன்போக்கும் திருமணக்குறிப்பும் குறித்து எழுதுக. | K3 | CO4 | PO5 |
| 3 | வருத்தம், பணிதல், புகழ்தல் குறித்து எழுதுக. | k1 | CO4 | PO2 |
| 4 | இறைச்சி என்றால் என்ன? சான்றுடன் விளக்குக. | K5 | CO5 | PO1 |
| 5 | தலைவி பரத்தையைப் பாராட்டுவது குறித்து எழுதுக | K3 | CO3 | PO3 |


**சு.பேச்சியம்மாள்,**

தமிழியல் துறை,

உதவிப் பேராசிரியர்,

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி,


| Text books | |
|---|---|
| | தொல்காப்பியம்பொருளதிகாரம், நச்சினார்க்கினியர்உரை, திருநெல்வேலிதென்னிந்திய சைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி. |
| | பொருளதிகாரம், இளம்பூரணர்உரை, சைவசித்தாந்தநூற்பதிப்புக்கழகம் , சென்னை |
| | தொல்காப்பியம் - பொருளதிகாரம் 3 தொகுதிகள், பாவலர்சா. பாலசுந்தரம், தாமரைவெளியீட்டகம், தஞ்சாவூர் |
| **Reference Books** | |
| | தொல்காப்பியம் -விளக்கவுரை - முனைவர்ச.வே.சுப்பிரமணியன்.சோம.இளவரசு -மணிவாசகர்பதிப்பகம் |

| | |
|---|---|
| | தொல்காப்பியம் - பொருளதிகாரம் – க .வெள்ளைவாரணனார் - மாணவர்பதிப்பகம், தியாகராயநகர்சென்னை - முதற்பதிப்பு 2017. |
| | பொருளதிகாரஉரை-உலகத்தமிழ்ஆராய்ச்சிநிறுவனம், சென்னை |
| | தமிழ்க்காதல்-வ.சுப.மாணிக்கம், மணிவாசகர்நூலகம், சென்னை-01 |
| | அகத்திணைக்கோட்பாடுகள்- தமிழ்ஆராய்ச்சிநிறுவனம், சென்னை |
| | தொல்காப்பியம்செய்யுளியல்உரைவளம் - க .வெள்ளைவாரணனார், பதிப்புத்துறை, மதுரைகாமராசர்பல்கலைக்கழகம், 1989. |
| | ‘தொல்காப்பியஇலக்கியக்கோட்பாடுகள் (கருத்தரங்கக்கட்டுரைகள்), 1998. சே. ஜீன்லாரன்ஸ்,. கு. பகவதி (பதிப்பாசிரியார்) உலகத்தமிழாராய்ச்சிநிறுவனம், சென்னை. |
| | தொல்காப்பியக்கவிதையியல், 1999. சு. அகத்தியலிங்கம், மணிவாசகர்பதிப்பகம், சென்னை. |
| | , தொல்காப்பியப்பொருளதிகாரஆராய்ச்சி, மு. இராகவையங்கார்தமிழ்ச்சங்கவித்தியாலயம், மதுரை, 1979. |
| | பழந்தமிழர் நாகரிகம் அல்லதுகருத்து,கா.சுப்பிரமணியபிள்ளை.கழகவெளியீடு, சென்னை. |
| | பண்டைத்தமிழர்போர்நெறிபுலவர் ,கா.கோவிந்தன்,கௌராபதிப்பகம், சென்னை. மு.ப.2011. |
| | அற்றைநாட்காதலும்வீரமும், க.ப. அறவாணன், மெய்யப்பன்தமிழாய்வகம்,சிதம்பரம், 2002. |
| | தொல்காப்பியர்காலத்தமிழர், புலவர்குழந்தை, பூம்புகார்பதிப்பகம், சென்னை, 2007. |
| | தொல்காப்பியம் - பொருட்படலம்புறத்திணையியல், 1942. சு. சோமசுந்தரபாரதியார், |

**Related Online Contents [MOOC, SWAYAM, NPTEL, Websites etc.]**

**Web Sources**

- **Tamil Heritage Foundation- www.tamilheritage.org <http://www.tamilheritage.org>**
- **Tamil virtual University Library- www.tamilvu.org/ library http://www.virtualvu.org/library**
- **Project Madurai - www.projectmadurai.org.**
- **Chennai Library- www.chennailibrary.com <http://www.chennailibrary.com>.**
- **Tamil Universal Digital Library- www.ulib.prg <http://www.ulib.prg>.**
- **Tamil E-Books Downloads- tamilebooksdownloads. blogspot.com**
- **Tamil Books on line- books.tamil cube.com**
- **Catalogue of the Tamil books in the Library of British Congress archive.org**

- **Tamil novels on line - books.tamilcube.com**

**Strong -3,Medium-2,Low-1**

| Expected Course Outcomes | | |
|---|---|---|
| On the Sucessful completion of the Course,Studentswill be able to | | |
| இப்பாடத்தைக்கற்பதால்பின்வரும்பயன்களைமாணவர்அடைவர். | | |
| CO 1 | **அகம்புறம்என்னும்இலக்கணமரபைஅறிதல்.** | K2 |
| CO 2 | **பழந்தமிழரின்வரையறுக்கப்பட்டவாழ்வியல்முறையைஅறிந்துகொள்ளுதல்** | K2 |
| CO 3 | **அறம், மறம்என்றஇரண்டிற்கும்இல்லறவாழ்வுஇன்றியமையாததாகஅமைதலை அறிந்துகொள்ளுதல்.** | K4 |
| CO 4 | **வாழ்வியல்விழுமியங்களைக்கற்றுமரபைப்போற்றுவதன்வாயிலாகப்பண்பட்டசமூகம்அமையும்என்பதைஅறிதல்** | K3 |
| CO 5 | **சமூகத்தில்குடும்பம்என்றஅமைப்புமுறையில்உள்ளதவிர்க்கஇயலாதகூறுகளைஅடையாளம்காணுதல்.** | K1, K5 |
| K1 - Remember; K2 - Undestand; K3 - Apply; K4 - Analyze; K5 - Evaluate; K6 - Create | | |

| | **PO 1** | **PO 2** | **PO 3** | **PO 4** | **PO 5** | **PO 6** | **PO 7** | **PO 8** | **PO 9** | **PO 10** | **PSO 1** | **PSO 2** |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **CLO1** | **1** | **3** | 2 | 3 | 2 | 2 | 2 | 2 | 2 | **3** | **3** | 3 |
| **CLO2** | 3 | 2 | 3 | 2 | **3** | 3 | 2 | **3** | 3 | 2 | 3 | **1** |
| **CLO3** | **3** | 2 | 3 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 3 | 2 | **3** |
| **CLO4** | **3** | 3 | 3 | 2 | 3 | 2 | 2 | 3 | 2 | 3 | 2 | **2** |
| **CLO5** | 3 | 3 | 2 | 3 | 2 | 3 | 3 | 2 | 3 | 2 | 3 | 2 |